

நாம் பிறந்த மண்
சிறு கதைகள்
மணிமேகலைப் பிரசுரம்
டாக்டர்.
ச. முருகானந்தன்

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | நாம் பிறந்த மண் |
| ஆசிரியர் | ச. முருகானந்தன் |
| மொழி | தமிழ் |
| முதற் பதிப்பு | 2007 |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | 208 |
| நூலின் விலை | ரூ. 60.00 |
| அட்டைப்பட ஓவியம் | ராம்கி |
| லேசர் வடிவமைப்பு | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | தையல் |
| வெளியிட்டோர் | மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 17. |

கலை ஒளி வெளியீடு - 12

# சமர்ப்பணம்



கடமை நேரத்தில் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகி, என் தங்கையை குறுகிய காலத்தில் இளம் விதவையாக்கிச் சென்ற என் அன்பு மைத்துனர் **வீரசிங்கம் தயாளசிங்கம்** அவர்களுக்கும், இக் கொடூர யுத்தத்தில் அநியாயமாகப் பலியான அனைவருக்கும்.

**அனுசரணை ஈ. லோகேஸ்வரன்**

(வன்னேரி / லண்டன்)

# ஆசிரியரின் நூல்கள்

## சிறுகதை

1. மீன்குஞ்சுகள்
2. தரை மீன்கள்
3. இது எங்கள் தேசம்
4. இனி வானம் வசப்படும்
5. ஒரு மணமகளைத் தேடி
6. தேயிலைப் பெண் (அச்சில்)
7. நாம் பிறந்த மண்

## குறுநாவல்

1. அது ஓர் அழகிய நிலாக்காலம்
2. நெருப்பாறு
3. முற்றத்து மல்லிகை (அச்சில்)

## கட்டுரை

1. நாளை நமதே

## கவிதை

1. நீ நடந்த பாதையிலே
2. இரவில் ஒளிரும் சூரியன்
3. துளிர்த்தெழும் புதுச்செடிகள்


## மருத்துவம்

1. எயிட்ஸ் இல்லாத உலகை நோக்கி...

# என்னுரை

இது எனது ஆறாவது சிறுகதைத் தொகுதி. மணிமேகலைப் பிரசுரம் வெளியிடும் மூன்றாவது சிறுகதைத் தொகுதி. இதுவரை வெளிவந்த தொகுதிகளுக்கு வாசகர்கள் அளித்த வரவேற்பு உற்சாகமளிக்கிறது. எனது முதலாவது சிறுகதைத் தொகுதியில் சமூகப் பிரச்சினைகள் அதிகம் அணுகப்பட்டிருந்தது. சாதியம், சீதனம், பெண் விடுதலை, வர்க்கமுரண்பாடுகள், ஏழ்மையும் வேலையில்லாத் திண்டாட்டமும், வர்க்கமுரண்பாடுகள், மனித உணர்வூற்றுகள் என பல விடயங்களைத் தொட்டிருந்தேன்.

பத்து வருடங்களின் பின்னர் வந்து எனது இரண்டாவது தொகுதி முற்றிலும் மாறுபட்டு சமகால எரியும் பிரச்சினையான யுத்தக் கொடுமைகள் பற்றி அதிகம் பேசியது. அடுத்து வந்த தொகுதிகளிலும் சமகாலப் பிரச்சினைகள் முனைப்புப் பெற்றிருந்தன. தற்போது வெளிவரும் இந்தத் தொகுதியில் சமகாலப் பிரச்சினை உட்பட பல விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு கதைகள் படைத்துள்ளேன். எனது அடுத்த



தொகுதியான தேயிலைப் பெண், மலையகத்தின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் பற்றி பேசுவனவாக அமைந்திருக்கும்.

நாம் எதற்காக எழுதுகிறோம் என்று சிந்தித்தால் அதற்கான பதிலை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்வர். எழுத்தின் மூலம் சமூகச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரமுடியும் என ஆரம்பத்தில் நிறையவே நம்பியவன் நான். ஆனால் இன்றைய உலக நடப்புகளைப் பார்க்கும்போது என் எண்ணத்தை மீள் பரிசீலனைச் செய்ய வேண்டியுள்ளது. எழுத்தினால் முற்று முழுதான சமூகச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருதல் என்பது அசாத்தியமே! எனினும் வினைத்திறன் மிக்க எழுத்துக்களின் வகிபங்கை முற்று முழுதாகப் புறம் தள்ளிவிடவும் முடியாது. சமூக முன்னேற்றத்திற்கான கூட்டுப் பங்களிப்பில் எழுத்துக்கும் ஒரு பங்குண்டு. அவ்வளவுதான்.

நாம் ஏன் எழுதுகிறோம் என்றால், நம்மால் எழுத முடியாதிருக்கிறது என்பது தான் உண்மையான காரணம். எமது மனதின் அவசங்களுக்கான ஒரு வடிகால் தான் எழுத்தும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான வடிகாலைத் தேடுவதுபோல், எழுத்துவன்மை உள்ளவர்கள் இலக்கியத்தை வடிகாலாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். எமது மனதிலுள்ள ஆயிரம் ஆயிரம் கற்பனைகளில் ஒரு சிலவே நிஜ வடிவம் பெறுகின்றன. ஏனையவற்றை கதை, கவிதைகளில் கலைகளில் தான் தரிசித்து அனுபவிக்கிறோம். அல்லது எழுத்தில் வடித்து ஒரு வித தேறுதலைப் பெறுகிறோம். இதனாலேயே சிலர் எழுதுகிறார்கள். இன்னும் சிலர் தமது மனதைத் தாக்கும் விடயங்கள், அவற்றின் எதிர்த் தாக்கங்கள் என்பவற்றை இலக்கியமாக்குகின்றார்கள்.

இலக்கியத்தின் வேறு பயன்பாடுகளை நோக்குவோமாயின் காலத்தின் பதிவாக இலக்கியம் பயன்படுகிறது. சில மறைக்கப்பட்டுள்ளன. உண்மைகளை இலக்கியத்தால் வெளிக்கொணர முடிகிறது. இதனால் சில எழுத்தாளர்கள் பாதிப்புக்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும் கூட உள்ளாகின்றார்கள். யுத்த பூமியில் உயிரையும் இழக்கிறார்கள். இலங்கை எழுத்தாளர்களில் கலா பரமேஸ்வரன், ரஜனி திரணகம, காவலூர் ஜெகநாதன் வரிசையில் அண்மைக் காலத்தில் பலியானவர்களில் பொன் கணேசமூர்த்தியும், சந்திரபோஸ் சுதாகரும் அடங்குவர். ஊடகவியலாளர்களின் நிலையோ இன்னும் ஒரு படி மேலான அபாயத்தை எதிர்கொள்வதாயுள்ளது.

பொதுவாக என் கதைகள் பக்கம் சாராமல் நிகழ்கால உண்மைகளை விழிப்புடனும் அக்கறையுடன் கையாள்கின்றன. என் மனதை உறுத்திய சம்பவங்களே பல எனது கதைகளின் கருப்பொருளாயின. எனினும் பலவற்றை மிக அவதானத்துடனேயே கையாண்டுள்ளேன். சமூகத்தின் ஈனநிலை கண்டு என் மனது எப்போதும் துடிதுடிக்கும். கொடுமை புரிவோரின் மீது ஆத்திரம் கொப்பளிக்கும். எனது துடிப்பு, ஆத்திரம், உறுத்தல், அங்கலாய்ப்பு, மனவருத்தம் எல்லாம் முனைப்புடன் கதைகளாகின்றன. துன்பப்பட்ட மக்களுடன் உடனிருக்கும் ஒருவன் என்ற வகையில் அவர்களது துயரமும், இழப்பும், முனகலும், முணுமுணுப்பும் என் கதைகளில் அடிநாதமாக ஒலிக்கின்றன.

எனது கதைகள் சிலவற்றைப் படித்த நண்பர்கள் என் மீது கொண்ட அக்கறையினால் என்னை அச்சுறுத்தி ஆலோசனைகளைக் கூறியதுண்டு. அவர்களின்

ஆலோசனைகளிலுள்ள யதார்த்தத்தை உணர முடிந்தபோதும், அதனையும் மீறி என் பேனா சுயமாக எழுதிய சந்தர்ப்பங்களுமுண்டு.

எந்த அவலங்களைக் கண்டித்து கதைகள் படைத்தேனோ, எந்த அரசின் செயற்பாடுக் குறைபட்டுக் கொண்டேனோ, அதன் முக்கிய அமைப்புகளில் ஒன்றான தேசிய சாகித்திய மண்டலம் எனது யுத்த கொடூரங்களை ஊக்கவே பேசிய சிறுகதைத் தொகுதியான 'தரைமீன்கள்' சிறுகதைத் தொகுதிக்கு விருது வழங்கியபோது பெருமிதம் அடைந்தேன்.

இன்று பாதைகள் மூடப்பட்டு, ஊடகவியலாளர்களும் மறுக்கப்பட்டு, மூடுண்ட பிரதேசமொன்றின் அவலமான வாழ்க்கையை அல்லது மறந்து போய்விடக்கூடிய இழப்புகளை முழுதாகக் கிண்டிக் கிளறி பதிவு செய்வதாய், எமது வரலாற்றின் உண்மை நிலையை ஓரளவுக்காவது எதிர்கால சந்ததி, இங்கும், புலம் பெயர் நாடுகளிலும் அறிந்து கொள்வதற்கான ஆவணமாகவும் என் படைப்புக்கள் பங்காற்றும்.

இனங்களிடையேயான பூசல் நேசபூர்வமாகி பிரச்சினைகள் எந்த விலை கொடுத்தாவது தீர்க்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான ஆர்வம் எனக்கு உண்டு. கூட்டுக் குடும்பமாகவாயினும், அடுத்த வீட்டுக்காரராகவாயினும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே வேணவா.

இந்தத் தொகுதியிலுள்ள கதைகளில் நாம் பிறந்த மண், சிதைவுகள், நான் சாகமாட்டன் ஆகிய கதைகள் மட்டுமே யுத்த அவலங்கள் பற்றிப் பேசுகின்றன. இனி எல்லாம் சுகமே,

சின்னச் சின்ன தூறல், இவள், உறவுகள் என்பன குடும்ப உறவுகளில் ஏற்படும் சிக்கல்களை அணுகியுள்ளன. அஸ்தமனத்தில் ஓர் உதயம், உறவுகள் என்பன ஆழிப்பேரலை அவலப் பின்னணியில் எழுதப்பட்டுள்ளன. நீலம் என்பது நிறமல்ல, மரண ஓசை என்பன பாலியல் பிறழ்வுகளினால் ஏற்படும் அவலங்களைக் கூறுகின்றன. இதோ எந்தன் காதலி, இன்னொரு தேவதாஸ் ஆகியன காதலுடன் தொடர்புடைய கதைகள். பூவைக்குள் பூகம்பம் - பாலியல் விவகாரங்களை அலசும் கதை. அஸ்தமனத்தில் ஓர் உதயமும் விதவா திருமணத்தை ஆதரிக்கும் கதை. ஏழையின் சிரிப்பில் - முதியோர் அவலத்தையும் மனிதாபிமானத்தையும் பேசுகின்ற கதை. அன்னை - தாய்ப் பாசத்தையும் யுத்த அவலங்களையும் தொட்டு நிற்கிறது. வீடு சிறுகதை மலையகப் பெருந்தோட்ட மக்களின் வாழ்வு அவலத்தைக் கூறுகிறது.

எனது கதைகளைப் பிரசுரித்த பத்திரிகை சஞ்சிகைகளுக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை, இந்திய, சர்வதேச சஞ்சிகைகள் இதில் அடங்கும்.

படைக்கும் வரையே கதைகள் எனது. இனி இவை உங்களது!

**Dr. ச. முருகானந்தன்**

கரணவாய் கிழக்கு
கரவெட்டி



## மண்ணின் வாழ்வைச் சொல்லும் வலிமை மிக்க படைப்பாளி!

ச. முருகானந்தன் என்ற படைப்பாளி பற்றிப் பேசும் போது அவருடைய சமுக நேசிப்பின் தன்மை பற்றியும் பேச வேண்டிய தேவை ஏற்படுகிறது. போர் சூழ்ந்திருந்த வன்னிப் பிரதேசத்தில் அதுவும் பின் தங்கிய ஒரு காட்டுக் கிராமத்தில் மருத்துவராகக் கால் நூற்றாண்டு காலம் பணி புரிவதென்பது சாதாரண விடயமல்ல. ஒரு மருத்துவர் என்ற ரீதியில் இவர் அன்றாடம் சந்திக்கும் மக்கள் மிக ஏழ்மையானவர்கள். வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கும் மனிதர்கள். இந்த மக்களுக்கான பணியை எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் மிகுந்த அர்ப்பணிப்போடு செய்து வருபவர் இவர். இந்தப் பணிதான் இலக்கியம் எழுதும் இவரது பேனாவுக்கு மையாக ஊற்றெடுத்திருக்கிறது. இந்த மனிதர்களுடைய பிரச்சினைகள் இவருக்குள் இருக்கும் மனித நேயத்தை அசைக்கும் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு படைப்பு இவரிடமிருந்து பிறந்திருக்கிறது.

இவர் தனது 'தரை மீன்கள்' சிறுகதைத் தொகுதியில் குறிப்பிடுகிறார்; 'ஒரு கதாசிரியனுக்குச்

சமுதாயப் பொறுப்புக்களும், அழகியல் உணர்வை மேம்படுத்தும் கடமைகளும் உண்டு. தான் வாழ்கின்ற சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் போலித்தனங்களையும், பிற்போக்குச் சிந்தனைகளையும் முறியடித்து சமூக அபிவிருத்தியில் சரியான பாதையை ஏற்படுத்தி மானிட வாழ்வை நெறிப்படுத்திட முடியும் என்ற நம்பிக்கையுடன் கலை இலக்கியவாதிகள் பேனா ஏந்திட வேண்டும் என்று உணர்ந்து, எனது படைப்புகளில் ஜனரஞ்சகமாகச் சமூக சீர்திருத்த முயற்சிகளை முன் வைத்துள்ளேன்.'

இவரது இந்த வார்த்தைகள் படைப்பாக்க முயற்சியில் இவருக்குள்ள தெளிவையே பிரதிபலிக்கிறது. ஒரு படைப்பாளியின் நோக்கு எத்தகையது என்பதை அறியுமிடத்து அவனது படைப்புகளின் தன்மையைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

கடந்த பல வருடங்களாகப் போரின் நெருக்கடிக்குள் சிக்கியிருந்த ஒரு பிரதேசத்தில் மருத்துவராகவும், படைப்பாளியாகவும் இரண்டு துறைகளிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தி வருபவர் இவர். வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இருந்தும் இவரது எழுத்துத் துறைக்கு அதிக களம் அமைத்துக் கொடுத்தது வன்னி மண்தான். வன்னி மக்களின் யதார்த்தமான வாழ்வு பற்றியே இவரது அநேகமான கதைகள் பேசியிருக்கின்றன. மூச்சு விட நேரமில்லாத மருத்துவப் பணியின் மத்தியிலும் தனது எழுத்துப் பணியை ஒரு தவம் போல மேற்கொள்பவர் இவர்.

கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடம் ஆகியவற்றின் பழைய மாணவர். மாணவராக இருக்கும் போதே எழுத்துத் துறையிலும் ஆர்வம் ஏற்பட, 1976-ல் தினகரன் பத்திரிகையில்

தனது முதலாவது சிறுகதையை எழுதினார். அன்றிலிருந்து இன்றுவரை 200 சிறுகதைகள், 10 குறுநாவல்கள், 200 கவிதைகள், பல மருத்துவ, விமர்சன, அறிவியல் கட்டுரைகள் இவரால் எழுதப்பட்டிருக்கின்றன. பல்கலைக் கழக மாணவனாக இருந்தபோது இவர் எழுதிய 'மீன் குஞ்சுகள்' சிறுகதை சென்னை இலக்கிய சிந்தனை பரிசு பெற்றது. தரமான சிறுகதை என இது தமிழகத்தில் அங்கீகாரம் பெற்றுக் கொண்டது. இச்சிறுகதை இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது.

இவரது படைப்புகள் இலங்கையில் வெளியான அநேக சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியாயிருக்கின்றன. இவை தவிர தமிழகத்தின் தரமான இலக்கிய ஏடுகளான தாமரை, கணையாழி, தீபம் என்பனவற்றிலும் இவரது எழுத்துக்கள் களம் கண்டிருக்கின்றன. 'மல்லிகையில் எழுத ஆரம்பித்த பின்னர் தான் நான் முதிர்ச்சி அடைந்தேன். தொடர்ந்து எழுத வாய்ப்புத் தந்து டொமினிக் ஜீவா என்னை வளர்த்தெடுத்தார்' என மனம் திறந்து இவர் சொல்வதுண்டு. மல்லிகைப் பண்ணையில் வளர்ந்தவன் என்ற பெருமையும் இவருக்குண்டு.

பிரச்சினைகளும் துன்பங்களும் நிறைந்திருக்கும் நடைமுறை வாழ்வையே தனது படைப்புலகமாகக் கொண்டிருப்பவர் இவர். இவருடைய ஆரம்ப காலச் சிறுகதைகள் சமூகத்தில் எப்போதும் இருக்கக் கூடிய சாதியம், சீதனம், பெண்ணியம், வர்க்க முரண்பாடுகள், மனித மனங்களின் சிக்கலான உணர்வுப் போராட்டங்கள் என்பவற்றைக் கருப்பொருட்களாகக் கொண்டு எழுதப்பட்டவை. கால மாற்றத்தினால் போரும் அதன் அழிவுகளும் இந்த மண்ணில் முனைப்புப் பெற்றபோது அந்த அவலங்களே இவரது பிந்திய கதைகளின்

கருப்பொருள்களாயின. அந்த அழிவுகளின் துயரங்களை இயல்பாக இவர் வெளிக்கொண்டு வந்ததற்கு, இவரும் அதே துன்பங்களுக்கு மத்தியிலேயே வாழ்வதையும் ஒரு காரணமாகக் கொள்ள முடிகிறது.

எல்லா வாசல்களும் மூடப்பட்ட நிலையில் மூச்சடங்கிப் போயிருந்த வன்னி மக்களின் துயரச் சுமைகளை வாழ்வுக்கான வலி மிகுந்த போராட்டங்களைத் தனது கதைகள் மூலம் வெளியுலகிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தவர் இவர். இந்த இடப்பெயர்வுக் காலத்தில் மிக அதிகளவு படைப்புக்களை எழுதியிருக்கும் படைப்பாளி என இவரைக் குறிப்பிட்டுச் சொல்லும் அதே சமயம் அந்த எழுத்துக்களில் கனதியும் தரமும் நிறைவாக உள்ளமையையும் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

ஒரு படைப்பாளியின் படைப்புக்கள் நூல் வடிவில் வரும்போதுதான் காலத்தின் பதிவுகளாய் ஆவணப்படுத்தப் பட்டு நிலைத்து நிற்க வாய்ப்புக் கிட்டுகின்றது. அந்த வகையில் இவரது 10 நூல்கள் இதுவரை வெளியாகியிருக்கின்றன. தரைமீன்கள், மீன் குஞ்சுகள், இது எங்கள் தேசம், இனி வானம் வசப்படும், ஒரு மணமகளைத் தேடி எனும் 5 சிறுகதைத் தொகுதிகளுடன் 'நீ நடந்த பாதையிலே' எனும் கவிதைத் தொகுதியும், உற்சாகக் கட்டுரைகள் அடங்கிய 'நாளை நமதே' என்ற நூலுமாக 7 நூல்கள். 3 குறுநாவல்கள்.

சிறுகதைகள், கவிதைகளுக்காக 24 தடவைகள் இவர் பரிசு பெற்றிருக்கிறார். 2004-ம் வருடம் சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான அரச சாஹித்திய விருது இவரது 'தரை மீன்களு'க்குக் கிடைத்திருக்கிறது.

ஒரு படைப்பாளி, ஒரு வைத்தியர் என்பதற்கும் அப்பால் ஒரு மனித நேயம் மிக்கவராய்ப் பல சமூக சேவைகள்

மூலம் தன்னை அடையாளம் காட்டுபவர் இவர். கிளிநொச்சி தமிழ்ச் சங்கம், கிளிநொச்சி நெஞ்சிலுவைச் சங்கம், யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம், வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் ஆகியனவற்றில் பொறுப்பான பதவிகளை வகித்தவர். வன்னேரிக்குளத்தில் இயங்கிய முதியோர் இல்லத்தில் இவர் வழங்கிய மனிதாபிமான சேவையை அங்குள்ள முதியவர்கள் மகிழ்வோடு குறிப்பிடுவதுண்டு. இந்த மனித நேயமே இவரை நல்லதொரு படைப்பாளியாகத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

"மானுட நேயத்துடன் தான் சார்ந்திருக்கும் சமூகத்தைப் பீடித்திருக்கும் பிணிகளுக்கு வைத்தியம் செய்வது மட்டுமல்லாமல் அச்சமூக வளர்ச்சியின் ஊட்டசக்தியாகத் திகழும் கருத்துக்களையும் வழங்கும் ஒரு வலுமிக்க பேனா இவருடையது" என்று இவரது கதைகள் பற்றி மேமன்கவி குறிப்பிட்டிருப்பது முற்றிலும் சரியானது. இவருடைய பேனாவிலிருந்து உற்பத்தியாகும் நல்ல படைப்புகளை ஈழத்து இலக்கிய உலகம் உள்வாங்கக் காத்திருக்கிறது.

இது இவரது ஆறாவது சிறுகதைத் தொகுதி. இத்தொகுதியில் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. முன்னைய இவரது தொகுதிகள் போலன்றி, இத்தொகுதியில் யுத்த அவல சிறுகதைகள் மூன்று மாத்திரமே இடம் பெற்றுள்ளபோதிலும், அவை ஈழத்தமிழர் அனுபவிக்கும் கொடூரத்தையும், போராட வேண்டிய நிர்ப்பந்தத்தினையும் கூறி நிற்கின்றன. சிதைவுகள் கதையில் வரும் கீதா போன்ற எத்தனையோ பாடசாலை மாணவிகளும், பெண்களும் போரின் கொடுமையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 'பிறந்தமண்' சிறுகதையில் வரும் தேவகி போன்ற பல பொதுமக்கள் போராளிகளை ஆதரிக்கும் நிலையே இலங்கையில் உள்ளது. இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள 'நான் சாகமாட்டேன்' சிறுகதை சற்று

வித்தியாசமான கதை. பின் நவீனத்துவ வகையில் அடங்கும் இச்சிறுகதை நடக்கும் யுத்தத்தில் தமிழர்கள் - குறிப்பாக பத்திரிகையாளர்களும், எழுத்தாளர்களும் அனுபவிக்கும் கொடூரங்களை மனதைத் தொடும் வண்ணம் சித்தரித்துள்ளது.

'அன்னை' சிறுகதையில் தாய் பாசத்தினூடே சம கால யுத்த அவலமும் தரிசனமாகிறது. 'இனி எல்லாம் சுகமே' சாதாரண கதையாயினும், எழுத்தாளரின் எழுத்து வன்மையை எடுத்தியம்பும் கதை. சுனாமி அவல பின்னணியில் எழுதப்பட்டுள்ள உறவுகள், அஸ்தமனத்தில் ஓர் உதயம் என்பனவும் நல்ல கதைகள். விதவா திருமணம் ஏற்புடையது என்பதைக் கதையினூடே காட்டியுள்ளார். நீலம் என்பது நிறமல்ல, மரண ஓசை முதலான கதைகள் எழுத்தாளரின் சமூக அக்கறையைக் காட்டுகிறது. ஒரு மருத்துவர் என்ற வகையில் எயிட்ஸ் நோய் பற்றி பிரசார வாடையின்றி கூறியுள்ளார். ஏழையின் சிரிப்பில் சிறுகதையில் அல்லலுறும் முதியோர்கள் பால் இளைய தலைமுறையினரின் அக்கறையை ஈர்த்துள்ளார். வீடு இலங்கை மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் இந்தியவம்சாவளியினர் படும் அவலங்களைச் சித்தரிக்கும் கதை. இவள், சின்னச் சின்ன தூறல்கள், உறவுகள் முதலான கதைகளில் குடும்ப உறவுகளையும், பெண்ணிய அம்சங்களையும் உள்ளடக்கியிருக்கின்றார். பூவைக்குள் பூகம்பம் - பாலியல் பற்றிப் பேசும் கதை. இதோ எந்தன் காதலி, இன்னொரு தேவதாஸ் முதலான கதைகள் சாதாரண காதல் கதைகளாயினும், எழுத்தாளரின் எழுத்துத் திறனை எடுத்துக் காட்டும் கதைகள். மண்வாசனை மிக்க கதைகளை இவர் அதிகமாக எழுதவேண்டும்.

அன்புடன்

**தாமரைச் செல்வி**

பரந்தன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நாம் பிறந்த மண் | 17 |
| 2. | இனி எல்லாம் சுகமே | 26 |
| 3. | நீலம் என்பது நிறமல்ல | 40 |
| 4. | சின்ன சின்ன தூறல் | 51 |
| 5. | இதோ எந்தன் காதலி | 63 |
| 6. | அஸ்தமனத்தில் ஓர் உதயம் | 72 |
| 7. | ஏழையின் சிரிப்பில் | 85 |
| 8. | மரண ஓசை | 95 |
| 9. | பூவைக்குள் பூகம்பம் | 107 |
| 10. | சிதைவுகள் | 115 |
| 11. | இன்னொரு தேவதாஸ் | 124 |
| 12. | நான் சாகமாட்டேன் | 134 |
| 13. | உறவுகள் | 152 |
| 14. | இவள் | 168 |
| 15. | வீடு | 180 |
| 16. | அன்னை | 194 |

# நாம் பிறந்த மண்



தேவகிக்குத் தூக்கம் வரவில்லை. காலையிலிருந்தே வெறும் வயிறு. இது அவளுக்குப் புது அனுபவம் அல்ல. காலம் காலமாக அவ்வப்போது தலைதூக்குற தொடர் கதைதான்.

இன்று ஏனோ பசியைத் தாங்குவது கடினமாக இருந்தது. அருந்ததி - அவளது ஒரே மகள், உறக்கத்திலிருந்தாள். தான் பட்டினியில் கிடந்தாலும், இந்தப் பச்சை மண் பசி கிடக்கக் கூடாது. கிடந்தால் பொறுக்க முடியாது என்பதால் நேற்று குமார் கடையில் கடனாக வாங்கிய மாவில் எஞ்சியிருந்த ஒரு பிடியில் இடியப்பம் அவித்து சீனியுடன் ஊட்டியதில் அவளுக்கு நிம்மதி. சீனிப்பேணியைச் சுரண்டிக் கொட்டி தானும் ஒரு கோப்பைத் தேனீர் தயாரித்துக் குடித்ததோடு சரி.

இனி காலையில் தான் ஏதாவது முயற்சிக்க வேண்டும். தேவகி சாதாரண குடும்பத்தில் பிறந்தவளாயினும் பட்டினியின்றி பிறந்த வீட்டில் வாழ்ந்தவள். துரைராசனைக் கைபிடித்தபின் - அவனது அயராத உழைப்பின் அறுவடையில் அவளது காது கழுத்தை சிறிய பவுண் நகைகள் அலங்கரித்தன. ஒரு ராசாத்தியைப் போல் அவளைக் கவனித்த அன்புக் கணவனுக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து வறுமையிலும் செழுமையாக வாழ்ந்துவந்த அவளது வாழ்வு இவ்வளவு சீக்கிரத்தில் கருகிவிடும் என அவள் நினைத்தும் பார்த்திருக்கவில்லை.

காலன் கதவைத் தட்டிக் கொண்டு ஓரிரவில் வந்தான். குமரபுரம் இராணுவ சுற்றி வளைப்புக்குள்ளாக, வீடு வீடாகச் சோதனை நடத்தியபோது துரைராஜாவையும் அழைத்துச் சென்றார்கள். கைக்குழந்தையுடன் அவள் கதறியது அமைதி காக்கவென்று வந்த அந்நிய இராணுவத்திற்கோ, அடிவருடிகளாக வந்த மாற்றுக்குழுவுக்கோ கழிவிரக்கத்தை ஏற்படுத்தவில்லை.

போராட்டத்துடன் சம்பந்தம் எதுவுமில்லாத கணவனை விட்டுவிடுவார்கள் என்று அயலவர் கூறிய ஆறுதல் மொழிகள் பொய்யாகி...

மறுநாள் ஆஸ்பத்திரியில் துப்பாக்கி துளைத்த அவனது உடல் கிடப்பதாக அறிந்து... எல்லாமே ஒரு கனவுபோல் நிகழ்ந்துவிட்டது.

கணவனின் பிரிவு ஏற்படுத்திய சோகம் ஒரு புறம், கேள்விக்குறியான வாழ்க்கைப் பயணம் மறுபுறம். அவள்

தவித்தாள், காது, கழுத்து எல்லாம் வெற்றிடமாக, கையிலிருந்தவையும் சிதைய அவள் கூலி வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

கணவனின் உருவில் அருந்ததி. அவளை வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற இலட்சியம் தேவகியைத் தற்கொலையிலிருந்து தடுத்தது.

குத்தல், இடியல், களைபிடுங்கல், மிளகாய்ப்பழம் பறித்தல் என வேலைசெய்து பிள்ளையை வளர்த்து வந்தாள். பொருளாதாரத் தடையின் பின், விதைப்புக்கள் குறைந்து கூலி வேலையும் கிடைக்காமல்...

இப்போதெல்லாம் தொடர்வருமானம் எதுவும் இல்லாமல் நிவாரணத்தையே நம்பி காலத்தை ஓட்டி வந்தாள். அதுகூட அரைகுறையாக ஒழுங்கின்றி கிடைப்பதனால் பசியும், பட்டினியும் அவளுக்குப் பழக்கப்பட்டுவிட்டது.

தேவகிக்கு உறவென்று சொல்லிக் கொள்ள அயலில் யாரும் இல்லை!

ஒரு இளம் விதவையாக இருந்துகொண்டு மனக்கட்டுப்பாட்டுடன் வாழ்கின்ற சிரமம் ஒருபுறம் இருக்க, தனிமரமான அவளது இளமையில் குளிர்காய நினைக்கும் பெருச்சாளிகள் மறுபுறம் தொல்லையாய் இருந்தன. அவளுக்கு அழைப்புவிடுத்துக் காத்திருப்பதில் கடைக்காரக் குமாரும் ஒருவன். பெண்ணை வெறும் போகப் பொருளாக நினைக்கின்ற இச்சமூகம் அவளை மானுடநேயத்துடன் பார்க்காமல் இருப்பதில் வியப்பில்லை.

அந்தச் சுற்றுப்புறத்தில் குமார் கடையை விட்டால் வேறு மார்க்கமில்லை. கையில் பணம் இல்லாததால் சங்கக் கடையையும் நாடமுடியாது. குமார் கடனுக்கு அதிக விலையில் பொருட்கள் கொடுப்பான். நிவாரணம் வந்ததும் அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய் என எல்லாவற்றையும் அரை விலை கொடுத்து வாங்குவான். கடன் காசுபோக ஏதாவது மீதி இருக்குமா? என்று தேவகி பார்ப்பாள். மாதா மாதம் கடனேறிக் கொண்டிருப்பதாக குமார் சொல்வான்.

கடையில் சனசந்தடி இல்லாத வேளையில் அவள் போனால் வெறித்து அவளை நோக்கி இரட்டை அர்த்தத்தில் அவன் கதைக்கின்றபோது காவலரண்களிலிருந்து வெறித்து நோக்கும் சீருடையினர் பரவாயில்லை என்று எண்ணிக்குமுறுவாள் தேவகி.

'எப்போது இந்த யுத்தம் முடிவுக்கு வரும்?' அவள் ஏங்குவாள்.

வறுமை அவளை மிகவும் சோதித்தது.

இந்த நிலையில் கூட யாராவது போராளிகள் வந்துவிட்டால் அவர்களுக்குச் சுவையாக உணவு பரிமாறுவாள். சமையலில் ருசி அவளுக்கு கைவந்த கலை. அவளது சமையலைக் கணவன் எத்தனை முறை பாராட்டியிருக்கின்றான்!

இப்போது போராளிகள்...

"அக்கா உங்கட சமையல் அற்புதம்..." காட்டிற்குள் அஞ்ஞாதவாசம் செய்யும் போராளிகள் பாராட்டும் போது உள்ளம் பூரிக்கும்.

"அக்கா எங்களுக்குக் கிடைக்கிற சாப்பாட்டைப்பற்றித் தெரியும் தானே?... ஆனா எங்கட அம்மா கூட முன்னர் இப்படிச் சுவையாகச் சமைப்பதில்லை..." என்று சாப்பிட்டுச் செல்லும் பெண் போராளிகள் அவளைப் பாராட்டுவார்கள்.

காட்டுக்குள் நல்ல உணவின்றி, உரிய நேரத்தில் சாப்பாடு கிடைக்காமல் தவிக்கின்ற இந்தப் பூமி ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட வேண்டும் என்ற நோக்கில் இளமைக் கனவுகளெல்லாம் புறம் தள்ளிவிட்டுப் போராடுகின்ற இவர்களுக்கு ஒரு நேர உணவு என்றாலும் கொடுக்க முடிகிறதே என்ற திருப்தி அவளுக்கு.

அவளது பானை அட்சயப் பாத்திரம் போன்றது. போராளிகள் வரும் நாட்களில் வெறுமையாகக் கிடந்த வரலாறு இல்லை. ஆனால் அன்று முழுவதும் அவள் பட்டினிதான்.... இதயம் நிறைந்ததில் பசி தெரியாது.

வருகின்ற போராளிகள் அருந்ததியைத் தூக்கி விளையாடிவிட்டுப் போவார்கள். "நீ வளர்ந்து வந்து எங்களைப் போல இந்தத் துவக்கை தூக்க வேணும்..." என்பார்கள். "இப்பவே தாங்க" என்று அடம்பிடிப்பாள் அருந்ததி.

உறக்கம் வராமையினால் பலவித நினைவுகளோடு படுத்திருந்தாள் தேவகி. கதவு 'டொக் டொக்' என்று தட்டப்பட்டது.

'ஆரது...?'

"நாங்கள் தான் அக்கா..."

அவள் கதவைத் திறந்தாள். கௌதமி, அகல்யா என்ற அவளுக்கு அறிமுகமான இரண்டு போராளிகள்.

கதவைத் திறந்த தேவகி ''வாங்கோ பிள்ளையள்'' என்று அவசர அவசரமாக உள்ளே அழைத்து கதவைப் பூட்டினாள். பகலில் இந்த மண்ணை மாசுபடுத்தி அலைந்து திரியும் பிசாசுகள் இரவில் கூட வந்து சுற்றி வளைத்திடக் கூடும்.

''அக்கா நேற்று இரவிலிருந்து அன்னம் தண்ணி இல்லை. திடீரென்று சுற்றி வளைச்சிட்டாங்க. அருந்தப்பு. ஒரு பக்கமாய் வெளியே வந்திட்டம். பசிக்குது அக்கா...''

தேவகிக்கு திக் என்றது.

அவளது அட்சயப் பாத்திரத்திலும் ஏதும் இல்லை.

பொருட்கள் இருந்தால் ஒரு நொடியில் சோறு வடித்து குழம்பும் வைத்து விடுவாள். வீட்டில் எதுவும் இல்லை. பசியோடு நம்பி வந்த பிள்ளைகளை ஏமாற்றமடைய வைக்க அவள் மனம் இடம் தராமல் தவித்தது. சிறு வயதில் படித்த சிவபக்தரான இளையான் குடிமாற நாயனாரின் கதை தான் நினைவுக்கு வந்தது. சிவனடியார்களுக்கு உணவளித்து மகிழும் அத்தம்பதியினர் அந்த மழை நாளிலே, விதைத்த நெல் பொறுக்கி, முளைக்கீரை பிடுங்கி சமைத்து, விருந்தோம்பிய அந்தப் புராணக் கதையில் வரும் தம்பதியர் போல் அவளும் தவித்தாள்.

'இந்தச் சாமத்தில் அரிசிக்கு எங்கே போவது? இந்தக் கும்மிருட்டில் தனியாக குமார் கடைக்குப் போக முடியுமா? தேநீர் கொடுக்கக் கூட வழியில்லை...!'

இவளது நிலைமையை உணர்ந்த போராளிகள், தாம் பொருட்கள் வாங்கி வருவதாகப் புறப்படவே, அவள் தடுத்தாள். "பிசாசுகள் ரோட்டுப் பக்கம் உலாவும். நீங்கள் நில்லுங்கோ நான் டக் என்று வாறன்..."

அவள் குமார் கடையை அடைந்தபோது இரவின் நிசப்தத்தில் உலகம் உறங்கியிருந்தது. "குமாரண்ணை... குமாரண்ணை..." அவள் பலமாகக் கதவைத் தட்டினாள். நீண்ட முயற்சியின்பின் "ஆரது?" என்று எழுந்த குமாருக்கு, "அது நான் தேவகி..." என்ற அவளது குரல் உற்சாகம் ஊட்டியது.

கதவைத் திறந்து "வா தேவகி..." என்று அழைத்தான். தனது வேண்டுதலுக்குச் சம்மதித்து அவள் வந்து விட்டாள் என்ற நினைப்பு அவனுக்கு.

'குமாரண்ணை, ஒரு கிலோ அரிசி, நூறு கிராம் பருப்பு, நூறு கிராம் கருவாடு, சீனி, தேயிலை' தேவகியின் பட்டியல் நீண்டு கொண்டு போகவே அவன் இடைமறித்தான். ஏமாற்றம் மறுபுறம்.

"காசு கொண்டு வந்தனியா?"

"இல்லை கணக்கில் எழுதண்ணை.."

"கடன் இல்லை..." குமார் கறாராகக் கூறினான்.

"இல்லைஎண்டு சொல்லாதை அண்ணை... போராளிப்பிள்ளைகள் வந்திருக்குதுகள். பாவம் பசி..."

"குமார் இளகினான். அதை முதலில் சொல்லாதையன். எங்கட விமோசனத்துக்காகவே போராடுகின்ற பிள்ளையளுக்கு இல்லாத சாமான்களே"

என்று கூறியபடி தாராளமாகப் பொருட்களை அவளிடம் கொடுத்தான்.

பசிக்களையுடன் விரைவாக அவள் வீடு திரும்பினாள்! 'இந்த நாட்டில் நல்லவையும் சரி, கெட்டவையும் சரி, ஏழையும் சரி, பணக்காரனும் சரி எல்லோரும் போராளிகளை நேசிக்கினம். ஓம்... போராளிகள் இல்லாட்டி நாங்களும் இல்லை. எங்கட நாடும் இல்லை என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கினம்... இது எங்கட போராட்டத்துக்குக் கிடைச்ச முதல் வெற்றி' என்று நினைத்தபடி தேவகி வீட்டிற்கு வந்த போது, அங்கே அகல்யாவும், கௌதமியும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். நடுவில் செல்ல மகள் அருந்ததி உறங்கிக் கொண்டிருந்தாள்.

மகிழ்ச்சியோடு தேவகி துரிதமாகச் சமைத்தாள்.

'பாவம் பிள்ளைகள் நடந்த களைப்பு... நித்திரையாப் போட்டுதுகள்...' என்று நினைத்தபடி உணவைச் சமைத்தாள். பிள்ளைகள், சமையல் முடிஞ்சுது... எழும்பி கைகால் கழுவிப்போட்டுச் சாப்பிட வாங்கோ..."

எழுந்து முகம் கழுவிக்கொண்டு சாப்பிட அமர்ந்தார்கள்.

அகல்யாவும், கௌதமியும் ஆசையோடு உண்பதை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தாள் தேவகி. அவசரமாகச் சாப்பிட்டதில் அகல்யாவுக்கு விக்கல் எடுத்தது. "வீட்டில் அம்மா நினைக்கிறா போல" என்று கூறிய்படி அவளது தலையைத் தட்டி விட்டு தண்ணீரை எடுத்து நீட்டினாள் தேவகி.

"அம்மா இருந்தால் தானே நினைக்க... குண்டு வீச்சில என்ர கண்ணுக்கு முன்னாலேயே சிதறிப்போனா..." அகல்யாவின் கண்கள் கலங்கின. "வெண்ணிலா அக்கா நினைக்கிறா போல அவதான் எங்கட பொறுப்பாளர்..."

தேவகியின் கண்கள் கலங்கின.

"அது சரி... நீங்களும் சாப்பிடுங்கோவன் அன்ரி..." குறிப்பறிந்து கூறினாள் அகல்யா.

தேவகி சாப்பிடும்போது நினைத்தாள் : ஆர் பெத்த பிள்ளையோ! எங்கட விடுதலைக்காகப் போராடுதுகள்... அருந்ததியும் வளர்ந்த பிறகு போராட வெளிக்கிட்டா... ஆரால தடுக்கேலும்...!'

'காலத்தின் தேவையும் அதுதானே? அவள் விரும்பி வெளிக்கிட்டால் ஒரே பிள்ளை என்பதற்காக நான் தடுக்கமாட்டன்?'

– *தமிழ் அலை (2003)*



# இனி எல்லாம் சுகமே



கடிதத்தை உடைத்து வாசித்த சுதந்திரா, சிறகு முளைத்தது போல் உணர்ந்தாள். உடலெங்கும் மின்சாரம் பாய, இதயத்துக்குள் பன்னீர் மழை பொழிந்தது. அவளால் மனப்பரப்பை அடக்க முடியவில்லை.

சுதந்திராவின் இலட்சியக் கனவு இதோ நிறைவாகி விட்டது. ஆம் அவள் நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்துவிட்டாள். இந்த இனிமையான செய்தியை உடனடியாக கணவன் கணேசனுக்குத் தெரிவிக்க வேண்டும். எவ்வளவு மகிழ்ச்சியடைவான்? இந்த மகிழ்ச்சியான செய்தி கேட்டு என்னென்ன பரிசெல்லாம் வாங்கித் தரப்போகிறான். பரிசில்கள் ஒரு புறமிருக்கட்டும், முதலில் முத்த மழையில் அவளைத் திணறடித்து விடுவானே!

நினைக்கும்போதே சுதந்திராவிற்கு வெட்கமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது. உடனடியாக அவனது அலுவலகத்திற்குப் போன் பண்ணினாள்.

“இஞ்சினியர் கணேசன் பிளீர்ஸ்...”

“ஐயா இப்பதான் வெளியே போனார். மதியம் இரண்டு மணிக்குப் பின்னர்தான் வருவார்...” எதிர்முனையில் கிடைத்த பதில் அவளுக்கு ஏமாற்றமாகிப் போய்விட்டது. உடனடியாக இந்த மகிழ்ச்சியான செய்தியை அவனிடம் சொல்லாவிட்டால் தலையே வெடித்துவிடும் போலிருந்தது.

அலுவலகத்தில் எல்லோரும் வருகிறார்கள், கை கொடுக்கிறார்கள், வாழ்த்துகிறார்கள், எப்போது விருந்து என்கிறார்கள். சிரித்தபடி எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்ட போதும் அவள் சிந்தனை எல்லாம் கணவனைச் சுற்றிச் சுற்றி வந்தது. ‘சீ... அவரை எவ்வளவு காலம் பட்டினி போட்டுவிட்டேன். எல்லாவற்றுக்கும் சேர்த்து இன்று மொத்தமாய் என்னை அவரிடம் அர்ப்பணிக்க வேண்டும்’ என நினைத்துக் கொண்டாள். ‘இனி எல்லாம் சுகமே’ என அவளது மனதில் தென்றல் வீசிக் கொண்டிருந்தது.

உண்மைதான்!

அவனது ஒத்துழைப்பு இல்லாது போயிருந்தால் அவளால் இந்த இமாலயச் சாதனையை எட்டியிருக்கவே முடியாது. ஆணாதிக்கச் சமுதாயத்தில், பெண்ணைப் புரிந்துகொண்டு, அவள் அபிலாஷைகள் எல்லாம் ஏற்று அதற்கு உறுதுணையாகச் செயற்பட்டிருக்கின்றான். இந்த விடயத்தில் ஒரு துறவி போல எத்தனை நாட்கள் சிரமப்பட்டு கட்டுப்பாட்டுடன் விரதமிருந்து, அவள் படிக்க உதவியிருக்கிறான். தனியே இருப்பது சிரமமல்ல.

அழகான மனைவியை அருகில் வைத்துக்கொண்டு அவன் காத்த பொறுமை மகத்தானது என்பதை அவளும் அறிவாள். எத்தனை நாட்களில் அவன் ஆசைப்பட்டு வந்த வேளைகளிலெல்லாம் அவள் இங்கிதமாகத் தட்டிக் கழித்திருக்கிறாள். ஒரு சீறல் சினப்பில்லாமல் அவன் தன் ஆசைத்தீயை அடக்கிப் பேசாமல் இறுகக் கண்களை மூடிக்கொண்டு படுத்திருக்கிறான்.

எப்போதாவது அவளாக நினைத்து அருகில் வந்து படுத்தால்தானுண்டு. அது எப்போதாவது அத்தி பூத்தாற்போல்தான் வரும்.

சுதந்திரா பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண். கல்லூரி அதிபர் மாணிக்கத்தின் ஏகபுத்திரி. அவள் உயர்தர வகுப்புப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் அவளது தந்தைக்குத் திடீரென்று இரத்த அழுத்தம் கூடி பக்கவாதம் ஏற்பட்டது. போதனா வைத்தியசாலையில் ஒரு மாதமாக சிகிச்சை பெற்ற பின் ஒருவாறு தேறினார். எனினும் டாக்டர்கள் அவரை எச்சரித்தார்கள்.

''ஒழுங்காக கிளினிக்குக்கு வந்து மருந்து எடுக்க வேணும்... மறுபடியும் 'ஸ்ரோக்' வந்தால் மரணமும் ஏற்படலாம், அல்லது நிரந்தரப் படுக்கையில் விழுத்திவிடும்...'' டாக்டர்கள் சொன்ன ஆலோசனையில் அவர் பயந்தே போய்விட்டார். சாவைக் கண்டு அச்சம் கொள்ளாத போதிலும் தனது ஒரே மகளின் திருமணம் நடக்க முன்னரே ஏதாவது ஏறுமாறாக நடந்துவிடுமோ என்ற ஏக்கம் நெஞ்சில் தணலாய் தகிர்த்தது.



விரைவில் மகளின் திருமணத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் விசுவரூபமெடுத்தது. ஆனால் சுதந்திராவிற்கு அப்போது பதினேழு வயதுதான். உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்த அவள் பல்கலைக்கழக கனவுகளோடு கல்லூரியில் முதல் மாணவியாக இருப்பதால், திருமணத்திற்குச் சம்மதிக்கமாட்டாள் என்று தோன்றியது. எனினும் மனதில் எழுந்த எண்ணத்தை மனைவியிடம் கூறி, இது பற்றி மகளிடம் கதைக்கும்படி கூறினார்.

அம்மா கல்யாணப் பேச்சை எடுத்தபோதே சுதந்திரா 'வள்' என்று பாய்ந்தாள். "உங்களுக்கு வேற வேலை இல்லையே அம்மா? நான் படிக்கணும், பட்டம்

பெறணும், உயர் பதவி வகிக்கணும்... உங்களைப்போல அடுப்படியில அடைந்துபோக என்னால் முடியாது. நான் படிக்கணும்..." சுதந்திராவின் உறுதியான பதிலில் அம்மா செய்வதறியாது கணவரிடம் அவள் மறுப்பதைத் தெரிவித்தாள். அவருக்கு ஏமாற்றமாகிப் போய்விட்டது.

அடுத்த தடவையும் கிறுதி வந்து அவரைத் தூக்கியெறிந்த போது எல்லோரும் கலங்கிப் போயினர். இம்முறை வைத்தியசாலையில் படுக்கையில் இருந்தபோது தானாகவே மகளிடம் அணுகினார் மாணிக்கம்.

"நான் இன்னும் கனகாலத்து ஆளில்லை பிள்ளை. உன்ர கலியாணத்தையும் பார்த்திட்டுத் தான் கண்ணை மூட்டவேணும் என்ற ஆசை எனக்கு... நீயும் மாட்டன் என்று அடம்பிடிக்கிறாய்..." என்று அவளது கைகளைப் பற்றிக் கொண்டு அழுதார். பெற்ற பாசம் சுதந்திராவையும் உலுக்கியது. எனினும் தன் இலட்சியக்கனவுகள் இதனால் சிதைவடைந்து விடுமே என்று தயங்கினாள்.

"நான் படிக்க வேணுமப்பா..."

"கலியாணத்தைச் செய்திட்டுப் படிக்கலாம் பிள்ளை..." அவர் கெஞ்சும் போது அவளது மனதும் ஈடாடியது. சிறிது நேரம் யோசித்துவிட்டு "அப்படியென்றால் கலியாணத்திற்குப் பின்னர் படிக்க அனுமதிக்கக்கூடிய இடமாகப் பாருங்கோ அப்பா" என்று கூறினாள்.

அதிபரிடம் பணம் மட்டுமல்ல, நல்ல பண்பும் இருந்ததால் விரைவிலேயே நல்ல சம்பந்தம் கை கூடியது.

பொறியியலாளரான கணேசனும் அவளது கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ளவே, திருமணம் வெகுவிமர்சையாக நடந்தது.

முதலிரவிலேயே சுதந்திரா தனது உள்ளக் கிடக்கையை கணேசனோடு பகிர்ந்து கொண்ட போது, அவனும் அவளது எண்ணங்களை மதித்து வேண்டுதலை ஏற்றுக்கொண்டான். இப்போதைக்கு குழந்தைகள் வேண்டாமென்ற மனைவியின் முதலிரவுக் கோரிக்கையும் கணேசனால் ஏற்றுக்கொள்ளப்படவே சுதந்திரா ஆனந்த வெள்ளத்தில் நீந்தினாள். ஆறுமாத இன்ப வாழ்க்கைக்குப் பின்னர் சுதந்திரா, வெறும் சொல்லோடு நின்றுவிடாமல், செயலிலும் தன் இலக்கை நோக்கிய பயணத்தில் முன்னேறினாள்.

பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறிய அவளுக்குப் பயிலுநராக அரச செயலகத்தில் நியமனம் கிடைத்தது. ஒரு கணக்காளராக அல்லது நிர்வாக சேவை அதிகாரியாக வரவேண்டும் என்ற இலக்கோடு சுதந்திரா படித்தாள். அவளது சிந்தனையெல்லாம் படிப்பைத் தவிர வேறெதுவுமில்லை.

'வெற்றி இலக்கை அடைய வேண்டுமென்றால் எண்ணங்கள் பலமுனைகள் கொண்டதாக இருக்கக் கூடாது. ஒரு முனைப்பாக ஒரு சிந்தனையாக அதிலும் தெளிவாக இருக்க வேண்டும். இரண்டு தோணிகளில் கால் வைக்காது முக்கியமானது எது என்று தீர்மானித்து அதிலே முனைப்பாக இறங்க வேண்டும்' என்று

எப்போதோ படித்தது மனதில் படிந்திருந்தமையால் அவள் படிப்பில் முழுமையாக ஈடுபட்டாள்.

எனவே குடும்ப சுகத்திற்கான பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட வேண்டியேற்பட்டது. அபூர்வமாகத்தான் சினிமா, கடற்கரை, உல்லாசப் பயணம் என்று கணவனோடு வெளிச்செல்வாள். வீட்டிலும் படிப்பே சிந்தனையாக இருந்தாள்; கணேசனும் அவளுக்கு உறுதுணையாக பல விட்டுக்கொடுப்புகளைச் செய்தான். இருந்தாலும் சில சமயங்களில் மனது ஏமாற்றத்தில் தவிக்கும். எனினும் மனைவியின் உடன்பாடின்றி அவன் என்றுமே வல்லுறவு கொள்ள முயன்றதில்லை.

புரிந்துணர்வும், பரஸ்பர விட்டுக்கொடுப்பும் இருந்தமையால் அவர்களது இல்லறம் இனிதே தொடர்ந்தது. எனினும் பல நாட்களில் கணேசன் மனதளவில் தவிப்புக்குள்ளாவான். அவளும் புரிந்தும் புரியாததுபோல் இருந்து விடுவாள்.

கடந்த வாரம் கூட அவனது மனதிற்குப் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டது. அன்று கணேசனுக்கு 'காதல்' மூட் வந்துவிட்டது. கண்களில் ஆசையுடன் சுதந்திராவை நெருங்கியவன், பின்புறமாகச் சென்று அவள் தோள்மீது கைவைத்தான்.

கணவனை நோக்கித் திரும்பிய சுதந்திரா புன்னகைத்தாள். "ஸ்கூட்டரில் உங்ககூட வந்தபோதே உங்கட எண்ணத்தையும் புரிந்துகொண்டேன்... ஆனால்..." அவள் சொல்லி முடிக்க முன்னே தன்முகத்தை

சுதந்திராவின் முகத்தருகே கொண்டு சென்றான் கணேசன். சூடான மூச்சுக்காற்று அவள் முகத்தைத் தழுவியது...

"சுதந்திரா..."

"ம்... சொல்லுங்க..." அவனது பிடியைத் தளர்த்தியபடியே அவனை நோக்கினாள். அவளது உதடுகள் நெருக்கத்தில் அசையும்போது அவனுக்குத் தேனில் தோய்ந்த பலாப்பழச்சுளைகள் நினைவுக்கு வந்தன.

"இன்றைக்கு ஒன்றுமில்லை. இன்னும் ஒரு வார காலம் என்னைக் குழப்பக்கூடாது. போட்டிப் பரீட்சை வருகுது... நல்ல பிள்ளையாகத் தனியே படுங்க... நான் படிக்கப் போகிறேன்..." அவளது கண்களில் குறும்பு மின்னியது.

அவனது முகம் ஓடிக்கறுத்தது. கோபத்தின் சாயல் அவனையும் மீறி எட்டிப்பார்த்தது. பேசாமல் கட்டிலில் போய் உட்கார்ந்தான்.

"ஐயோ... கோபத்தைப் பாருங்களேன்... என்ர செல்லக்கண்ணா..." என்று அவனருகில் சென்று மூக்கைத் திருகினாள். பின்னர் அருகே அமர்ந்து கொண்டு அவனைத் தேற்றுகையில், அவன் அவளை மீண்டும் அணைத்துக்கொண்டு அவள் உதடுகளை நெருங்கினான். தனது சுட்டுவிரலால் அவனது உதடுகளின் மீது கை வைத்துத் தடுத்தாள். "இப்ப நீங்க ஆரம்பித்தால் எனக்கு 'மூட்' வந்துவிடும். பிறகு படிக்கிற 'மூட்' போயிடும். நிறைய படிக்கவேணும்... ப்ளீஸ்..." அவனிடமிருந்து நழுவி

விலகிய சுதந்திரா கலகல என்று சிரித்தாள். ''தலையெழுத்து...'' என்று கூறிய கணேசனும் அவளோடு சேர்ந்து சிரித்தான்.

நடந்த சம்பவத்தை நினைக்கையில் அவளுக்கு இப்போது சிரிப்பு வந்தது. 'பாவம், இதுவரை எத்தனை நாள் தவிக்க வைச்சிட்டேன்' என எண்ணியபடி அரை நாள் லீவு போட்டுவிட்டு பலவித நினைவுகளோடு குதூகலமாக வீட்டை நோக்கி விரைந்தாள்... 'சீ இன்றைக்கென்று பார்த்து இந்த மனிசன் எங்கே போயிட்டார்...?'

வீட்டிற்குப் போய் மறுபடியும் தொலைபேசியில் அலுவலகத்துக்குத் தொடர்பு கொண்டு அவரையும் லீவு போட்டுவிட்டு வரும்படி அழைக்கவேணும். அவர் வந்ததும் இன்று எப்படி இந்த நாளைக் கொண்டாடுவதென்று கலந்தாலோசிக்க வேணும்... தேவைப்பட்டா மெட்னி...?' நினைக்கும்போதே சிரிப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது சுதந்திராவுக்கு.

என்ன செய்யலாம்? அவளது மனமேடையில் கற்பனைக் குதிரை வேகமாக ஓட ஆரம்பித்தது.

'அவர்கூட பீச்சுக்குப் போகணும்... சினிமாவுக்குப் போகணும்.... அப்புறம் நட்சத்திர ஹோட்டலில் இரவு சாப்பிடணும்... அவருக்குப் பிடித்த தந்தூரி சிக்கன் புரியாணி வட்டிலப்பம் எல்லாம் சாப்பிடணும்... இரவு கட்டியணைத்து ஒரு முத்தம் கொடுத்து அவரை அசத்தவேணும். 'சுதந்திரா நீயா' என்று அதிசயப்பட்டு

மகிழ்ச்சியில் மூச்சுத் திணறிப் போவார். ம்... இந்த இரண்டு மூன்று வருஷமாய் அவரை நல்லாய்த்தான் வாடவிட்டு விட்டேன். இன்றைக்கு அவர் போதும் போதும் என்கிற வரைக்கும் வட்டியும், முதலுமாய்' நினைவலைகளோடு விரைந்த சுதந்திரா ரோஜாப்பூக்களின் மீது நடப்பதுபோல் உணர்ந்தாள்.

மகிழ்ச்சியோடு வீட்டை அடைந்த சுதந்திரா கைப்பையில் இருந்த திறப்பை எடுத்தாள். வீட்டிற்குள்ளே யாரோ உரையாடுவது போல் இருக்கவே காது கொடுத்தாள்.

'கதையும் சிரிப்புமாக யாராக இருக்கும்?' சுதந்திரா உசாரானாள். 'ஒன்று அவரது குரல். மற்றது பெண் குரலல்லவா? யாரோடு பேசிக் கொண்டிருக்கிறார்?' காதுகளை உன்னிப்பாக்கிக் கொண்டு கேட்டாள்.

"சும்மா இருங்க" ... சிணுங்கும் பெண்ணின் குரல் காதுகளைத் துளைத்து மூளையில் உரைக்கவே சுதந்திரா அதிர்ந்து போனாள். தன் புரிசனுக்கு இன்னொரு பெண்ணோடு தொடர்பு என்றால் எந்தப் பெண்தான் பொறுத்துக் கொள்வாள். கதவைத் தட்டித்திறந்து கொண்டு உள்ளே சென்று பிய்த்துப் பிடுங்க வேண்டும் போலிருந்தது. எனினும் ஒரு கணம் நிதானித்தாள். தனது கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு தொடர்ந்து செவிமடுத்தாள்.

"இந்த வீட்டை எவ்வளவு அழகாய் வைத்திருக்கிறீர்கள்? இந்த ஹோல், படுக்கை அறை... ஓ

அற்புதம். ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கூட இவ்வளவு அழகான படுக்கை அறையைக் காண முடியாது... சுவரில் மாட்டியிருக்கிற படங்கள்..."

"இல்லை சிநேகா... இந்தப் படுக்கை இவ்வளவு அழகாய் இருக்கிறது என்றுதானே வியக்கிறாய்? பாவிக்காத எதுவும் அழகு குறையாமல்தானே இருக்கும்? அழகாக இருக்கிற என் மனைவியைப் போல். எங்களுடைய இந்த மூன்று வருட தாம்பத்திய வாழ்வில் நாங்கள் சேர்ந்து படுத்ததை விரல் விட்டே எண்ணலாம். சிரித்துக் கொண்டே கூறினான் கணேசன். "அதுமட்டுமல்ல. சுதந்திரா எதைச் செய்தாலும் மிக நேர்த்தியாகத்தான் செய்வாள். இதெல்லாம் அவளுக்குக் கைவந்த கலை. அவள் எப்பவுமே அழகாகவே காட்சியளிப்பாள். அதைப்போலவே வீடு, வாசல் எல்லாவற்றையும் மிக அழகாக வைத்திருப்பாள். படிப்புச் சுமைக்கு மத்தியிலும் அவள் சுறுசுறுப்பாக எல்லாம் செய்வாள்..."

"ஆனால் உங்களை நல்லாய்த்தான் பட்டினி போட்டிருக்கிறா? ம்... என்ன இருந்தாலும் உங்களுக்கு நல்ல பொறுமைதான்! எப்படி முடிந்தது உங்களாலே?" சிநேகா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"அது நான் அவள் மீது வைத்திருக்கிற அன்பினால். நான் சுதந்திராவை நேசிக்கிறேன். அவளைப் போல அற்புதமான ஒரு மனைவியை அடைஞ்சதுக்கு நான் கொடுத்து வைச்சிருக்கிறேன். சீ இஸ் கிரேட்... படிக்க ஆசைப்பட்டா... தடுக்கலை...

பெண்களை அடிமையாக நினைக்கிறது எனக்குப் பிடிக்காது... அவளது அபிலாஷைகளுக்காக என்னைப் பட்டினி போட்டேன்..."

"பட்டினியா...? அல்லது இன்று என்னைக் கூப்பிட்டதுபோல, வேற யாரையாவது அடிக்கடி கூட்டி வருவீர்களா?"

"சீச்சீ... அப்படியல்ல... இதுதான் முதல் தவறு. இதைச் செய்ய நினைக்கிறபோது கூட எனக்கு மனது இடம் கொடுக்கலை... உடலுக்குத் தேவையாக இருந்தாலும் உள்ளத்தினால் ஏற்றுக்கொள்ள முடியலை. அதுதான் என்னால் ஆரம்பிக்க முடியல சினேகா..."

"வேறு யாருமென்றால் இப்படித் தங்களை பட்டினி போடுற மனைவி தேவையா என்று பேசாம விவாகரத்துப் பண்ணிவிட்டு வேறொருத்தியைக் கட்டியிருப்பாங்கள்... ஆனா... நீங்க..."

"அது என்னால முடியாது... நான் சுதந்திராவிலே வைச்சிருக்கிற காதல், அன்பு இதற்கு முன்னால் எதுவுமே எனக்குப் பெரிசில்லை..." கணேசன் மனமுருகக் கூறினான்.

"அப்படிப்பட்ட நீங்கள் இன்று என்னை ஏன் அழைத்து வந்தீங்க...? உயிருக்குயிரா நேசிக்கிற உங்க மனைவிக்கு இது துரோகமல்லவா?" சினேகா கேலியாகச் சிரித்தபடி கேட்டாள்.

"உண்மைதான் சினேகா... ஏதோ ஒரு வேகத்தில் உன்னைக் கூட்டி வந்திட்டேன்... அது தவறு என்று இப்ப புரியுது..." கணேசன் குறுகுறுப்போடு கூறினான்.

"இந்த மூன்று வருடங்களாகக் கட்டிக் காத்த புனிதத்தை கடைசி நேரத்தில் ஏன் போட்டு உடைக்கிறீங்க? உங்க மனைவியினுடைய பரீட்சை முடிவுகளும் விரைவில் வரும் என்கிறீங்க... கட்டாயம் அவ சித்தியடைவா... இந்தச் சுவரில் மாட்டியிருக்கிற உங்க கலியாணப் படத்தைப் பாருங்க... மகாலட்சுமி மாதிரி இருக்கிறா. அவருக்குத் துரோகம் பண்ண நினைக்காதீங்க... நான் வருகிறேன்..." சினேகா புறப்பட ஆயத்தமாகவே வெளியே நின்ற சுதந்திரா விரைந்து மறுபக்கம் சென்று மறைந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில் கணேசனும் வாசல் கதவைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டான். அவர்கள் போன பின்னர் சுதந்திரா வாசலுக்கு வந்து கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

அவளது மனதில் போராட்டம்.

'இனியென்ன வாழ்க்கை? இதைவிடத் தற்கொலை செய்யலாம். சீ... இப்படி ஒரு சபலமா? அவர் மனதிலா? நான் எவ்வளவு தூரம் அவரை நேசிக்கிறேன்... ஆனா.. அவர்... இப்படி...' அவள் மனக்குமுறல் கண்ணீராய் வெளியேற கட்டிலில் வீழ்ந்தாள். மனதில் ஒரு பிரளயமே நடந்து கொண்டிருந்தது. எனினும் அவன் தன் மீது வைத்திருக்கும் அன்பின் ஆழத்தை அவனது வாயால் கேட்டதினாலும், ஒன்றுமே நடக்கவில்லை என்பதனாலும் மனது சற்று ஆறுதல் அடைந்தது. நடந்ததைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்வதால் எதிர்காலத்தையும் இழக்க நேரிடும்!! மனது யதார்த்தமாக யோசித்தது.

கணவன் மீது கட்டுக்கடங்காத ஆத்திரம் ஏற்பட்ட போதிலும், அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தைகளும் காதோடு ஒலித்தது. 'சுதந்திராவை நான் உயிருக்குயிராய் நேசிக்கிறேன்!' என்ற அவனது ஆழமான வார்த்தைகள் அவளது சீற்றத்தை கரைய வைத்தன. கடித்துக் குதற வேண்டும் போல சிநேகா மீது ஏற்பட்டிருந்த கோபமும் கூட அவளது கடைசி வார்த்தைகளால் கரைந்து போய் மனது மெல்ல மெல்ல அமைதியடைந்தது.

'பிழை என்மீதுதானே? இலட்சியம் என்ற ஒரு மாயையில் இளமைத் துடிப்புள்ள கணவனைப் பட்டினி போட்டது தவறுதானே?' என்று நினைத்தாள்.

மறுபடியும் அவள் கலகலப்பாகி தன்னை அலங்கரித்து, கணவனின் வரவுக்காய் காத்திருக்கிறாள். எனினும் இதயத்தின் ஒரு மூலையில் இன்னமும் ஏதோ முள்ளாய் வலித்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தாள்.

– சுடர் ஒளி (2004)





"அம்மா என்ரை செருப்பு அறுந்து போச்சுது. புதுச் செருப்பு வாங்க வேணும்..."

காலையில் பாடசாலைக்கு வெளிக்கிட்டுக் கொண்டிருந்த தாரிணி சிணுங்கியபடி கேட்டாள். வயது பதினாறு ஆகிவிட்டாலும் இன்னமும் குழந்தை என்ற நினைப்பு அவளுக்கு.

"இப்ப கொஞ்ச நாளைக்கு முந்தித்தானே வாங்கினது பிள்ளை. அதுக்கிடையில் புதிது வாங்க எங்கே போறது?...தைச்சுப் போட்டு போடுபிள்ளை..."

அம்மாவின் பதில் அவளுக்குத் திருப்பதியளிக்கவில்லை.

"இல்லையம்மா... வகுப்பில பிள்ளைகளெல்லாம் விதவிதமான புதுச் செருப்பு போடுதுகள்... நான்

மாட்டன்... உந்தப் பழையதை இனி நான் போடமாட்டன்... புதிது தான் வேணும்..."

"அதுக்கு இப்ப காசுக்கு எங்கே போறது பிள்ளை. வீட்டில ஒரு சுண்டு அரிசி கூட இல்லை. கடைக்கணக்கும் ஏறிப் போச்சு... தேத்தண்ணிக்குச் சீனி வாங்கவே வழியில்லை... அப்பா என்ன அரசாங்க வேலையே பார்க்கிறார்?... கடையில உதவியாளராகச் சிறிய சம்பளத்திலை வேலை செய்யுறார். வீட்டிலையும் உனக்குப் பிறகு நாலு பேர்... எல்லாருடைய சாப்பாட்டுச் செலவு... துணிமணிச் செலவு... எப்படிச் சரிக்கட்டுறது என்று தெரியாமல் நான் முக்குழிக்கிறன்... இப்ப செருப்பு வாங்க ஒண்டும் செய்யேலாது பிள்ளை..."

தாரிணியின் நச்சரிப்பில் தாய்க்குச் சலிப்பு ஏற்பட்டது. எனினும் அவளோ விடுவதாயில்லை. தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

"வேணுமென்டால் அப்பாட்டைக் கேட்டுப் பார் பிள்ளை"

இப்போது பந்து என் பக்கம் வந்தது. இதுவரை மனைவியும், மகளும் கதைத்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டு மனம் சலிப்புற்றிருந்த எனக்கு 'திக்' என்றது. நான் குழம்பிக் கொண்டிருந்தபோதே மகள் என்னருகே வந்து விட்டாள்.

"அப்பா..."

"ம்..."

''செருப்பு வாங்க வேணும்... அம்மா காசு தாறா இல்லை...'' என்றவளை நிமிர்ந்து பார்த்தேன்.

''இருந்தால் தந்திருப்பாதானே?''

''செருப்பில்லாட்டி நான் பள்ளிக்கூடம் போகமாட்டேன் அப்பா...''

மகளை ஆறுதல் படுத்திவிட்டு நான் வேலை செய்யும் கடைக்குப் புறப்பட்டேன். மாலையில் வீடு திரும்பும்போது முதலாளியிடம் கேட்டு பணம் வாங்கி வந்து மகளுக்குச் செருப்பு வாங்க வேண்டும் என நினைத்தேன்.

எனது முதலாளி தங்கமானவர். இந்த வீடியோக் கடையில் அதிக வருமானம் இல்லாவிட்டாலும் கூட, எனது சம்பளப் பணத்தை உரிய நேரத்திற்கு முன்பதாகவே நான் கேட்கும் போது தந்து உதவுவார்.

அந்தக் கடையில் வீடியோ கொப்பிகள், சீடிக் கொப்பிகள் வாடகைக்கு விடுவதுடன், சீடி வீடியோக்களில் பிரிண்ட் அடித்துக் கொடுப்பதும், பாடல் அடித்துக் கொடுப்பதும் என பல வேலைகள் செய்தாலும் நானும் முதலாளியும் மட்டும் தான் வேலை.

முதலாளி மனித நேயம் மிக்கவர். எவருக்கும் உதவி செய்யப் பின் நிற்க மாட்டார். எதிலும் நேர்மை, நாணயம் என்று செயற்படுவார். என்னைப் பொறுத்த வகையில் பிழைக்கத் தெரியாதவர் என்பது அவரைப் பற்றிய அபிப்பிராயம்.



இன்றும் வழமைப் போல் அதிக நெருக்கடி இல்லை. இலையான் கலைத்துக் கொண்டிருந்தோம். மாலையில் தான் படக் கொப்பிகள் வாடகைக்கு எடுக்கக் கொஞ்சம் கூட்டம் இருக்கும். மற்றும்படி எப்போதாவது சிலர் வந்து போவார்கள்.

முதலாளியின் வியாபாரத்தைப் பெருக்க பல வழிகள் இருந்தும், அவர் குறுக்கு வழிகளில் செல்வதில்லை. காற்றுள்ள போது தூற்றத் தெரியாத பிறவி.

திருப்பிக் கொண்டு வந்து மீண்டும் தந்த வீடியோக்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தபோது, 'முதலாளி' என்ற அழைப்புக் கேட்டு திரும்பிப்

பார்த்தேன். இராணுவச் சிப்பாய் ஒருவன் சிரித்துக் கொண்டிருந்தான். யுத்தத் தவிப்பு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் கூட இராணுவம் என்றால் பயமாகத்தானிருந்தது. கடந்த சில வருடங்களின் சோகத்தையும், வடுக்களையும் இலகுவில் மறக்க முடியுமா என்ன? எனினும் இப்போது கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் அமைப்பு என்று இருப்பதாலும், யுத்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலில் இருந்தமையினாலும் நாமும், அவர்களும் சிறிது பயமின்றி உலாவி வருகிறோம். எனினும், எப்போது எது நடக்குமோ, எங்கே வெடிக்குமோ என்ற பயம் அடி மனதில் இருந்து கொண்டேயிருக்கும்.

"முதலாளி இந்த சீடியில நூறு பிரிண்ட் எடுத்துத் தரவேணும்..." என்ற படி ஒரு சீடியை நீட்டினான். இவன் எதற்காக நூறு பிரிண்ட் கேட்கிறான் என்று புரியாமல் நானும், முதலாளியும் விழித்தோம்.

"நாளைக்கு முடித்துத் தரவேணும்" சிப்பாய் தொடர்ந்தான்.

"நிறைய காசு தாரது..."

யார் முகத்தில் முழித்ததோ தெரியவில்லை. இன்று பரவாயில்லை. முதலாளியிடம் கடனும் கேட்கலாம் என்று நினைத்துக் கொண்டேன்.

முதலாளி சீடிக் கொப்பியை பிரிண்ட் எடுக்கும்படி கூறிவிட்டு மதிய உணவுக்காக வீட்டுக்குப் புறப்பட்டார். இனி ஒரு குட்டித் தூக்கமும் போட்டுவிட்டு மாலையில் தான் வருவார். அதுவரை முதலாளி தொழிலாளி

எல்லாமே நான் தான். நானே ராஜா; நானே மந்திரி; நானே சேவகன்.

இராணுவ சிப்பாய் கொண்டுவந்த சீடியைப் போட்டுப் பார்த்தபோது தலை கிறுகிறுத்தது. அது ஒரு நீலப்படம்! நிர்வாணக் கோலத்தில் ஆண்களும் பெண்களும் சல்லாபிக்கின்ற காட்சிகள். குழந்தைகளைக் கூட இப்படத்தில் நடிக்க வைத்திருந்தார்கள்.

இன்று வரை நீலப்படம் எதுவும் பார்க்காத எனக்கு புதுமையாக இருந்தது. இந்த ஐம்பது வயதில் கூட அப்படத்தைப் பார்த்த போது உணர்வு சிலிக்க வைத்தது.

வேகமாகப் பிரிண்ட்களை எடுத்துக் கொண்டிருந்த போது முதலாளி வந்தார். விசயத்தைக் கேட்டதும் முதலாளி வெல வெத்துப் போனார். "ஐயோ இது என்ன அநியாயம்" என்று பதறிய அவரைப் பார்க்க எனக்குச் சிரிப்பு வந்தது. கலாசாரத்தைப் பேணும் குழுவினரின் கண்களுக்குப் பட்டுவிட்டால் தொலைந்தோம் என்று பயந்த முதலாளி, எடுத்த பிரிண்ட்களை எல்லாம் கடைக்குப் பின்னால் கொண்டு சென்று எரிக்கும்படி கூறினார்.

அவற்றை எடுத்துக் கொண்டு போன எனக்கு எரிக்க மனம் வரவில்லை. எனது மனதில் போராட்டம். 'இந்தப் பிரிண்ட்களை விற்றால் நிறையப் பணம் கிடைக்குமே. வீட்டுக் கஷ்டம் எல்லாம் நீங்குமே' என்று மனது கணக்குப் போட்டது. பிரிண்ட்களை ஒளித்து வைத்து விட்டு சிறிது நேரம் கழித்து திரும்ப வந்து முதலாளியிடம் அவற்றை எரித்து விட்டதாகக் கூறினேன்.

"விட்டது சனி... இப்பதான் நிம்மதி... ஆமிக்காரன்ர கொப்பியைக் கவனமா ஒளிச்சி வை. காலையில் வந்தவுடன் அவன் முகத்தில் விட்டெறிய வேண்டும்..." என்று ஆத்திரத்துடன் கூறிய முதலாளி "எங்கட கலாசாரத்தையும், பண்பாடுகளையும் சீரழிச்சு, இளைய தலைமுறையினருக்கு விடுதலை வேட்கை ஏற்படாமல் தடுக்கப் பார்க்கிறார்கள்... இவங்கட அநியாயத்தால நாடே கெட்டுக் குட்டிச்சுவராகப் போகுது..." என்று படபடத்தார்.

மறுநாள் காலையில் அந்த இராணுவச் சிப்பாய் வந்தபோது முதலாளி அவனது சீடிக் கொப்பியைத் திருப்பிக் கொடுத்து, "இதெல்லாம் பிரிண்ட் எடுக்கேலாது. புலியள் எங்களைச் சுட்டுவிடுவார்கள்" என்றார். இராணுவ வீரனுக்குக் கோபம் வந்துவிட்டது. "இப்ப நான் முதலாளியைச் சுடுறது... இந்தக் கடைக்குத் தீ வைக்கிறது..." என்று ஆவேசமாகக் கூறினான். நல்ல வேளை போர்த் தவிர்ப்புக் காலம். இல்லாவிட்டால் சொன்னபடி செய்துமிருப்பான்.

"எனக்கு வேற கடையா இல்லை?" என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு சீடியைப் பிடுங்கிக் கொண்டு, நற நறவென்று பற்களைக் கடித்துக் கொண்டு புறப்பட்டான். சண்டை தொடங்கினால் முதலாளியின் கடை சரி என்று நினைத்துக் கொண்டேன்.

மறைத்து வைத்திருந்த சீடிக்களை எடுத்துக் கொண்டு எனது புதிய தொழிலை ஆரம்பித்தேன். கையில் பணம் புரள ஆரம்பித்தது. மகளுக்குச் செருப்பென்ன, கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தேன்.

ஒரு நாள் சீடி பிளேயர், கொம்பியூட்டர் என்பவற்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று, பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்ற வேளையில் அந்தப் படத்தை நானும் மனைவியும் போட்டுப் பார்த்தோம். "சீ அருவருப்பாக இருக்கப்பா" என்று மனைவி கூறினாலும், இரசித்துப் பார்த்தாள். மீண்டும் இளமை திரும்பியதாக உணர்ந்தேன். புதுப்புது படங்கள் கிடைக்கும் போதெல்லாம் மனைவிக்கும் காட்டினேன்.

குறுகிய காலத்திலேயே கையில் பணம் பெருகியது. நான் செய்யும் தொழிலால் எமது சமூகம் சீரழிவதையும், இளைய தலைமுறையினர் கெட்டுப் போவதையும் சிந்தித்துப் பார்க்காமல் எனது தொழிலை தொடர்ந்து செய்தேன்.

காலம் கடந்தது. நான் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு வந்ததால் கலாசாரம் பேணும் குழுவுக்கு கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு இறுமாப்புடன் இந்த இழி தொழிலைத் தொடர்ந்தேன். பணத்தின் போதை எனது கண்களை மறைத்தது.

ஒருநாள் நான் வீட்டுக்கு வந்தபோது மனைவி அழுது மூக்கை உறிஞ்சிக் கொண்டிருந்தாள். "என்ன ஏன் அழுகிற?" என்று அவளிடம் கேட்டேன்.

"இனி என்ன இருக்கு எல்லாமே குடி முழுகிப் போச்சு..." அவள் விம்மினாள்.

"கொஞ்சம் விளக்கமாகச் சொல்லேன்டி" சிடுசிடுத்தேன்.

"நம்ம தாரிணி பிள்ளைத்தாச்சி... மூன்று மாசம்"

"என்ன...?" நான் அதிர்ந்தேன்.

"இப்போ சத்தம் போட்டு ஊருக்குப் பகிரங்கப் படுத்தி விடாதையுங்கோ... நடந்தது நடந்து போச்சி. இப்ப என்ன செய்யலாம் என்று யோசிப்போம்."

நான் நிதானமாக யோசித்தேன். மனதில் ஆத்திரமும் சோகமும் ஒரு சேரப் பொங்கி எழுந்தன. "ஆள் யாராம்...?" மனைவியை நிமிர்ந்து பார்த்தேன்.

"இனி என்ன செய்யுறது. பேசிச்செய்து வைப்பம்"

"அது முடியாதுங்க..."

"ஏன் வேறப் பகுதிப் பொடியனாமோ?"

"..............."

"கலியாணம் செய்த ஆளாம்... அதோட...." மனைவி தொடர்ந்து சொல்ல முடியாமல் விசும்பினாள்.

"என்னென்டு சொல்லித் தொலையனப்பா..."

"எப்படியுங்க வாய்விட்டுச் சொல்லுறது... இரண்டு மூன்று பேராம்..." பளார் என்று மனைவியின் கன்னத்தை எனது கைகள் பதம் பார்த்தன.

"என்ன வளர்ப்பு வளர்த்திருக்கிறாய்...?"

"நான் சரியாகத்தான் வளர்த்தன். இப்ப ஊரே கெட்டுப் போயிருக்கு... நீலப் படங்களால இளைய தலைமுறையே நாசமாய்ப் போயிருக்கு..." எனக்குச்

சுரீரென்றது. நெஞ்சில் சம்மட்டி கொண்டு தாக்கியது போலிருந்தது.

நான் செய்த கேவலமான தொழில் எனது மகளின் வாழ்வையே பாழடித்து விட்டதே என்று நினைத்தேன். இப்போது என்ன செய்யலாம் என்று புரியாமல் குழம்பித் தவித்தேன்.

மகளின் உயிரைக் காப்பாற்றி, அவளின் எதிர்காலத்தைச் செப்பனிட வேண்டுமானால், முதலில் கருக்கலைப்புச் செய்ய வேண்டும். எங்கே செய்யலாம் என்று தேடி அலைந்தேன். இறுதியில் கருக்கலைப்புச் செய்யும் ஒரு போலி வைத்தியரின் விலாசம் கிடைத்தது. அங்கே போனால் பெருந்தொகைப் பணம் செலுத்துவதுடன், மகளையும் ஒரு இரவுக்குத் தாரை வார்க்க வேண்டும் என அறிந்தபோது மனம் குமுறியது.

'சீ இந்தத் தாயக பூமியே கெட்டுச் சீரழிந்து விட்டதே... இப்படியான சீரழிவுக்கு நானும் காரணமாயிருந்து விட்டேனே... நான் விநியோகித்த நீலப்படங்கள் எத்தனை இளசுகளுடைய வாழ்வைப் பாதித்திருக்கும்?' மனது இரத்தக் கண்ணீர் வடித்தது.

மகளை அந்த வைத்தியரிடம் அழைத்துச் சென்று, ஒரு இரவுக்கு தாரை வார்த்துக் கொடுக்காமலிருப்பதற்கு இன்னும் மேலதிக பணம் செலுத்தி கருக்கலைப்புக்கு அனுமதித்தேன். வீட்டில் குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்பதால் மனைவியை மகளோடு அங்கு விட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றேன்.

மறுநாள் நான் வைத்தியசாலைக்குச் சென்றபோது பேரிடி காத்திருந்தது.

என்னைக் கண்டதும் மனைவி "ஐயோ... தாரிணி எங்களை விட்டுப் போயிட்டாளே..." என்று விழுந்து கதறி அழுதாள். நான் திகைப்போடு விரைந்தேன்.

கருக்கலைப்பின் போது இரத்தம் பெருகி மகள் இறந்து போயிருந்தாள்.

"கடவுளே... நான் செய்த அநியாயத்திற்கு என்னைத் தண்டித்திருக்கலாம்... என்ரை செல்லத்தைக் கொண்டு போட்டியே... எப்படித் தாங்குவேன்..." கதறி அழுதேன்.

நீலம் சிவப்பாகப் பெருகி என் வாழ்வு கறுப்பாக மாறி இருண்டு போனது.

– சுடர்ஒளி *(2005)*






ஆனந்தன் கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் நாலு மணியைத் தாண்டிவிட்டது. வேலை இன்னும் முடிவதாயில்லை. மேசைமேல் கோப்புகள் மலை போல் குவிந்திருந்தன. வேலை முடியும் வரை நின்றால் மேலதிக நேரக் கொடுப்பனவு கிடைக்கும். வாழ்க்கைச் செலவு விண்ணைத் தொடுமாப்போல் உயர்ந்திருக்கும் இந்த நாளில் இப்படிக் கிடைக்கின்ற மேலதிக வருமானம் தான் கைகொடுக்கும். எனினும் இன்று நிற்க முடியாது. நேரத்திற்குப் போகாவிட்டால் வதனா உயிரை வாங்கி விடுவாள்.

வேலைகளை போட்டது போட்டபடியே விட்டு விட்டு வீட்டிற்கு விரைந்த ஆனந்தனை வாசலிலேயே எதிர்கொண்ட வதனாவின் புருவம் நெற்றிக்கு வர, அதிசயமாக அவனை உற்றுப் பார்த்தாள். அந்தப் பார்வையில் தெரிந்த கிண்டல் அவனுக்குச் சினத்தை ஏற்படுத்தியது. எனினும் கோபத்தை அடக்கிக் கொண்டு "என்ன வதனா?" என்றான் கனிவோடு.

''ஒரு நாளுமில்லாத அதிசயமாக இருக்கு. இவ்வளவு நேரத்தோடே நீங்க ஒருநாளும் வீட்டுக்கு வந்ததில் மழை வரும்.''


''நீதான் காலையிலேயே வரும்படி சொல்லியிருந்தாயே? அதுதான் ஓவர்ரைம் வேலையையும் விட்டு விட்டு வந்து விட்டேன்.''

''நான் சொன்னதால தான் வந்தீங்களா?'' உடையை மாற்றிக் கொண்டிருந்த அவனை நோக்கினாள்.

''வரவேணுமென்று நீங்களாகவே நினைத்து வரவில்லை.''

இடக்கு மடக்காகக் கேட்கும் வதனாவுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் திகைத்துப்போய் நின்றான் ஆனந்தன்.

''நான் இங்கே தனியாக மாடு மாதிரி உழைக்கிறேன் என்கிற எண்ணமே உங்களுக்கு இல்லை. காலையிலிருந்து எழுந்து சமையல் முடித்து பாடசாலைக்குச் சென்று மாணவர்களோடு மாரடித்து, திரும்பி வந்த பின்னரும், களைப்பாக இருந்தாலும் கூட சோர்ந்து படுக்காமல் மறுபடி வீட்டு வேலைகள் செய்து மாயுறன். பாடசாலை வேலை, வீட்டு வேலை என்று இரட்டைச் சுமையோட தள்ளாடுறது பற்றி உங்களுக்கு எதுவித அக்கறையோ, அனுசரணையோ கிடையாது. சரி சரி மேல் கழுவிவிட்டு கெதியிலே வாருங்கோ... தேநீர் தயாரிக்கிறேன். ரவுனுக்குப் போக வேணும்.''



"ஏன்?" அவனது புருவங்கள் இப்போது நிமிர்ந்தது. "நாளைக்கு என்ன நாள் என்பது கூட நினைவில்லாமல்..." என்றபடி மகிழ்வோடு அவனை நோக்கினாள். அவன் புரியாதவன்போல் விழித்தான். "ம்... என்ன விசேடம்?"

"ஐயோ மண்டு! அலுவலகமும் வேலையும் தவிர வேறொன்றும் நினைவில் இராது... எனக்குப் பொல்லாத ஒரு சிடு மூஞ்சியைக் கடவுள் தந்த நாள்... எங்கட கலியாண நாள். இது கூட நினைவில்லாமல்" அவள் செல்லமாக அவனைக் கண்டித்தாள். "இப்ப கடைக்குப் போவோம்... முதல்ல உங்களுக்கு ஒரு புது செட் உடுப்பு வாங்குவம்.

அப்புறம்'' இவள் சொல்ல முன்னே அவன் இடைமறித்தான். "இப்ப என்ன அவசரம்? இருக்கிற உடுப்புகளைக் கொண்டு சமாளிக்கலாம். அம்மாவுக்கு உடுப்பு எடுத்துக்கொடுப்போம்."

வதனாவுக்கு மூக்கின் மேல் கோபம் வந்தது. "தீபாவளிக்கு நீங்கள் சொல்லாமலே அவவுக்கு உடுப்பு எடுத்துக் கொடுத்தேன். எங்களுக்கு உடுப்பு ஒன்று கூட எடுக்காமல்.."

"எனக்கு வேண்டாம். உனக்கு ஒரு சாறி எடுப்போம்'' என்று அவன் கூறியிருந்தால் அவள் மகிழ்ந்திருப்பாள். ஆனால் அவன் அவளை விட அம்மா மீது காட்டிய அக்கறை இவளுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை. எனினும் அவனது முகம் இருண்டு போவதைக் கண்டு "சரிசரி... எடுத்துக்கொடுப்போம். உங்களுக்கு வாங்குவோம்."

கடைத்தெருவுக்குச் சென்று சல்லடை போட்டு அவனுக்கு ஒரு லோங்ஸ், நசனல் மேலுடை என்பவற்றோடு மாமிக்கு ஒரு சேலையையும் தெரிவு செய்தாள். வதனா தனக்கும் ஒரு சேலை வாங்க விரும்பினாலும், கணவன் கேட்காததால் அவளது மனம் வாடிப்போனது. எனினும் எத்தனை ஏமாற்றமாக இருந்தாலும் அத்தனையையும் தன்னுள்ளே புதைத்துக் கொண்டாள். எவ்வளவு கவலைகள் இருந்தாலும், அதை மறந்து சுறுசுறுப்பாகவேயிருப்பது அவள் சுபாவம்.

"அது சரி, நாளைக்கு என்ன பிளான்?"

"இங்கே உன் விருப்பப்படியே தானே எல்லாம். நீயே சொல்லு..."

அவள் சிரித்தாள். "எப்பவும் உங்களுக்குப் பகிடி தான். ஊருலகத்தில் பொல்லாத பொம்பிளையளை நீங்கள் பார்க்கவில்லை... ம்... கோயிலுக்குப் போலாம். மத்தியானம் ஸ்பெசல் லஞ்ச். சிவாவையும் மேகலாவையும் கூப்பிட்டிருக்கிறேன்."

"நாளைக்கு சனிக்கிழமையெண்டாலும் ஓவர்ரைம் செய்யலாம் என்று யோசித்திருந்தவன் இப்ப எல்லாமே அப்செற்."

"ஐயோ கொஞ்சம் கூட சைக்கோலாஜி தெரியாத மனுசன் உங்களைக் கட்டின நேரம்...ம்" அவள் சலித்துக் கொண்டாள்.

இரவு சாப்பாடு முடிந்ததும் அவள், "மாமி சரியான மோசம்..." என அவனது அம்மாவைப் பற்றி ஏதோ சொல்ல ஆரம்பிக்க. "நிற்பாட்டு உனக்கு மட்டும் பெரிய சைக்கோலொஜி தெரியுமாக்கும்" என்று இடை மறிக்கவே அவளது முகம் ஓடிக் கறுத்துவிட்டது. "இல்லை நான் சொல்லுறதை ஒருக்கால் கேளுங்கோ" வதனா மீண்டும் சொல்ல ஆரம்பிக்க அவளைப் பேச விடாமல் அடக்கிச் சீறிப் பாய்ந்தான்.

"நான் சொல்லுறது உனக்கு விளங்கேல்லையோ?" அவனது அதட்டலில் அவள் விக்கித்துப் போனாள். மனதிலிருந்ததைச் சொல்லி ஆறுதல் பெற வந்தவளின் மனம் இன்னும் அதிகமாக உடைந்து நொருங்கியது.

அதே நேரம் ஆனந்தனோ, அம்மாவின் பிரச்சினையைக் கதைக்க வெளிக்கிட்டு, வீண் வாக்குவாதம் ஏற்பட்டு இந்த இனிமையான சூழலை இழந்து மனஸ்தாபமடைவதைவிட பேசாமலிருப்பது மேலென்று நினைத்தான். என்னதான் குற்றம் குறை இருந்தாலும் அம்மாவை விட்டுக்கொடுக்க அவன் மனது இடம் கொடுப்பதில்லை. யாருக்குத்தான் முடியும்?

வதனா விசும்பத் தொடங்கினாள். அவன் சூழ்நிலையின் இறுக்கத்தைத் தவிர்க்க வெளியே சென்றான். அவளோ அவன் ஆறுதல் சொல்லாமல் அப்பால் சென்றதும் மேலும் புண்பட்டுப் போனாள்.

வெளியே வந்த ஆனந்தன் தொலைக்காட்சியைப் போட்டுவிட்டு கதிரையில் அமர்ந்தான். பேச்சைத் தவிர்க்க வெளியே வந்த இவனுக்கு, அறையிலிருந்து வதனாவின் வார்த்தைகள் பளீர் பளீர் என்று சாட்டையாய் விளாசிக் கொண்டிருந்தன.

வீடு என்பது அமைதி தழுவும் இடம்; மகிழ்ச்சி அளிக்கும் இடம்; மனைவி என்பவள் எல்லா மனக்காயங்களுக்கும் ஆறுதல் தருபவள் என்பதெல்லாம் எவ்வளவு பொய் என அவன் நினைத்துக் கொண்டிருக்க, வதனாவும் அதே மாதிரியே நினைத்து வெதும்பினாள். ''உங்களைக் கட்டி நான் என்ன சுகத்தைக் கண்டன்?''

அவன் எழுந்து உள்ளே வந்து அவளைப் பார்த்துக் கேட்டான். ''உனக்கு இப்ப என்ன வேணும்?... ஏன் காட்டுக் கூச்சல் போடுகிறாய்...?''

அவளது முகம் விகாரமானது. "எனக்கு ஒண்டும் வேண்டாம்... ஒருத்தரும் வேண்டாம்... போய்த் தொலையுங்கோ..."

இப்போது ஆனந்தனின் முகம் இருண்டது. பற்களை நற நற என்று கடித்துக் கொண்டான். கையருகிலிருந்த பொருட்களை எல்லாம் எடுத்தெறிந்தான். தலையைப் பிய்த்துக் கொண்டு கட்டிலில் சாய்ந்தான். வதனா, அதன் பிறகு எதுவுமே பேசவில்லை. விசும்பத் தொடங்கினாள்.

யாரோ வாசற் கதவைத் தட்ட தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ஆனந்தன் வெளியே வந்து வாசற் கதவைத் திறந்து வந்தவருக்குப் பதில் சொல்லி அனுப்பி விட்டுத் திரும்பினான். அவன் அவளருகே வந்து ஆறுதல் சொல்வான் என்று எதிர்பார்த்த அவளுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது.

வதனா மாமியுடன் ஒருபோதும் மோதிக் கொள்பவள் அல்ல. உண்மையிலேயே நல்ல பாசம்தான். எதிலும் அவருக்குக் குறைவைப்பதில்லை. எனினும் அவரின் சில நடவடிக்கைகள், தலையீடுகள் பிடிக்காத போது இரவில் கணவனிடம்தான் சொல்வாள்.

அம்மா எவ்வளவுதான் பிழை என்றாலும், அதை மனைவி சுட்டிக்காட்டும் போது மனதிற் என்னவோ செய்யும். எனவே அப்படியான கதைகளைத் தன்னிடம் சொல்ல வேண்டாம் என்று ஏற்கெனவே கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறான். எனவே வதனாவும் மாமி பற்றி

கதைப்பது குறைவு. ஆனால் இன்று மாமியின் குற்றச்சாட்டு அவள் மனதில் ஆழமாகத் தைத்துவிட்டது. அவளால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இப்போது சில நாட்களாக இப்படியான சில அழுத்தங்களால் அவளது மனதில் ஏற்பட்ட எரிச்சல் வெளியே கொட்டித் தீர்க்கவும் முடியாமல் உள்ளே அணைத்து விடவும் முடியாமல் மூளாத் தீ போல் உள்ளே கனன்று கொண்டிருந்தது. ஆறுதல் பெறலாமென்ற எதிர்பார்ப்பு இல்லை என்றானபோது அவளது மனது துவண்டு எரிச்சல் கொள்ளத் தொடங்கியது.

வதனாவுக்கு வீட்டு வேலை அதிகம். ஆனந்தனும் எப்பொழுதும் வேலை வேலை என்று திரிவான். வதனா அவனைக் கைப்பிடித்த நாளிலிருந்து எல்லா வேலைகளையும் அவளே பார்த்து நிர்வகிக்கட்டும் என ஆனந்தன் ஒதுங்கி நின்றதால் பொருட் கொள்வனவு, வெளிவேலைகள் எல்லாவற்றையுமே வதனாதான் செய்ய வேண்டியிருந்தது. இதனால் அடிக்கடி அவள் வெளியே செல்ல வேண்டிய தேவையிருந்தது.

அவள் ஊர் சுற்றுகிறாள் என்ற மாமியாரின் குற்றச்சாட்டு ஏற்படுத்திய தாக்கத்தைவிட, அதுபற்றிக் கணவனிடம் சொல்லவந்த போது, அதைக் கேட்க அவன் மறுத்து நிற்பதை அவளால் தாங்க முடியவில்லை. இன்றைய இயந்திர உலகில் பெண்கள் வீட்டுக்குள்ளே அடைந்துகிடக்க வேண்டும் என்று நினைக்கின்ற மாமியின் பழமை வாதத்தை நிராகரித்து அவளுடன் மனம் விட்டு அவனும் சேர்ந்து கதைத்தால்

ஆறியிருப்பாள். அதற்கு மேல் ஒப்படை விளக்கம் என்று எதையுமே அவள் எதிர்பார்க்கவில்லை.

அவன் அவளைச் சமாதானப்படுத்தாவிட்டாலும் அவன் பணிந்து போக ஒரு கணம் எண்ணினாள். விட்டுக் கொடுப்புகள்தான் வாழ்க்கையின் கரடு முரடுகளைச் சீர்படுத்தி இன்பமாக்கும் என்பதை வதனா உணர்ந்திருந்தாள். விட்டுக் கொடுப்பதில் ஒருவித இன்பம் ஒளிந்திருப்பதையும் திருமண வாழ்வின் ஆனந்தமே விட்டுக் கொடுப்புதான் என்பதையும் அவள் அனுபவ ரீதியாக உணர்ந்து செயற்பட்டிருக்கிறாள். ஆனால் எப்பொழுதுமே பெண்தான் விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற நிலை அவளுக்குச் சலிப்பை ஏற்படுத்தியது.

அவனுக்கும் அவளுக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டு கோபித்த சந்தர்ப்பங்களில் எல்லாம் அவள்தான் சிறிது நேரத்தின் பின்னர் இறங்கிவந்து அவனிடம் மன்னிப்புக் கேட்பாள். சரியோ, பிழையோ எப்போதும் அவள்தான் இறங்கிவர வேண்டும் என்ற அவனது வக்கிரப் போக்கு அவள் மனதில் ஒரு பூகம்பத்தை ஏற்படுத்தும் நிலையில் நீறுபூத்த நெருப்பாக எரித்துக் கொண்டிருந்ததில் வியப்பில்லை.

இன்று அவன் கோபித்தபோது இதன் வெப்பம் தாங்க முடியாமல் அவள் குமுறினாள். இதனால்தான் இன்று தாக்கம் அதிகரித்தது. நடந்து முடிந்த தர்க்கத்தின் பின் இன்னமும் இருவரும் பேசிக்கொள்ளவில்லை.

லைற்றை அணைத்து விட்டு அவனும் படுத்துக் கொண்டான். பல சந்தர்ப்பங்களில் ஊடலின் பின்னர்

கூடல்தான் பிரச்சினைகளுக்கு முடிவு காண உதவுவது. எனினும் இன்று இருவரும் நெருங்கவில்லை. இரவு இருவருக்கும் நீண்டுகொண்டு போனது. எப்போது உறங்கியது என்று தெரியாமலே இருவரும் உறங்கிப் போயினர்.

மறுநாள் காலை கண்விழித்தபோது வதனாவின் மனது சற்று ஆறியிருந்தது. அவன் இன்னமும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து அவனை எழுப்பினாள். கண்விழித்த ஆனந்தன் அவளை நோக்கி முறுவலித்தான். தேநீரை அருகில் வைத்துவிட்டு அவளை அழைத்தான். அவளும் பிகு பண்ணாமல் அருகே வந்தாள். தேநீரை எடுத்து அவளிடம் நீட்டினான். "நீங்க குடியுங்க" என்று நாணத்தோடு கூறினாள். அவன் தேநீரை அருந்தி மீதியை அவளிடம் கொடுத்தான். இப்போது அவள் வாங்கிக் குடிக்க முன்னைய இரவு முரண்பாடுகள் மறைந்து இப்போது இருவர் மனதிலும் முதலிரவு ஞாபகங்கள் மலர்ந்தன. மீண்டும் அவளிடம் தேநீரைப் பறித்து அருந்தினான்.

"என்னிலை கோபமா குஞ்சு?" அன்போடு அவளை அணைத்துக் கேட்கையில் அவளது கண்களில் ஈரம் பூத்தது. இது ஆனந்தக் கண்ணீர்.

"நான்தான் பிழை... வாய்க்கு வாய் காட்டியிட்டன்... நீங்கள் தான் என்னை மன்னிக்க வேணும்..." அவளது வார்த்தையில் அவன் உருகிப் போனான். "இப்ப சொல்லும்... அம்மாவைப் பற்றி என்ன சொல்ல வந்தனி?"

"ஒன்றுமில்லை..."

"பரவாயில்லை. சொல்லும் நான் கோவிக்கமாட்டன்."

"வயசு போனதுகள் கதைக்கிறதை தலையில் தூக்கிப் போடத் தேவையில்லை. அவை பழமையில் ஊறிப்போனவை. நாங்கள் தூக்கிப் பிடிக்கத் தேவையில்லை. விடுங்கோ. மாமிக்கு தேத்தண்ணி கொடுக்க வேணும்..."

"கொஞ்சம் பொறும்... என்ர ஒபிஸ் பாக்கை ஒருக்கால் எடும்..."

அவள் எடுத்து வந்து கொடுத்தாள்.

ஆனந்தன் அதைத் திறந்து ஒரு பார்சலை எடுத்து அவளிடம் நீட்டினான். உள்ளே அவள் வாங்க விரும்பிய பட்டுச்சேலை!

"எப்ப வாங்கின்னீங்கள்?"

"வேலையால வரும்போது வாங்கியிட்டன்."

"அப்ப ஏன் நேற்றுத் தரவில்லை?"

"இன்றைக்கு நல்ல நாளும் அதுவுமாக தருவம் என்று நினைச்சன்... பிடிச்சிருக்கே?"

"நல்ல தெரிவு" வதனா மகிழ்வோடு கூறினாள்.

"எழும்பிக் குளியுங்கோ... கோயிலுக்குப் போக வேணும்... மாமிக்கு தேத்தண்ணி கொடுத்துவிட்டு ஓடிவாறன்."

அவள் தேநீருடன் மாமியிடம் சென்றபோது மாமி அவளை அன்போடு அழைத்தாள். 'இரு பிள்ளை' என்றவர் தனது கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றி வதனாவின் கழுத்தில் அணிந்தாள். வதனா நெஞ்சுருக "இதெல்லாம் ஏன் மாமி?" என்றாள்.

"இன்றைக்கு உங்கட கலியாண நாள்" என மகிழ்வோடு கூறிய மாமியின் பாதங்களில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிய வதனாவின் மனம் பூவாய் மலர்ந்தது.

இனி இந்த நாள் அவர்களுக்குக் கொண்டாட்டம் தான்!

*– தினக்குரல் (2007)*





# இதோ எந்தன் காதலி

எனக்குள்ளும் காதல் வரும் என என்றுமே நான் கனவில் கூட நினைத்ததில்லை. இருபது வயது இளைஞனின் கூற்றா இது என நீங்கள் நினைக்கலாம். ஆனால், அது முற்றிலும் உண்மை.

காதலின் தெய்வீகங்கள் தோலுரிந்து சுய ரூபம் காட்டிய மானுடக் காதல்கள் சிலவற்றைச் சந்தித்த அனுபவம் தந்த வெறுப்புத்தான் காரணம். உயிருக்குயிராக இரண்டு வருடம் காதலித்த எனது அக்காவின் காதல் கலியாண மேடையில் சீதனத்தகராறில் சிதைந்து போனதைக் கண்ட அனுபவ வடுக்கள் ஒரு புறம். எனது நண்பனின் அண்ணாவை ஆறுமாதம் காதலித்தவள் அவனது சாதியில் சிறு வேறுபாட்டைக் கண்டு, பின்னர் காதலிக்கவேயில்லை என்று பச்சைப் பொய் கூறி அவனது தற்கொலை முயற்சிக்கு வித்திட்ட கொடுமையைத் தரிசித்த இன்னொரு அனுபவம். காதலித்து கட்டிய அம்மாவும் அப்பாவும் இன்று கீரியும் பாம்புமாக மோதலுடன் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்வதை சிறு வயதிலிருந்தே

பார்த்த கசப்பான அனுபவம். இவை எல்லாம் கூட்டாகச் சேர்ந்து எனக்குக் காதலில் நம்பிக்கையீனத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்ததில் வியப்பில்லை.

இப்போது வியப்பான விவகாரம் என்னவென்றால் எனக்குள்ளும் காதல் அரும்ப ஆரம்பித்ததுதான். கண்கள் பொல்லாதவை தான். அதிலும் இளம் பெண்களின் மான் விழிக் கண்கள் மிகப் பொல்லாதவை என்பதை இப்போது தான் உணர்ந்து கொண்டேன். முதல் முறை நெருக்கமான அந்த பஸ் பயணத்தில் மூச்சுப் படுமளவு அருகாமையில் என்னை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்து, பின் பார்வையை விலக்கிக் கொண்ட அந்த இரு விழிகளும் கடந்த சில நாட்களாக என் தூக்கத்தில் பாதியை விழுங்கிக் கொண்டிருந்தன.

அவள் அழகியா? பேரழகியா? பொன் நிற உடலா? நல்லவளா? பெண்மைக்கேயுரிய இலட்சணங்கள் நிறைந்தவளா? இவை எதுவுமே என் சிந்தையைத் தொடவில்லை. அந்த அழகிய இரு மீன் விழிகள் தான் மீண்டும் மீண்டும் என் இதயத்தை வருடி இன்பத் தவிப்புக்குள்ளாக்கியது. அவள் எனக்காகவே பிறந்திருப்பதாக என் உள் மனம் ஒலித்துக் கொண்டே இருந்தது. அவளது அடுத்த சந்திப்புக்காய் மனம் ஏக்கம் கொண்டு தேடி அலைந்தது.

அடுத்த சந்திப்புக்கான காத்திருப்புக்கள் காலத்தை விழுங்கி ஏப்பம் விட, ஏகாந்தமாய் எந்தன் மனம் எங்கோ தொலைவில் இருப்பதைத் தேடித் தேடித் தேய்ந்து கொண்டிருந்தது. எங்கும் அவளைத் தேடும் படலம் தொடர்ந்தும், வெற்றியின்றி எட்டாக் கனியின் மன

நிலையில் மனம் வெதும்பியிருந்தபோது தான் மறுசந்திப்புக்கான சந்தர்ப்பம் எதிர்பாராமல் கூடிவந்தது.

அதிகம் ஆலயம் செல்லாத என்னை ஆண்டவன்தான் தன்னிடம் அழைத்திருக்க வேண்டும். அம்பிகை தரிசனத்தில் சற்று மூழ்கி கண் விழித்தபோது எதிரே அவளின் தரிசனம் நிதர்சனமானது. நெஞ்சை விட்டகலாத அந்த விழிகள் என்னை நோக்காது அம்பிகையின் அருள் வேண்டி நிற்கையில், என் கண்கள் அவளை நோக்கி அம்பிகையை மறந்து போனது. அவளிடமிருந்து ஒரு அறிமுகப் புன்னகையை எதிர்பார்த்த எனக்கு ஏமாற்றமே பதிலானது. அவள் ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் ஆண்டவனுடன் சங்கமமாகி, அர்ச்சனைச் சீட்டை பூசகரிடம் நீட்டினாள். பெயர் மோகன், நட்சத்திரம் சுவாதி என அவள் சொன்னதும் என் கற்பனைக் கோட்டைகள் எல்லாம் பொல பொல என்று சரிய ஆரம்பித்தன.

வழிபாட்டை முடித்துக்கொண்டு அவள் வந்தபோது நான் ஆவலுடன் எதிர்பார்த்த இருசோடிக் கண்களின் சங்கமிப்பில் ஒரு கணம் ஆடித்தான் போனேன். பார்வையைப் பட்டென்று முறித்துக் கொண்ட அவளது கண்களில் ஏதோ ஒன்று தொலைந்து போயிருப்பதாக உணர்ந்தேன். எதிரே இன்னொருத்தி அவளைக் கண்டதும் அறிமுகப் புன்னகையுடன் 'அகல்யா' என்று அழைத்தாள். என்னவளின் பெயர் அகல்யா என்பதை அறிந்து கொண்ட அந்தக் கணத்தில் மனதில் அந்த முகம் தெரியாத மோகனை சபித்தபடி அவர்களின் உரையாடலில் உத்தரவின்றிக் காதைக் கொடுத்தேன்.

"மோகனைப் பற்றிய சேதி ஏதும் கிடைத்ததா அகல்?" புதியவள் கேட்டாள். இவளது கண்களின் ஓரம் பூத்த ஈரத்தை மறைக்க முடியாமல், மறைக்கவும் தோன்றாமல் "இல்லை கீதா..." என்று உதட்டைப் பிதுக்கினாள்.

சிறிது நேரம் தன் சினேகிதி கீதாவுடன் கதைத்து விட்டு அவள் போய்விட்டாள். மனதில் உருக்கொண்ட ஏமாற்றத்துடன் 'என் முதல் நாள் காதலுக்கு ஆரம்பத்திலேயே முடிவு வந்துவிட்டதே' என்று எண்ணியபடி, அவளைப் பற்றியும், அவளின் மோகனைப் பற்றியும் அவனுக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் அறிய வேண்டும் என்ற ஒருவித மன உந்துதலுடன் கீதாவுடன் பேச்சுக் கொடுக்கலாமா என்று யோசித்து, அதையும் செயற்படுத்தும் வல்லமையின்றி நான் தடுமாறிக் கொண்டிருந்தபோது தான் 'தீபன்' என்று அழைத்தபடி நண்பன் சுகிர்தன் என்னருகே வந்து கொண்டிருந்தான். "என்ன, சந்நியாசிக்கும் காதல் வேண்டுதோ... நீ பார்த்துக் கொண்டிருக்கிறது என்னுடைய ஆளடா..." என்று சிரித்தபடி கூறினான்.

"வாடா கீதாவை உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்... என்னுடைய எதிர்காலம் இவள்தான்..." என்று கண்சிமிட்டியபடி கீதாவிடம் என்னை அறிமுகப்படுத்தினான். "இவன் தீபன்... என்னுடைய சினேகிதன்..." நான் அறிமுகப் புன்னகையை உதிர்த்துவிட்டு விடைபெற்றேன். முகம் சிரித்துக் கொண்டிருந்தபோதும் என் மனம் அழுது கொண்டிருந்தது. இவ்வளவு அழகான பெண்ணுக்கு ஒரு காதலன் இல்லாதிருப்பான் என்று நான்

எப்படி எதிர்பார்க்க முடியும்? Better Never Than Late என்ற பழமொழிதான் என் நினைவுக்கு வந்தது.

வீட்டிற்குச் சென்ற பின்பும் மனது அழுது கொண்டிருந்தது. எதிலும் பற்றுடனும், சுறுசுறுப்பாகவும் இருக்க முடியவில்லை. அன்றிரவும் அவள் நினைவுகள் என்னை ஆக்கிரமித்திருந்தன. அந்தக் கண்களின் சோகத்திற்கு ஒத்தடம் கொடுக்க வேண்டும் போல ஒரு உந்தல். இடையிடையே அந்த முகம் தெரியாத மோகன்... 'ஓ... அவனுக்கு என்ன நடந்திருக்கும்? அப்படியே தொலைந்து போகட்டும்' என மனம் குரோதமாக எண்ணியது.

காதல் என்பது எவ்வளவு சுமையான சமாச்சாரம் என்பது புரிந்தது. சுவையும், சுமையும் என்று மனிதனைப் போட்டு உலைப்பதுதானா காதல்? ஒருதலை ராகமே இப்படியென்றால், மனமொத்த காதல்...?

அடுத்த சில நாட்கள் கிட்டத்தட்ட ஒரு நடைப்பிணமாகவே திரிந்தேன். எதிலும் மனது ஒன்றவில்லை. ஒரு பெண்ணின் நினைப்புக்கு இவ்வளவு சக்தியா?

ஒரு வாரம் ஓடியிருக்கும். அன்று தபால் நிலையத்தில் நின்றபோது 'தீபன்' என்று இனிமையான ஒரு அழைப்பு. திரும்பிப் பார்த்தேன். 'கீதா!' "சுகிர்தனைக் காணுவீர்களா? நான் நாளைக்கு கொழும்பிற்குப் போவதாகச் சொல்லுங்கள்..." சரி என்று தலை அசைத்த போதுதான் மனதில் திடீரென்று ஒரு மின்னல், 'இவளிடம் அகல்யாவைப் பற்றி கேட்கலாமா?'

செயலில் இறங்கினேன்.

"உங்க பிரண்டு அகல்யா...–" தொடர்ந்து என்ன கேட்பது என்று தயக்கம்... "மோகனுக்கு என்ன நடந்தது?" ஒருவாறு கேட்டு முடித்தேன். கீதா ஒரு கணம் என்னை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களிலும் ஒருவித கலக்கம்.

"போன மாதம் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது சோதனைச் சாவடியிலை வைச்சுப் பிடிச்சுட்டாங்கள். இன்று வரை எங்கேயென்றும் தெரியவில்லை. ஒரு முகாமிலும் இல்லை என்று சொல்லுகிறார்கள்... கீதா சொல்லச் சொல்ல மோகனின் மீது அனுதாபம் ஏற்படுத்துவதற்குப் பதிலாக மனதில் குரூரமான மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல், "அவங்கள் பிடிச்சால் முடிச்சாலும் முடிச்சிருப்பாங்கள்..." என்று அனுதாபக் குரலை வரவழைத்துக் கொண்டு கூறினேன்.

"உண்மைதான்... எங்களுடைய மண்ணில் தினம் தினம் எத்தனையோ புதைகுழிகள் தோன்றிய வண்ணமே இருக்கு... அகல்யாவுக்கும் அதுதான் பெரும் கவலை... பாவம் மோகன். அவளுக்கு ஒரே ஒரு தம்பி..." கீதாவின் வார்த்தைகள் தேனில் குழைத்த பாகாய் இனித்தன.

அதேவேளை நான் எவ்வளவு முட்டாள்தனமான கற்பனை செய்து மனிதாபிமான மற்றவனாகச் சிந்தித்து விட்டேனே என்று வேதனைப்பட்டேன். இப்போது அகல்யாவின் தம்பிக்காக என் மனது அழுதது 'கடவுளே மோகனுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்பட்டு விடக்கூடாது...'

இப்போது மீண்டும் அகல்யாவின் நினைப்பில் மனதில் குதூகலம். எனினும் எனது எண்ணத்தை வெளிப்படுத்த இது ஏற்ற தருணம் இல்லை என்பதால், அடுத்தடுத்த சந்திப்புகளில் அகல்யா பற்றிய விபரங்களை மெல்ல மெல்ல கீதாவிடமிருந்து தெரிந்து கொண்டேன்.

“என்ன வலு அக்கறையாக விசாரிக்கிறீங்கள்?” கீதா சிரித்தாள். “அப்படி ஒன்றுமில்லை” என்று அசடுவழியச் சிரித்த என்னை நோக்கி, “உங்களுடைய ஒன்றுமில்லையிலேயே ஏதோ இருப்பது தெரிகிறது” என்றாள்.

நாட்கள் நகர்ந்தபோது எனது மனக் கிடக்கையை கீதாவிடம் மறைக்க முடியவில்லை. இறுதியில் ஒப்புக் கொண்டதுடன் அவளது உதவியையும் நாடினேன். காலம் கவலைகளை மறக்கச் செய்திருக்கலாம் என்பதால் அகல்யாவைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்படி கீதாவிடம் வேண்டினேன். “அவசரப்பட்டு போட்டு உடைத்து விடாதீர்கள். முதலில் நட்போடு பழகுங்கள். பின்னர் சூழ்நிலை சாதகமாக வரும்போது உங்கள் விருப்பைத் தெரிவிக்கலாம்... அகல்யா நல்ல பிள்ளை...” என்று கீதா எனக்கு ஆலோசனை கூறினாள்.

அகல்யாவின் அறிமுகம், நட்பு, அவளது குடும்ப உறுப்பினர்களின் அறிமுகம் என அடுத்த சில நாட்கள் என் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. அகல்யாவின் தம்பியைப் பற்றிய தகவல் ஏதும் கிடைக்காததால் அவளது வீட்டில் இன்னமும் துயரம் இழையோடியிருந்தது. என் மனவிருப்பை செயல்களில்

காட்டினாலும் அகல்யாவிடம் அது புற்றி பேசும் நாளுக்காகக் காத்திருந்தேன். அதற்கேற்ற சூழ்நிலையும் விரைவிலேயே ஏற்பட்டது.

ஒரு நாள் என் அலுவலக வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்பும்போது அகல்யாவின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அகல்யா இருக்கவில்லை. அம்மா தான் வரவேற்று உபசரித்தார். தேநீரை அருந்திக் கொண்டிருந்த போது என்னைப் பற்றி, எமது குடும்பம் பற்றி எல்லாம் விசாரித்தார். விரைவிலேயே அகல்யாவுக்கு ஒரு இடம் பார்த்து அவளை இல்வாழ்வில் இணைத்து விடும் எண்ணம் பற்றிப் பேசியவர், நேரடியாகவே விடயத்திற்கு வந்தார். "தீபன் உங்களுடைய எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" அந்தக் கேள்வியின் அர்த்தம் புரிந்தபோது புல்லரித்தது.

நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தபோதே அகல்யாவும் வந்து விட்டாள். பின்னர் அவளோடு தனியே உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. நான் ஒருவாறு என் மனக் கிடக்கையை அவளிடம் தெரிவித்தேன். அவள் ஒரு கணம் திகைத்து போய் என்னை நோக்கினாள். பின்னர் எதுவுமே சொல்லாமல் எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

கொஞ்சம் எதிர்பார்ப்புடனும், கொஞ்சம் ஏமாற்றத்துடனும் மனதில் ஏற்பட்ட நம்பிக்கையுடன் விடைபெற்றேன். மனதில் ஒருவித இனம் தெரியாத குதூகலம் நிறைந்திருந்தது. அவள் மறுக்கவில்லை என்பது தெம்பூட்டியது.

இரண்டு நாள் இடைவெளியில் மீண்டும் சந்தித்தேன். இம்முறை அவள் தைரியமாக என்னை எதிர்கொண்டு அமர்ந்திருந்து கதைத்தாள். "இப்போது சில நாட்களாக நான் உயிருக்குயிராகக் காதலிக்க ஆரம்பித்துள்ளேன். அதனால் உங்கள் அன்பான வேண்டுதலை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை."

நான் அதிர்ந்து அவளை நோக்கினேன்.

"யாரை...?"

அவள் சிரித்தாள் "என் தாயகத்தை..."

அவள் பதிலில் நான் குழப்பமடைந்தேன்.

"தீபன்... கொஞ்சம் சிந்தியுங்களேன். எங்கள் எரியுண்ட தேசம் பற்றி சிந்தியுங்களேன். எமது தேசத்தை ஆக்கிரமித்து எமது மக்களையும் உடைமைகளையும் எதிரி அழித்துக் கொண்டிருக்கிறான். இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று நீங்கள் எண்ணிப் பார்த்ததே இல்லையா?"

நான் ஏமாற்றத்துடன் விடைபெற்றேன். இரு நாட்கள் கழித்து அவள் போராளியாக இணைந்த செய்தி கிடைத்தது. மனது உறைந்து போனது. அடுத்த சில நாட்களாக அவளுக்காக அழுதழுது கண்ணீர் வற்றிப் போனது. ஆனாலும் விரைவிலே எனக்கும் ஒரு காதலி கிடைத்தாள்.

ஆம்! என் தாயகம் தான் என் காதலி!

– சுடர்ஒளி (2004)



# அஸ்தமனத்தில் ஓர் உதயம்

புரண்டு புரண்டு படுத்தும் தூக்கம் வராமல் தவித்த ரவி என்ன நினைத்தானோ தெரியவில்லை. திடீரென எழுந்தான். சுனாமி அகதி முகாமில் மூலைக்கு மூலை அரிக்கன் லாம்புகள் எரிந்து கொண்டிருந்தன. சுற்றும் முற்றும் பார்த்தான். அநேகர் உறங்கிக் கொண்டிருந்தனர். ஒரு சிலர் அங்குமிங்கும் அவனைப் போலவே தூக்கம் கலைந்து தவித்துக் கொண்டிருந்தனர்.

அவன் மனதில் கலக்கம். எப்படியெல்லாம் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் எல்லாவற்றையும் இழந்து இதோ நடைப்பிணமாகப் படுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொலைவே கடலின் அலையோசை கேட்டுக் கொண்டிருந்தது. வெளியே வந்த ரவி வானத்தை நோக்கினான். கண் சிமிட்டும் நட்சத்திரங்களிடையே

மங்கிப் போயிருந்த நிலவை வெறித்துப் பார்த்தான். மனம் அமைதியின்றித் தவித்தது. தினமும் இப்படித்தான் தூக்கத்தைத் தொலைத்து விட்டு இரவின் அமைதியோடு சங்கமித்துப் போவான். இரு வருடங்களுக்கு முன்புவரை பெரிய வீடொன்றில் சகல வசதிகளுடனும் மனைவி, பிள்ளைகளுடனும் வாழ்ந்தவன் இன்று இதோ தனிமரமாகி அகதி முகாமில் தவித்தபடி தற்கொலையில் நாட்டம் கொண்டு வாழ்கிறான். விதி யாரைத்தான் விட்டு வைத்தது. சுனாமி அகதி முகாமில் கட்டிலேது, மெத்தை ஏது? எல்லா இழப்புகளையும் அவனால் தாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் மனைவி சுமதி, குழந்தைகளான குமார், மது ஆகியோரைக் கணப் பொழுதில் கண்ணுக்கு முன்னால் பறிகொடுத்ததை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மனதில் அன்றைய அந்தக் காட்சிகள் விரியும் போதெல்லாம் அவனுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு வரும். தாங்க முடியாத துயர அலைகளில் முக்குளித்துத் தவிப்பான். ஓ... அலைகள்... அழகான இந்த அலைகள் இவ்வளவு கொடூரமானவையா? சின்ன வயதிலிருந்தே கடல் மடியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவன் இந்த அலைகளை எவ்வளவு நேசித்தான். அந்தக் கொடிய பகல் பொழுது... கடல் பெருகி வருகுது... ஓடுங்கோ... ஓடுங்கோ... என்ற கூக்குரலிட்டபடி பலர் ஓடி வந்தார்கள். நடப்பதை அனுமானிக்க முடியாமல் அவன் மூத்தவன் குமாரைத் தூக்கிக் கொண்டு ஓட மதுவைத் தூக்கிக் கொண்டு சுமதியும் பின் தொடர கூட்டத்தோடு கூட்டமாகக் கடலின் எதிர்த்திசையில் ஓடிக் கொண்டிருந்தார்கள்.



அவர்களை விட வேகமாகக் கடல் நீர் துரத்திக் கொண்டு வந்தது. முதலில் கால்களை நனைத்து வேகமாக இடுப்புவரை உயர்ந்து ஓடிக் கொண்டிருந்தவர்களை விழுத்தி அடித்துச் சென்றது கடல் நீர். தடம்புரண்டு விழுந்த ரவியின் கைகளிலிருந்து குமார் விலகிட, அவனும் நீரில் முக்குளித்தான். மிக வேகமாக அடித்துச் செல்லப்பட்ட ரவி கையில் அகப்பட்ட ஒரு மரக்கிளையைப் பற்றிக் கொண்டான். நீர் மட்டம் உயர்ந்ததுடன் கரையிலிருந்து வெகு தூரம் வரை சென்று இடைப்பட்ட பிரதேசங்களிலே இருந்தவற்றை எல்லாம் அடித்துச் சென்றது. ரவி வேகமாக மரக்கிளையில் ஏறி மரத்தின் உச்சிவரை சென்றான். அவனது தேகம் பயத்தினாலும், பதட்டத்தினாலும் நடுங்கிக் கொண்டிருந்தது.

மரத்திலிருந்து பார்க்கும் போது கடல் நீர் உருத்திர தாண்டவத்தினை முழுமையாகக் கொண்டிருந்தது. எத்தனையோ பேர் நீரில் முக்குளித்தபடி அடித்துச் செல்லப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். சிலர் கட்டிடங்களிலும் மரங்களிலும் வேகமாக மோதுண்டு பலியாகினர். கட்டிடங்கள், வாகனங்கள், மரங்கள் எல்லாம் அலை நீரின் வேகத்தால் சரிந்தன. தான் ஏறியிருக்கும் மரமும் சரிந்து விடுமோ என ரவி அஞ்சினான். மனைவி, குழந்தைகளைச் சுற்றுமுற்றும் பார்த்தான். எங்கும் காணவில்லை. ஆழிப்பேரலை அவர்களை அடித்துச் சென்று விட்டதோ - அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சற்று நேரத்தின் பின்னர் ஊருள் புகுந்த நீர் மறுபடியும் வடிய ஆரம்பித்தது. இதற்கிடையில் அவசர கால மீட்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு வள்ளத்தில் வந்த மீட்புப் பணியாளர்கள் ரவியையும் மீட்டனர்.

நீர் வடிய ஆரம்பித்து ஒரு சில மணித்தியாலங்களில் கடற்கரைப் பிரதேசமே மயான பூமியாகக் காட்சியளித்தது. மனைவி குழந்தைகளின் நினைவு மனதை நெருடவே மீட்புப் பணியாளர்களோடு அவனும் இணைந்து கொண்டான். சம வெளி போலாகியிருந்த கடற்கரைக் கிராமத்தின் சிதிலங்கள் மனதை உறைய வைத்தன. அணுகுண்டினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் போல் ஆங்காங்கே மனித உடல்கள் சிதறிக்கிடந்தன. ஆடையின்றியும், அரைகுறை ஆடையுடனும் பல பிரேதங்களை மீட்புப் பணியாளர்கள் மீட்டெடுத்தனர்.

மரங்களுக்கிடையேயும், முட்கம்பிகளிலும் சிக்குண்டு போய் சில உடல்கள் தரிசனமாகின. இன்னும் சில உடல்கள் இடிபாடுகளுக்கிடையேயிருந்து மீட்கப்பட்டன.

முதல் நாள் முழுவதும் தேடியும் அவனது மனைவி குழந்தைகளின் உடல்கள் கிடைக்கவில்லை. சுமதி, சுமதியென அவன் மனம் ஓலமிட்டது. பிஞ்சுக்கால்களால் உதைத்து விளையாடும் மதுவும், சுட்டித்தனங்கள் செய்யும் குமாரும் மனதில் ரணத்தை ஏற்படுத்தினர்.

விடியும் வரை உறக்கமின்றி அவனைப் போலவே பலரும் அழுது கொண்டிருந்தனர். எல்லையில்லா அன்பைப் பொழிந்து இன்பமாய் வாழ்ந்தவர்களைக் கணப்பொழுதில் கடலலை பறிகொடுத்ததை எப்படித்தான் தாங்கிக் கொள்ளமுடியும்? மறுநாள் காலை மறுபடியும் தேடுதலில் இறங்கினர். இன்று துர்நாற்றம் வீச ஆரம்பித்திருந்தது. மாலையில் ஒரு பனங்கூடலின் இடையே செருகுண்டபடி மதுவை அணைத்தபடியே சுமதியின் நிர்வாணமான உடல் மீட்கப்பட்டபோது ரவியின் உச்சிமீது வானிடிந்து வீழ்வது போலிருந்தது. மரணத்திலும் குழந்தையை கைவிடாத அவளது தாய்மையின் பெருமை பற்றி சில மீட்புப் பணியாளர்கள் உரையாடியபோது அவனது இதயம் உருகிக் கண்ணீர் பெருகியது.

''ஐயோ' என்ர சுமதி... மதுக்குட்டி... என்னைவிட்டுப் பொயிட்டியே... என்னையும் கொண்டு போயிருக்கலாமே'' என ரவி கதறி அழுதான். அவனை யாராலும் தேற்ற முடியவில்லை. அடுத்த சில நாட்கள்

தேடியும் அவனது மூத்தவன் குமாரின் உடல் கிடைக்கவில்லை.

அடுத்த சில நாட்களாக மீட்புப் பணியாளர்களுடன் இணைந்து அவனும் சென்று தேடினான். எங்கும் தேடியும் குமாரின் உடல் கிடைக்கவில்லை. சுற்றுப்புறம் எங்கும் ஒரே துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தது. ஈக்களும் காக்கைகளும், நாய்களும் மனித இறைச்சி உண்ணும் ஆர்வத்தில் இறந்த இடிபாடுகளுக்கு இடையே சிக்குண்டிருந்த சில உடல்களை அடையாளம் காட்டின.

இப்போது மீட்கப்படும் உடல்கள் எல்லாம் அடையாளம் காண முடியாமல் சிதைவுற்றிருந்தன. இனி மகனின் உடல் கிடைக்குமென்ற நம்பிக்கையை இழந்தான் ரவி.

சுனாமி அகதி முகாம் தஞ்சமளித்தது. அங்கும் கூட பல வசதியீனங்கள், இடர்ப்பாடுகள். ஆரம்பத்தில் அரச உதவிகள் கிடைக்காவிட்டாலும் மனிதநேய அமைப்புக்களும், மக்களும் கை கொடுத்தனர். மெல்ல மெல்ல அரச உதவிகளும் வந்தன. முகாமிலிருந்த பலரும் அவனைப் போலவே மனது பேதலித்திருந்தனர். சுனாமி மீண்டும் தாக்குமோ என்ற பயமும்கூட இருந்தது. தற்கொலை செய்யலாமா? என்றும் கூட ரவி நினைத்தான்.

கடந்த சில நாட்களாக உளவளத்துணையாளர்கள் மக்களோடு மனம் விட்டு அளவளாவி மனப்பகிர்வின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் ஆறுதலடைய வைத்தனர். முகாம் சுவரில் கைவைத்தபடி யோசனையில்

அமிழ்ந்திருந்த ரவியிடம் ஒரு உளவளத் துணையாளர் வந்து அழைத்தாள். அவன் வெறித்தபடி திரும்பினான். அவள் புன்னகை பூத்தாள்.

"அண்ணை, என்ன கடுமையாக யோசிக்கிறியள்?" அந்தப் பெண் ரவியிடம் கேட்டாள். பதிலேதும் சொல்லாமல் மீண்டும் பிரபஞ்சவெளியில் சூனியத்தை வெறித்து நோக்கினான். "அண்ணை, என்னுடைய பெயர் மதனி... உங்கட பெயர் என்ன?" அன்போடு அவனை நோக்கினாள். ரவி இப்பொழுதும் பேசவில்லை.

"உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்புகள் கொடூரமானவை. நினையாப் பிரகாரமாக இயற்கை அனர்த்தம் செய்திட்டுது... உங்க குடும்பத்தில் எத்தனை பேர் அண்ணை?" மீண்டும் மதனி அன்போடு கேட்டாள். அவளது அன்பான பொறுமையான அணுகுமுறையில் அவனது மனதில் ஈரக்கசிவு.

"என்னுடைய பெயரை அறிஞ்சு என்ன செய்யப்போறீர்? நிவாரணத்திற்குப் பதியப்போறீரே?... எத்தனையோ பேர் பதிஞ்சு கொண்டு போனார்கள். இன்னும் ஒண்டையும் காணவில்லை. சுனாமியால் பாதிக்கப்படாத பகுதிகளில் எல்லாம் நிவாரணம் கிடைக்குதாம்...." ரவி வெறுப்போடு கூறினான். "படுக்க ஒரு பாய் பெட்சிற் கூட இல்லை..." "அண்ணை இந்த நாட்டில் எப்போதுமே இனவாதக் கண்ணோட்டம்தான் ஏகாதிபத்திய இனவாத ஆட்சியாளர்களும், அகதிகளும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் இப்படி ஏறுமாறாக நடக்கக் காரணமாக இருக்கிறார்கள் - தென்பகுதி

முகாம்களுக்குள்ள உதவிகள் இங்கே கிடைக்கவில்லை. எல்லாவற்றிலுமே இனப் பாகுபாடு... ம்... நான் இங்கே வந்தது சுனாமி அனர்த்தத்தினால உளப்பாதிப்புக்கு உள்ளானவைக்கு உளவளத்துணை வழங்கிறதுக்கு... உங்களோடு கதைக்கிறதும்... உங்கட பாதிக்கப்பட்டுள்ள மனதுக்கு ஆறுதலளிக்கத்தான்.... உங்கட பெயரை நீங்கள் இன்னும் சொல்லவில்லையே'' மதனி அவனை அன்போடு நோக்கினாள்.

"ம்... பேரை அறிஞ்சு ஆருக்கு என்ன பிரயோசனம்? அன்பாயிருந்த துணைவி சுமதியையும், செல்லமாயிருந்த இரண்டு குழந்தைகளையும் பறிகொடுத்திட்டுத் தவிக்கிறேன். பொருள், பண்டம், வீடு வாசல் போச்சுது... எனக்குக் கவலையில்லை. ஆனா உறவுகளைப் பிரிஞ்சதை என்னால் தாங்க முடியவில்லை. நானும் செத்திருக்கலாம்." ரவியின் கண்களில் குளம் கட்டி நின்றன.

"நானும் செத்துப் போயிட்டால் தான் கவலை தீரும்'' அவனது குரல் தளதளத்தது. அவனது கவலைகளில் தோய்ந்து மதனியும் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். எனினும் அவளது பார்வையிலிருந்த பரிவு மனதில் ஆறுதலை ஏற்படுத்தியது. சிறிது நேரம் அவனோடு மனம் விட்டு உரையாடிவிட்டு இன்னொருவரைத் தேற்றுவதற்காக மதனி விடை பெற்றாள். இதன் பின்னர் தொடர்ச்சியாக மதனி அந்த முகாமுக்கு வந்த பலருக்கு உளவளத் துணை புரிவாள். இப்போதெல்லாம் ரவி சகஜமாக அவளோடு உரையாடி மனதினைப் பகிர்ந்து கொள்வான்... மதனியின் உற்சாகமூட்டும் ஒத்தடமளிக்கும் தைரியமூட்டும்

வார்த்தைகளினால் அவன் படிப்படியாக இயல்பு நிலைக்கு வந்தான். காலமும் கவலைகளை ஆற்ற, இப்போதெல்லாம் தற்கொலை பற்றி சிந்திப்பதையே மறந்தான். ஒரு தேவதை போல் வந்த மதனி அவனை மாற்றிவிட்டாள்.

வழக்கம் போல் மதனி இன்றும் அவனிடம் வந்தாள். இப்போதெல்லாம் அண்ணை என்று அழைப்பதைத் தவிர்த்து ரவி என்று உரையாடுவாள். "எப்படி இருக்கிறீங்க ரவி... இனியும் முகாமிலேயே காலத்தைக் கழிக்காமல் இயல்பு வாழ்க்கையில் இறங்கலாமே? வருவாயீட்டும் தொழில்களைச் செய்யலாமே!" மதனி கூறியதும் ரவி குறுக்கிட்டான்.

"இனி நான் யாருக்காக உழைக்கணும்?" அவனது குரலில் சலிப்பு!

"ஏன் இப்படிக் கூறுகிறீர்கள். உலகம் பரந்தது. உங்களுக்கும் இள வயது. வாழ்வது பற்றி சிந்தியுங்கள். எந்த ஒருவரும் தமது மன நிலையை மாற்றிக் கொள்ளாதவரை வாழ்வில் முன்னேறப் போவதில்லை" அவள் சொல்வதையே அவன் வியப்போடு கேட்டுக் கொண்டிருந்தான். அவளுக்கிருக்கும் தன்நம்பிக்கை அவனை உற்சாகமூட்டியது. "மதனி இவ்வளவு அறிவுபூர்வமாகக் கதைக்க எங்கே கற்றுக் கொண்டீர்கள்? தரமான பயிற்சி தான் பெற்றிருக்கிறீர்கள்..." என்றான் ரவி.

"பயிற்சி மட்டும் காரணமில்லை. வாழ்வில் நாம் தரிசிக்கின்ற அனுபவங்களும் இன்னொரு காரணம்.

நாங்கள் வெறுக்கும் ஒரு விடயத்தில் கூட எங்களுக்குத் தெரியாமலே எத்தனையோ நன்மைகள் இருக்கலாம். இன்பமும், துன்பமும், நன்மையும், தீமையும், எழுச்சியும் - வீழ்ச்சியும் தான் உலகைச் சமப்படுத்துகின்றன. நான் இன்று இப்படி நிமிர்ந்து என் காலில் நின்று மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இவற்றைப் புரிந்து கொண்டமையே காரணம்..."

"ரொம்ப அறிவுபூர்வமாக அழகாகப் பேசி அனைவரையும் தேற்றி உற்சாகமூட்டுகிறீர்களே! உங்களுக்குக் கவலையே இல்லையா?"

"யார் சொன்னது இல்லையென்று? கவலைகளை மறக்க மனதை ஓரிடத்தில் தரித்து நிற்க விடாது நல்ல காரியங்களில் இறங்கி நாமும் மகிழ்வைப் பெறலாம். ஏன் ரவி நீங்க இளவயதினராக இருக்கிறீர்கள். எமது நாட்டில் சுனாமியால் மாத்திரமின்றி கொடிய நாச யுத்தத்தினாலும் எத்தனையோ பெண்கள் வாழ வேண்டிய வயதில் விதவைக் கோலம் பூண்டுள்ளார்கள். இன்னொருபுறம் சீதனப் பிரச்சினைகளால் எத்தனையோ முதிர் கன்னிகள் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படியான ஒருவருக்கு நீங்கள் ஏன் வாழ்வு கொடுக்கக் கூடாது? அது பிடிக்காவிட்டால் தாயக விடுதலைக்காக.. உங்களை அர்ப்பணிக்கலாம்" மதனி ஆழமாக அவனை நோக்கியபடி கேட்டாள்.

"தாயக விடுதலையில் இணைய எனக்கு இப்போது ஆர்வம் குன்றியுள்ளது. எதிரியை விட்டு விட்டு நாமே எமக்குள் மோதி மடிகின்ற அவல நிலையை என்னால்

ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. நீங்கள் கேட்ட மற்ற விடயம், சுமதியை என்னால் மறக்க முடியவில்லை. எனவே இன்னொரு பெண்ணுக்கு என் மனதில் இடமில்லை'' என்று கூறிய ரவியை நோக்கிச் சிரித்தாள் மதனி.

''ரவி... வாழ்க்கையை யதார்த்தமாகப் பாருங்க. வெறும் சினிமாத்தனமாகக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நீங்கள் நினைப்பது தவறு. காலம் கவலைகளை முற்றாக மறக்க வைக்கும். யோசியுங்கோ... நான் நாளை வருவேன்... நல்ல பதில் தாருங்கள்...'' மதனி விடை பெற்றாள். இரவு முழுவதும் பலவித எண்ணங்களில் குழம்பித் தவித்தான் ரவி. மதனி சொல்வதும் சரிதானே என்று நினைத்தான். மறு நாள் மதனியின் வரவை ஏனோ அவனது மனம் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தது. வழமைபோல் வந்த மதனி அவனிடம், ''என்ன முடிவு செய்திருக்கிறீங்க? போராட்டமா, சிறையா?'' என்று சிரித்தாள். எதுவும் புரியாமல் அவன் விழித்தான்.

''சிறையென்றால் இல்லறச் சிறை...'' மதனி சிரித்தாள். முத்துக்கள் உதிர்ந்தன.

''சிறையே பரவாயில்லை...'' என்றான் ரவி. ''நீங்கள் தினமும் எத்தனையோ பேருக்கு உளவளத்துணை வழங்குகிறீர்கள்... எனக்குப் பொருத்தமானவளாக நீங்களே தெரிவு செய்து கொண்டு வாருங்களேன்.''

''உண்மையாகவா?'' வியப்பும் மகிழ்ச்சியுமாக மதனி அவனை நோக்கினாள். அவன் 'ஆமாம்' என்பது போல தலையசைத்தான்.

"அப்படியானால் நாளை எனக்குத் தெரிந்த சிலரின் போட்டோக்களைக் கொண்டுவந்து உங்களிடம் காட்டுகிறேன். போர்க்கால, சுனாமி விதவைகள் சிலரின் படங்கள்..." சொன்னது போலவே மறுநாள் சில படங்களைக் கொண்டு வந்து அவனிடம் காட்டினாள்.

"இது யுத்தத்தின் இடையில் சிக்கி இறந்த ஒருவரின் மனைவி. இது இந்திய இராணுவச் சுற்றி வளைப்பில் கணவனைப் பறிகொடுத்த ஒரு விதவை... இது போராளிக் குழுக்களிடையேயான மோதலில் கணவனை இழந்த விதவை."

இப்படி ஒவ்வொரு படத்தையும் காட்டியபடி "பிடிச்சிருக்கா?" என்று கேட்டாள் மதனி. ரவி மௌனம் சாதித்தான். சுமதி அவன் மனத்திரையில் வந்து சென்றாள். அவன் மௌனமாக இருப்பதைக் கண்ட மதனி, "இன்னும் சில விதவைகள் இருக்கிறார்கள்... படம் தான் இல்லை. தொடரும் யுத்தத்தில் இராணுவ வேட்டுக்களால் அநியாயமாகக் கொல்லப்பட்ட ஒருவரின் மனைவியாயிருந்தவள்... ம் எனக்கு என்னவோ அந்தப் பெண் உங்களுக்குப் பொருத்தமாக இருப்பாள் என்று தோன்றுகிறது" மதனியின் கண்கள் குளம் கட்டின.

"நீங்கள் சொன்னால் சரியாகத்தானிருக்கும்... எதற்கும் நான் ஒரு தடவை அந்தப் பெண்ணை மறைமுகமாகவென்றாலும் பார்த்தால் நல்லது..." ரவியின் முகத்தில் மாப்பிள்ளை மிடுக்கு.

"ஒழுங்கு செய்யலாம்..."

"எப்போது காண்பிக்கப் போகிறீர்கள்?"


"இப்போதே..."

"இந்த முகாமிலா இருக்கிறாள்?" ஆச்சரியத்துடன் ரவி அவளை நோக்கினான். சிறிது நேரம் மௌனம் திரையிட்டது.

"இதோ உங்கள் முன்னே தான் நிற்கிறாள் அந்த விதவை..." மதனியின் தலை சரிந்து, கண்கள் பூமியை நோக்கின. ரவிக்கும் புரிந்தது.

"மதனி, நீங்களும் ஒரு விதவையா? நம்ப முடியவில்லையே!" ரவியின் மனதில் பூக்காடு. நிமிர்ந்து பார்த்த மதனியைத் தன் கண்களால் தழுவிக் கொண்டான் ரவி.

– வீரகேசரி *(2006)*





# ஏழையின் சிரிப்பில்

நண்பன் காந்தன் ஷெல் அடிபட்டு கடந்த மூன்று மாத காலமாய் விபத்து வார்ட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்துவிட்டு திரும்பியபோது தான் பிரதீபன் அவரைக் கண்டான். முற்றிப் பழுத்த கனி.

வைத்தியசாலைக்கு முன்நின்ற பாலை மரத்தின் கீழ் முதியவர் அழுக்கு உரப்பை ஒன்றுக்குள், கொண்டு வந்திருந்த தனது உடைமைகளில் தலை வைத்துக் கொண்டு படுத்திருந்தார். எண்பது, எண்பத்தைந்து வயதாவது இருக்கலாம். ஒட்டிய வயிறு, எலும்புகள் எண்ணக்கூடிய மார்பு. இடிந்து போன கன்னத்தில் எலும்புகள் மட்டும் துருத்திக் கொண்டிருக்கின்றன. குழிவிழுந்த கண்கள், இரண்டு மூன்று மாதம் வழிக்கப் படாத தாடி. மிகவும் அயர்ந்து சோர்ந்து போயிருந்தார்.

பிரதீபன் ஒருகணம் தடுமாறினான். கிழவர் உயிரோடு இருக்கிறாரோ இல்லையோ என்ற சந்தேகம் பொறி தட்டியது. மனதில் இன்னமும் தொலைந்து போகாமலிருந்த மனிதநேயம் கிழவரை நோக்கித்தள்ளியது.

கிழவனின் அருகே வந்த பிரதீபன் "அப்பு" என்று அழைத்தான். சிறு சலனம். மூடியும் மூடாத கண்களால் உற்று நோக்கியபடி முதியவர் தலையசைத்தார்.

பிரதீபனுக்கு இறந்துபோன தன் பாட்டனின் நினைப்பு வந்தது. "அப்பு" என்று ஆதரவாக மீண்டும் அழைத்தான்.

கண்கள் பிரகாசிக்க, பற்றிக் கொள்ள ஒரு துரும்பு கிடைத்த நம்பிக்கையுடன் இருகரம் கூப்பினார் முதியவர்.

"அப்பு சாப்பிட்டனியளே?" என்று கேட்ட பிரதீபன் அவரது பதிலுக்கு காத்திராமல் அருகிலிருந்த கடைக்குச் சென்று பணிஸும், தேநீரும் வாங்கி வந்தான்.

கிழவர் விழிகளைக் கூசி வெட்டி மெதுவாக அவனைப் பார்த்துவிட்டு, கைகளை ஊன்றி எழுந்திருக்க முயன்றார். பிரதீபன் எழுந்திருக்க உதவியபடி சாப்பிடும் படி கூறினான்.

பசி கிடந்த வயிறு ஒரு துண்டு பணிஸ் போனதும் விக்கல் எடுத்தது. அவன் தண்ணீரைப் பருக்கினான். கிழவர் நெஞ்சைத் தடவியபடி பணிஸைக் கடித்தார். "இரண்டு நாளாகச் சாப்பிடவில்லை தம்பி..." கண்கள் பனித்தன.



அவன் அன்போடு அவரை நோக்கினான். "உங்களுக்கு ஒருத்தரும் இல்லையோ அப்பு?"

"ஏன் இல்லை? லண்டனில், பாரிஸிலை, சுவிஸிலை, கனடாவில எல்லாம் வாரிசுகள் இருக்கினம்... இருந்தும் இல்லை."

எமது இனம் என்னமாய் மாறிப் போய்விட்டது என்று நினைத்தான் பிரதீபன்.

"நாங்கள் கோப்பாய் மோனை... மூத்தவனோட தான் இருந்தனான். இடம்பெயர்ந்து வன்னிக்கு வரும்போது தவறவிட்டிட்டன். உன்னைப் போல ஈவிரக்கமுள்ள பொடியள்தான் வள்ளத்திலை ஏற்றி

கடலுக்காலை இங்காலை கொண்டு வந்து விட்டதுகள்'' மீண்டும் கைகளைக் கூப்பினார் கிழவர்.

அவன் பரிதாபமாக அவரை நோக்கினான்.

''ம்... இவ்வளவு கஷ்டப்பட்டு கடலுக்காலை வந்தும் இருக்க ஒரு இடமில்லை... ஆதரிக்க ஒருத்தருமில்லை. ஊரோடை வீட்டோடை நின்று அங்கேயே செத்துப் போயிருக்கலாம்... இத்தனை வயசுக்குப்பிறகு இருந்தென்ன செத்தென்ன...'' கிழவர் விரக்தியுடன் கூறியபோது, அவனுக்கு நெஞ்சை அடைத்தது. ஒரு காலத்திலை எவ்வளவு சிறப்போடு வாழ்ந்திருப்பார்...

''அப்பு... இன்னொரு பணிஸ் வாங்கிவரட்டோ?''

கிழவர் அன்போடு அவனது முகத்தை நிமிர்ந்து பார்த்தார். பிள்ளைகளுக்கு, பேரர்களுக்கு, உற்றவர்களுக்கு இல்லாத அன்பு இவனிடம் சுரப்பது அவரது மனதை நெகிழவைத்தது.

எதையோ மனதிற்குள் நினைத்துக் கண்களை மூடியவர், அதை வெளிச் சொல்ல முடியாத தவிப்புடன் மனக்கட்டுக்குள் புதைத்துவிட்டு மறுபடியும் கண் திறந்து அவனை நோக்கினார். ''கடைசி நேரத்தில் என்ர இனசனத்தோட இருந்து கண்ணைமூடி, மகன்ர கையால கொள்ளிபோட வேணுமென்று ஆசை... அதுவும் முடியாமல் ஊரோட ஒத்தபடி, அறுந்து போன ஆமிக்காரன் கலைச்சுப் போட்டான். அந்த நாளையில சுடலை மடம் கட்ட நூறு ரூபா கொடுத்தனான். சவ வண்டி

செய்ய இருபது ரூபா கொடுத்தனான். ஐந்து சதத்திற்குத் தேத்தண்ணி குடிக்கிற காலம்...ம். எல்லாம் தலைகீழாகப் போச்சு... உற்றவரும் பிரிஞ்சு, உடைமைகளும் அழிந்து, ஊரையும் துறந்து...'' கிழவர் விரக்தியுடன் சிரித்தார்.

“இங்க உங்களுக்குத் தெரிந்தவர்கள் ஒருத்தரும் இல்லையா? வேணுமென்டால் நான் கொண்டுபோய் விடுறன் அப்பு...''

“ஆரார் எங்கெங்கை இருக்கினமோ தெரியாது... இருந்தாலும் குடிசைகளில்லயும், கூடாரங்களிலையும் தான் இருப்பினம்... எல்லாத்தையும் இழந்திட்டு வறுமையோட போராடிக் கொண்டிருப்பினம்... மரம் பழுக்கிற காலத்திலை எண்டாலும் யாரும் வைச்சுப் பார்ப்பினை... இப்ப பட்டமரமாய்ப் போயிட்டன்... படுக்க எடுக்க பிள்ளை குட்டியே இல்லையாம்... மற்றதுகள் பார்க்கப் போகினமோ?''

முதியவரின் கூற்றிலுள்ள நியாயம் அவனுக்குப் புரிந்தது. எனினும் அவரை அப்படியே விட்டு விட்டுப் போக மனம் வரவில்லை. பலவாறாக யோசித்தான் பிரதீபன். மனதிலே மின்னல் கீற்று. “ஆஸ்பத்திரியில சேர்த்து விடட்டே அப்பு''

“நான் முயன்று பார்த்துக் களைச்சுப் போனேன். அங்கே வருத்தக்காரரர் படுக்கவே இடமில்லையாம்.... அகதி முகாமுக்குப் போகட்டாம்... அங்கேயும் போனேன்... இடமில்லை...''

பிரதீபன் மீண்டும் யோசித்தான். ''முதியவர் இல்லத்திலை சேர்த்து விடட்டே அப்பு...''

''கோடி புண்ணியம் கிடைக்கும்... அதைச் செய்து விடு மோனை'' மீண்டும் முதியவர் கைகூப்பினார்.

ஒரு முதியோர் இல்லத்துக்கு அழைத்துச் சென்ற போது, அது தனியார் முதியோர் இல்லம் என்றும், மாதம் ஐயாயிரம் என்றும் கூறினார்கள். இன்னொரு அனாதரவான முதியோர்களின் இல்லத்திற்குச் சென்ற போது இது உங்களுக்கான முதியோர் இல்லம் அல்ல என்று கைவிரித்தார்கள். அரசாங்க முதியோர் இல்லம் ஏதும் இங்கே இல்லையா? என அவன் விசாரித்தபோது, ''அதெல்லாம் வன்னியில் இல்லை... சிங்களப் பகுதிகளிலைதான் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இருக்கு'' என்றார்கள். பாதிரியார் ஒருவர் நடத்திவரும் இல்லத்திற்குச் சென்றபோது, ''இடமில்லை, இப்போது சிறுவர்களை மட்டும்தான் உள்வாங்கின்றோம்.'' என்று சொன்னார்கள்.

பிரதீபன் களைத்துப் போய்விட்டான். ''வன்னேரிக்குளத்தில் யோகசுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம் இருக்கு. அங்கே விசாரிச்சுப் பாருங்க'' என்று ஒருவர் கூறினார்.

அங்கே சென்ற போதும் வழமையான பதில் ''இடமில்லை...''

''தெருவில் அநாதரவாகக் கிடந்த வறிய முதியவர்'' என பிரதீபன் எடுத்துரைத்தான்.

"ஒரு படிவம் தாறம். இதை நிரப்பி கிராம சேவையாளரின் பரிந்துரையுடனும், அரசாங்க அதிபரின் சிபாரிசுடன் கொண்டு வந்து தாங்கோ. இடம் வரும் போது அறிவிக்கிறம் கூட்டி வாருங்கோ."

பிரதீபனுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது.

"இவரைப் பார்க்கவே ஏழை அநாதரவான முதியவர் என்று தெரிகிறது. அப்புறம் ஏன் சிபார்சு கேட்கிறீர்கள்?" கோபமாகக் கேட்டான் பிரதீபன்.

"தம்பி பதட்டப்படாதேயும்... உங்களைவிட மனிதாபிமானம் எங்களுக்கு இருக்கு... அதனாலதான் எத்தனையோ பேரின் உதவியை இரந்து வேண்டி இந்த முதியோர் இல்லத்தை நடத்திறம். இங்கே 65 பேர் தங்கத்தான் வசதியிருக்கு... ஆனால் 87 பேரை வைச்சுப் பராமரிக்கிறம். மனிதநேய நம்பிக்கை நிதியம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள தர்மசிந்தனை உள்ளவர்கள் என்று பலரது உதவிகளைப் பெற்றுத்தான் நடத்திறம்..." இல்லச் செயலாளர் விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார்.

அவர்கள் உரையாடிக் கொண்டிருந்தபோதே இல்லத் தலைவர் கந்தசாமி ஐயா வந்து சேர்ந்தார்.

எழுபத்தைந்து வயது மதிக்கத்தக்க, அதே நேரம் இளைஞரைப் போல கம்பீரமான தோற்றம், வெண்பஞ்சு போன்ற மேவி இழுத்த தலை முடி. கனிவான நம்பிக்கையளிக்கும் பார்வை.

செயலாளர் அவரிடம் விசயத்தைக் கூறினார். அவர் முதியவரை ஒரு கணம் நோக்கினார். ஒட்டியுலர்ந்த அவரது தோற்றம் அவரது மனதை நெகிழ வைத்தது.

"தம்பி, நீர் இவருக்கு ஆர்?"

"உறவில்லை, தெருவில் கண்டு அழைத்து வந்தேன்... இப்போது உங்கள் சிரமம் புரிகிறது..." என்றான் பிரதீபன்.

"ஒரு வழிப்போக்கனான இளைய தலைமுறையைச் சேர்ந்த உமக்கு இருக்கிற மனிதநேயத்தை மதித்து முதியவரை உள்வாக்கிறன். இங்கே எங்களிடம் வசதிகள் குறைவுதான். ஆனால், அன்பாகப் பராமரிப்போம். ஆனால் நீர் ஒரு பணியைப் பொறுப்பெடுக்க வேணும். இவருடைய படிவத்தை நிரப்பி சிபார்சு பெற்றுக் கொண்டு வந்து தரவேணும். ஒரு சட்டத்தை நாங்களே உருவாக்கி விட்டு அதை நாங்களே மீறக் கூடாது. உண்மையான அநாதரவானவர் என்பதை உறுதிப்படுத்தத்தான் இந்த நடைமுறைகள். யாரும் அணைவில் இங்கே உள்வாங்கப்படக்கூடாது..." கந்தசாமி ஐயாவைக் கையெடுத்துக் கும்பிட வேண்டும் போலிருந்தது பிரதீபனுக்கு.

முதியவரையும் அழைத்துக் கொண்டு இல்ல விடுதிக்குள் நுழைந்தபோது, ஒரு அமைதியான ஆச்சிரமத்தில் நுழைவது போலிருந்தது. இரு மருங்கிலும் அழகான பூமரங்கள் சூழவுள்ள காணியில் பயன்தரும் மா, பலா, தென்னை, வாழை மரங்கள். கீற்றுக் கொட்டகையானாலும் சுத்தம் பேணப்பட்டு, அழகாக

ஒழுங்கமைக்கப்பட்ட விடுதிகள். ஏதோ ஒரு மன நிறைவுடன் சிரித்த முகத்துடன் பவனிவரும் மூதாளர்கள்.

பிரதீபனுக்கு உண்மையிலேயே புல்லரித்தது. கோயில் திருவிழா, வேடிக்கை என்று லட்சக்கணக்கில் செலவிட்டு காசைக் கரியாக்கும் எமது மதத்தினரிடையே இப்படி ஓர் இல்லமா? ஏழையின் சிரிப்பில்தான் இறைவனைக் காணலாம் என்ற உண்மையை இங்கேதான் அவன் கண்டான்.

கந்தசாமி ஐயா, "தம்பி... எமது சைவ சமயத்தில் தொண்டு மனப்பான்மை குறைஞ்சு போச்சு, எல்லாம் வெறும் ஆடம்பரமாகவும், பெயருக்கும் புகழுக்குமாக என்று மாறிப்போச்சு. எங்களது கோயில்களும் சமய நிறுவனங்களும் சமூகப் பணிகளிலை இறங்கவேணும். இந்த யுத்த காலத்தில் மதமாற்றங்களும் அதிகம் நடக்குது. பாதிக்கப்பட்டவர்களைத் தேடி உதவி செய்யுற மற்ற மதங்களில் மக்களுக்கு நாட்டம் வருவது சகஜம்தானே? ஆயிரம் கோயில்களைக் கட்டுவதிலும் பார்க்க ஒரு அநாதை இல்லத்தைக் கட்டுறது எவ்வளவு மேல்" என்றார்.

கந்தசாமி ஐயாவோடு உரையாடிபோது பிரதீபனின் மனதில் அவர் பற்றிய அபிப்பிராயம் உயர்ந்தது. இந்த உலகில் மனித நேயம் இன்னும் செத்துவிடவில்லை என்பதாக உணர்ந்தான்.

மனிதநேயப் பணிகளை மேற்கொள்ளும் இந்துமத நிறுவனங்கள் அரிதாக உள்ள காலகட்டத்தில் இன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக இவ்வாறான நிறுவனங்கள் உதயமாவது மனதிற்கு மகிழ்வைத் தந்தது.

வெறும் சம்பிரதாயங்களும், சடங்குகளும், பேதங்களும்தான் மதங்களென்று ஆகிவிட்ட இன்றைய உலகில் அன்பே சிவம் என ஆணித்தரமாகச் செயல்மூலம் காட்டி நிற்கும் முதியோர் காவலன் அவன் மனதில் புத்தொளியை வீசவைத்தார். நாட்டுப்பற்றும், சமூக நேயமும் கொண்ட இப்படியான மனிதாபிமானம் மிக்கவர்கள் மதங்களைச் சரியான திசையில் இட்டுச் செல்ல வல்லவர்கள் என்று நினைத்துக் கொண்டான்.

இயற்கை வனப்பும், மனிதநேயமும் செழித்து வளரும் அந்தத் திருவடி நிலைய முதியோர் இல்லத்திலே கொஞ்ச நேரம் கந்தசாமி ஐயாவுடன் இருந்து உரையாடியது நெஞ்சுக்கு இதமாகவும் ஆறுதலாகவும் இருந்தது.

கந்தசாமி ஐயாவிடமிருந்து விடைபெற்று வீதியில் வந்துகொண்டிருந்த போது, இன்றுதான் முதன்முதலாக இறைவன் இருக்கும் ஆலயம் ஒன்றிற்குச் சென்றதாக உணர்ந்தான் பிரதீபன்.

– ஓலை *(2003)*





# மரண ஓசை

திருமணமாகி ஆறு மாதங்கள் ஆகின்றன. சுஜாதாவின் கணவர் ராம்குமார் ஒரு பொறியியலாளர். தலைநகரில் சில தொடர் மாடி வீடுகளை அமைத்து விற்பனை செய்து முப்பது வயதுக்கு முன்னரே மில்லியன்களுக்கு அதிபதி ஆகிவிட்டான்.

சுஜாதா – ராம்குமார் திருமணம் காதல் திருமணம். கண்டதும் காதல் என்று கணப்பொழுதில் மலர்ந்ததில்லை. அவனால் அமைக்கப்பட்ட அவன் வாழ்ந்து வரும் தொடர் மாடிகளில் ஒரு வீட்டில் தான் அவளும் வாழ்ந்து வந்தாள்.

சிடுசிடுப்பில்லாத புன்னகை தழும்பும் முகம். எடுப்பாக இளம் கருப்பு நிறம். உயரமான அவள் உடலுக்குப் பொருத்தமாக இருந்ததை அவன் முதல் தரிசிப்பிலேயே ரசித்தான்.

எப்பொழுதாவது எதிரெதிராகவோ, லிப்டிலோ சந்தித்துக் கொண்டார்கள். தற்செயலான சந்திப்புகளில்


ஏற்பட்ட முகப் பரிச்சயம் முறுவல்களை இருபுறமும் தோற்றுவித்தன.

நட்பாய் தொடங்கிய பழக்கம் காதல் உறவாய் பரிணமிக்க சில காலம் பிடித்தாலும் அது ஆழமாக வேரூன்றியது. இருதரப்பிலும் பல ஒத்துப் போகும் இயல்புகள், ரசனைப் போக்குகள் என மகிழ்வோடு பூத்த காதல் புவியில் வாழும் வரை தொடர்வதற்காய் இருவரும் திருமணத்தில் இணைந்தனர்.

தேநிலவுக்கென்று அவர்கள் எங்கும் போகாததால் அண்மையில் அவர்கள் கொழும்பிலிருந்து நுவரேலியாவுக்குப் போயிருந்தபோது அவளுக்கு உடல் நலக் குறைவானது. வாந்தியும், மயக்கமும் அவளை அறையினுள் முடக்கி வைக்க, உல்லாசப் பயணம் மகிழ்வற்றுப் போனது. மருத்துவ பரிசோதனையில் அவள் கர்ப்பமாய் இருப்பது தெரிந்தது. அதனால் அவர்கள் கொழும்பு திரும்பிவர வேண்டியதாயிற்று.

அவளது கர்ப்பத்தில் வளரும் சிசு திடகாத்திரமாய் இருப்பதாகவும் அது பெண்குழந்தை என்றும் 'ஸ்கானிங்' செய்து பார்த்ததில் தெரிய வந்தது. குழந்தையின் இதயத்துடிப்பை 'ஸ்கானிங்' திரையில் பார்த்த ராம்குமார் மகிழ்ந்தான்.

அவளைப் பரிசோதித்த டாக்டர் அவளுக்கு இரத்த சோகை இருப்பதாகவும், இரத்தம் ஏற்றினால் நல்லது என்றும் கூறினார். அவள் மிகப் பலவீனமாக இருப்பதால் கருவிலுள்ள குழந்தையின் எதிர்காலம்



பாதிக்கப்படக்கூடும் என்றும், எனவே அவள் சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

"இவ்வளவு வசதி படைத்தவர்களா இருக்கிறீர்களே ஏன் இது ஏற்பட்டது?" என்று வியப்போடு கேட்ட டாக்டரை நிமிர்ந்து பார்த்தான் ராம்குமார்.

"மூன்று மாதத்திற்கு முன்னர் ஒரு விபத்தில் சிக்கி இரத்தப் பெருக்கு ஏற்பட்டது. அந்த இழப்பை ஈடுசெய்ய அப்போது இரத்தம் ஏற்றினார்கள் டாக்டர்கள்."

"இரத்த தானம் பெறும் போது எச்.ஐ.வி. கிருமித் தொற்று இல்லையென உறுதிப்படுத்திய இரத்தத்தை ஏற்றினீர்களா?"

"ஓம் டாக்டர் எனது இரத்தம் பொருந்தாமையால் எனது நண்பன் சுரேஷின் இரத்தத்தையே ஏற்றினோம். அவனது இரத்தம் எச்.ஐ.வி. பரிசோதிக்கப்பட்ட பின்னரே ஏற்றப்பட்டது. எச்.ஐ.வி. தொற்று இருக்கவில்லை..."

டாக்டரிடமிருந்து விடைபெற்றுச் சென்ற சுஜாதாவுக்கு கவலையாக இருந்தது. தனது துக்கத்தை ஆறுதலடைய வைக்க மாலையில் கதிரேசன் கோயிலுக்குச் சென்று மனதுருக வழிபட்டாள். ராம்குமார் தனது கவலையை மறைக்கத் தெரியாத முகத்துடன் கைகள் நடுங்க கோயிலில் காணிக்கை செலுத்தினான். 'சுகப்பிரசவமாக வேண்டும் கடவுளே...'

இரவு அவளால் எதையும் சாப்பிட முடியவில்லை. கணவன் பயத்தோடு அவளிடம், "என்ன செய்வது சுஜாதா? ஒன்றுக்கும் யோசிக்காதே... இரத்தம் ஏற்றினால் எல்லாம் சரியாகிவிடும்..." என ஆறுதல் கூறினான். அவள் உதட்டைக் கடித்துக்கொண்டு, "எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது அத்தான்..." என்று கண் கலங்கினாள். அன்றிரவு இருவருமே உறங்கவில்லை.

அடுத்த வாரம் மகப்பேற்று கிளினிக்கில் அவளைப் பதிவு செய்தார்கள். இரத்தத்தின் வகையை அறியவும், பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் இருக்கிறதா என்றும் பரிசோதித்துப் பார்த்தபோது வியப்பும் பீதியுமான முடிவு

அவர்கள் இருவரையும் திகைப்புக் கொள்ள வைத்தது. அவர்கள் நிலைகுலைந்து போனார்கள்.

அவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டபோது உலகமே இருண்டு போனது. அவனது உதிரத்திலும் எச்.ஐ.வி. இருப்பது உறுதிசெய்யப்பட்டது. விரைவில் எயிட்ஸ் நோயாளியாகி இருவருமே இறக்கப் போவது நிச்சயம் என்று முடிவானதும் இருவரும் கலங்கினர். மரண பயம் ஏற்பட்ட அச்சத்திலும் பார்க்க எயிட்ஸ் எவ்வாறு தொற்றியது என்ற கேள்வி இருவரின் மனதினையும் பூதாகரமாய் வதைத்துக் குடைந்தது.

'ஓ! என் கணவர் எனக்குத் துரோகம் இழைத்து விட்டார்... இவரையா எனது உயிருக்கு உயிரானவர் என நம்பி ஏமாந்தேன்...? வேறு வழிகளில் எயிட்ஸ் கிருமி என்னில் தொற்ற வாய்ப்பில்லையே! எச்.ஐ.வி. பற்றிய விழிப்புணர்வு இருந்தமையினால் அவதானமாகத் தானே இருந்தோம்? விபத்து ஏற்பட்டு இரத்தம் ஏற்றியபோது கூட எச்.ஐ.வி.க்கான பரிசோதனை செய்து பார்த்துத் தானே ஏற்றினார்கள்!' – சுஜாதா குழம்பித் தவித்தாள்.

ராம்குமாரும் அவளைப் போலவே தவித்துக் கொண்டிருந்தான். உண்மையிலே அவனும் பெண்கள் விஷயத்தில் இராமனின் வாரிசுதான். சுஜாதாவைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் ஏறிட்டுப் பார்த்ததில்லை. அவனால் மனைவியையும் எள்ளளவுதானும் சந்தேகிக்க முடியவில்லை. அப்படியானால் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டமைக்கான வழிதான் என்ன? அப்படியானால்...?

சில வருடங்களில் அரவணைக்கப் போகின்ற மரணத்தின் பயம் ஒருபுறம், கொடிய சந்தேகம் மறு புறமாக, இருவரும் மனம் விட்டுப் பேச முடியாமல் தவித்தார்கள்.

மனைவி மீதிருக்கும் நம்பிக்கையையும், மீறி அவன் மனதிலும் சந்தேகப் பேய் படிப்படியாகக் குடி கொள்ளத் தொடங்கியது. அவள் பழகும் ஆண்களை ஒவ்வொருவராக நினைத்துப் பார்த்தான். அவன் உழைப்பு உழைப்பு என்று அலைந்து திரிந்ததால் அவளைக் கவனிக்காமல் விட்டதில் அவள் வேறு உறவை ஏற்படுத்தினாளா? அல்லது திருமணத்திற்கு முன்னர் தவறிவிட்டாளா என ராம்குமார் சஞ்சலமடைந்தான். நம்பிக்கையைப் பரிசீலனை செய்ய சோதிடம் கூட பார்த்தான். தீர்வு கிட்டவில்லை.

சுஜாதாவின் மனதிலும் பிரளயம்! தொழில் ரீதியாக அடிக்கடி வெளிநாட்டுக்குச் செல்லும் கணவன் தான் யாருடனாவது தொடர்பு வைத்து எச்.ஐ.வி. கிருமியின் தொற்றுக்குள்ளாக்கியிருக்க வேண்டும் என உறுதியாக எண்ணினாள்.

இதற்காக எயிட்ஸ் நோயைக் குணமாக்க, பாவனையில் உள்ள மருந்துகளைப் பற்றி விசாரித்தான் ராம்குமார். எவ்வளவு செலவு செய்தாவது நோயைக் குணப்படுத்த முடியுமா என முயன்ற அவனது எண்ணங்கள் நிராசையாகின. எயிட்ஸ் நோயை முற்று முழுதாகக் குணப்படுத்த முடியாதென்று மருத்துவர்கள் கையை விரித்தனர். எச்.ஐ.வி. தொற்று எயிட்ஸ் நோயாக

மாற எடுக்கும் காலத்தைப் பின் தள்ளுவதன் மூலம் சில வருடங்கள் கூடுதலாக வாழ முடியும் என்று அவர்கள் ஆறுதல் கூறினார்கள்.

சுஜாதா கருவுற்றிருப்பதனால், பிறக்கப் போகும் குழந்தைக்கும் எயிட்ஸ் வருமா என ஆலோசனை பெற்ற போது கூடிய பங்கு எயிட்ஸ் தொற்றுக் குழந்தையாகவே பிறக்கும். எனினும் எயிட்ஸ் கிருமி தொற்றாததாகப் பிறக்கவும் வாய்ப்பு இல்லாமலில்லை எனக் கூறிய டாக்டர் நம்பிக்கையூட்டினார்.

சுஜாதாவும், ராம்குமாரும் முன்னரைப் போல் கலகலப்பாயில்லாததுடன் மனம்விட்டுப் பேசுவதுமில்லை. ஒருவர் மீது மற்றொருவருக்கு அடிக்கடி கோபம் ஏற்படும். சினந்து கொள்வார்கள். இருவருக்கும் உளவளத்துணை தேவைப்பட்டது.

தமக்கு எயிட்ஸ் தொற்று உள்ளமையைப் பற்றிய செய்தியை வெளியே கசியவிடாமல் பார்த்துக் கொண்டார்கள். அது தெரியவந்தால் இந்த உலகமே தம்மை முற்று முழுதாகப் புறக்கணித்து விடுவதுடன், எயிட்ஸ் தொற்றுக்கான காரணத்தை அவர்கள் பாலியல் ஒழுக்கத்துடன் தொடர்புபடுத்தி இழிவுபடுத்தி விடுவார்கள் என்றும் அஞ்சினார்கள்.

ஒரு இரவு தூக்கத்தில் வந்த கனவில் ராம்குமாரின் குழந்தையும் எயிட்ஸ் தொற்றுடன் பிறப்பதாக உறுதி செய்யப்படவே, அவன் பாதி தூக்கத்தில் மிரண்டு அலறினான்.

"சுஜாதா... இந்தக் குழந்தை நமக்கு வேண்டாம்... அதற்கு வழி இருக்கிறது... கருச்சிதைவு செய்து கொள்ளலாம்." தயங்கித் தயங்கிக் கூறினான் ராம்குமார்.

அவள் பயத்தோடு கேட்டாள் "இதனால் ஆபத்தில்லையே?"

அவனால் பதில் சொல்ல முடியவில்லை. இதை முடிவு செய்வதற்காக மறுபடியும் மருத்துவரிடம் சென்றார்கள். அவர் கருச்சிதைவை மறுத்ததுடன், சுகமான குழந்தையாகப் பிறக்க வேண்டுமென இறைவனிடம் பிரார்த்திக்கும்படி ஆலோசனை கூறினார். "மருந்து தருகிறேன். பிரசவ காலம் வரை பாவியுங்கள்..."

அத்துடன் உளவளத் துணையாளர் ஒருவரின் முகவரியைக் கொடுத்து, இருவரையும் உளவளத்துணை பெறும்படி கூறினார். சுஜாதா ஊர் சென்று உச்சில் அம்மனிடம் கண்கலங்கி வேண்டி வணங்கினாள். கோயிலுக்கு வெளியே கையேந்தி நின்றவர்களுக்குக் கைநிறைய காசுகளை அள்ளிப் போட்டாள்.

மீண்டும் கொழும்புக்கு வந்ததும் டாக்டர் சொன்ன உளவளத் துணையாளரிடம் சென்றனர். சிஸ்ரர் கிறிஸ்ரபெல் கருணையின் வடிவாக அவர்களை அன்போடு வரவேற்று அவர்களது மனக்கலக்கத்திற்குப் பரிகாரம் தேட முயன்றார்.

தாங்க முடியாத கவலையிலும், பயப்பிராந்தியிலும் நொடிந்து போய் வந்திருந்த அவர்களை, அனுபவப்பட்ட உளவளத் துணையாளரான

கிறிஸ்ரபெல், மெல்ல இதமாக அன்புடன் அணுகினார். அவர்கள் இருவரையும் தனித் தனியாகவும், இணைந்தும் உரையாடிய அவர் அவர்கள் இருவருமே தூய்மையானவர்கள் என்பதையும், ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கையாக நடந்தவர்கள் என்பதையும், உறுதிப்படுத்திக் கொண்டார். 'ஆண்டவரே, இவர்களை ஏன் இப்படி சோதிக்கிறீர்?'

சுஜாதாவிடம் தனியே உரையாடிய சிஸ்ரரிடம் அவள், "சிஸ்ரர், சாவு தரும் வேதனை ஒருபுறம், எனது கணவர் எனக்கு விசுவாசமின்றி நடந்து விட்டாரே என்ற கவலை மறுபுறம் எனத் தவித்தேன். ஆனால் இப்பொழுது இன்னொரு புதிய கவலை... அவர் என்னைச் சந்தேகிக்கிறார் போல் தோன்றுகிறது. இதைத்தான் என்னால் அறவே தாங்க முடியாமலிருக்கிறது..." என்று அழுதாள்.

"அழாதே சுஜாதா... உனது கணவர் கூட நீ தன் மீது சந்தேகம் கொள்வதையிட்டே பெரிதும் வருந்துகிறார். நீங்கள் இருவருமே நல்லவர்கள். ஆனால் விதி சதி செய்து விட்டது..."

"எந்த வழியில் தொற்று ஏற்பட்டது என்பது தெரிந்தால் மனம் ஆறும்... சந்தேகங்களும் தீர்ந்துவிடும்... ஆனால் அதுதான் தெரியவில்லையே சிஸ்ரர்..."

கிறிஸ்ரபெல் இருவரையும் தனது உளவளத் துணையினால் தேற்றி, அடுத்த வாரம் தன்னிடம் வரும்படி விடை கொடுத்தார். கணவன் மனைவி இருவரும் வெளியேறியபோது சுஜாதாவுக்கு இரத்ததானம் வழங்கிய

சுரேஷ் அங்கு வந்தான். தமது மன வேதனையை மறைத்து அவனுடன் உரையாடி விடை பெற்றனர். ஒரு வேளை இவனுக்கும் எச்.ஐ.வி. தொற்றோ?

அவர்கள் போனதும் கிறிஸ்ரபெல் சுரேஷை அழைத்து மனப்பகிர்வின் மூலம் அவனுக்கு உளவளத்துணை வழங்கினார்.

"சுரேஷ் இப்போது சென்றார்களே, அவர்களை உங்களுக்குத் தெரியுமா?"

"ஓம் சிஸ்ரர்... ராம்குமார் எனது நல்ல நண்பன். அவர்களுக்கும் என்னைப் போல் எயிட்ஸ் தொற்று ஏற்பட்டிருக்கிறதா சிஸ்ரர்...?" சுரேஷ் கலக்கத்தோடு கேட்டான்.

"அந்தரங்கங்கள் புனிதமானவை... இரகசியங்களைப் பேணுவது உளவளத் துணையின் கடமையல்லவா?" கிறிஸ்ரபெல் அன்புடன் அவனை நோக்கியபடி சிரித்தார்.

"நான் விடுப்பாகக் கேட்கவில்லை. நானே ஒரு எச்.ஐ.வி.யால் பீடிக்கப்பட்டவன்... நான் ஏன் கேட்கிறேன் என்றால், சுஜாதாவுக்கு இரத்ததானம் வழங்கியது நான் தான். ஆனால் அப்போது எச்.ஐ.வி. தொற்று என் இரத்தத்தில் இருக்கவில்லை... அதுதான் குழப்பமாக இருக்கிறது..."

"சுரேஷ்... நீங்கள் இரத்ததானம் வழங்கமுன் நம்பிக்கைக்குப் பாத்திரமற்ற பெண்ணுடன் உறவு கொண்டிருந்தீர்களா?" கிறிஸ்ரபெல் கேட்டதும் சுரேஷ் சிறிது நேரம் யோசித்தான்.

"ஓம் சிஸ்ரர்... அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு கிளப்டான்ஸருடன் உறவு கொண்டேன்..."

"சுரேஷ் நீங்கள் கலங்க வேண்டாம். அவர்கள் வேறு பிரச்சினைக்காக உளவளத்துணை பெற வந்திருந்தார்கள்..."

சுரேஷ் விடைபெற்றுச் சென்றதும் கிரிஸ்ரபெல்லுக்கு எல்லாம் தெளிவானது. மறுநாள் தன்னிடம் வரும்படி ராம்குமார் – சுஜாதா தம்பதிகளுக்கு தொலைபேசியில் கூறினார். குறிப்பிட்டபடியே அவர்கள் வந்ததும் அன்போடு அமரவைத்து உரையாடினார் கிரிஸ்ரபெல்.

"உங்கள் மன உளைச்சலுக்குத் தீர்வு வந்து விட்டது. சுரேஷின் இரத்தமாற்று மூலம் தான் எச்.ஐ.வி. தொற்று சுஜாதாவுக்கு ஏற்பட்டது. பின்னர் சுஜாதாவிடமிருந்து உங்களுக்குத் தொற்றியது... நீங்கள் ஒருவரை ஒருவர் வீணாகச் சந்தேகிக்க வேண்டாம்..."

"சுரேஷினுடைய இரத்தத்தைப் பரிசோதித்துத் தானே ஏற்றினோம்...? அதில் எச்.ஐ.வி. தொற்று இருக்கவில்லையே!"


"உண்மைதான். எச்.ஐ.வி. தொற்றைக் கண்டுபிடிக்கும் எலிசா இரத்தப் பரிசோதனையில், கிருமிக்கு எதிரான ஒரு இரசாயனப் பொருளையே இனம் காண்கிறோம். கிருமித் தொற்று ஏற்பட்டு மூன்று மாதங்களின் பின்னர்தான் இந்த இரசாயனப் பொருளை இரத்தத்தில் இனம் காண முடியும். ஆனால் சுரேஷ் தொற்றுக்குள்ளாகி இரண்டு மாதத்திற்குள்ளாகவே இரத்த

தானம் செய்தான். அப்போது அவன் கிருமித் தொற்றுக்கு உள்ளாகியிருந்தான் எனினும் இரத்தத்தில் பிற பொருள் எதிரி தோன்றாதமையால் எலிசா பரிசோதனையில் தொற்றுக் காட்டப்படவில்லை... எனினும் கவலையை விடுங்கள். வாழும் காலம்வரை இருவரும் அன்பான கணவன் மனைவியா வாழ்ந்து உங்கள் குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்படாமலிருக்க இறைவனிடம் வேண்டுங்கள். இதற்குப் பின் இன்னுமொரு குழந்தை வேண்டாம். ஆணுறை பாவித்து தவிர்த்துக் கொள்ளுங்கள்'' ஆலோசனை கூறி அனுப்பினார் சிஸ்ரர் கிஸ்ரபெல். "எச்.ஐ.வி தொற்றில்லாத குழந்தை பிறந்தால், தாய்ப்பால் ஊட்ட வேண்டாம்."

கடவுள் அவர்களைக் கைவிடவில்லை. அவர்களுக்குப் பிறந்த குழந்தை எச்.ஐ.வி. தொற்று இல்லாது பிறந்த போது அவர்கள் ஆனந்தமடைந்தனர்.

இனி அவர்கள் மரணத்தை நிம்மதியோடு எதிர்கொள்வார்கள்.

– தினகரன் *(2003)*





# பூவைக்குள் பூகம்பம்

மாதவி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். எவ்வளவோ முயன்றபோதிலும் அவளுக்கு நித்திரை வரவில்லை. தூரத்துப் பச்சைகளாக வண்ண வண்ணக் கனவுகள் மனத்திரையில் அரங்கேறிக் கொண்டிருந்தன. எதுவித சம்பந்தமும் இல்லாத சில முகங்களும் கண்சிமிட்டின. காலையில் எதிர்பாராமல் சைக்கிளில் வந்து அவளில் மோதி, அவள் வீழ்ந்ததும் கைப்பற்றி தூக்கிவிட்ட சேகரனின் முகம், ஏனைய முகங்களின் தெளிவற்ற தன்மையிலிருந்து வேறுபட்டு பிரகாசமாக அவள் மனதை நிறைத்தது. அது தற்செயலாக நடந்த நிகழ்ச்சியாக இருந்தபோதிலும் அதனை நினைத்துப் பார்க்கும்போது அவளது உள்ளத்தில் ஓர் இன்ப உணர்வை ஏற்படுத்தியது.

மாதவிக்கு முப்பது வயதாகிவிட்டது. முதிர் கன்னியானாலும் அவளது அழகான கொடி போன்ற உடலும், நீண்ட சுருள் கேசமும், எடுப்பான வட்ட வடிவான

வதனமும் அவளது வயதில் ஐந்தாறை குறைத்துக் காட்டின, இந்தக் கரிய நிறம் கூட எடுப்பாகத் தானிருந்தது. ஆனால் அவளது கண்களில் மட்டும் ஒருவித ஏக்கம் எப்போதும் குடிகொண்டிருந்தது. அமைதியான ஊருறங்கும் அந்த நள்ளிரவில் மாதவியின் இதயத்தின் ஆழத்திலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது.

எனது உள்ளத்தின் தவிப்பை உடலின் வேட்கையை யாருக்கு எடுத்துச் சொல்ல முடியும்? இயல்பான இந்த உணர்வுகளை அசிங்கமாகப் பார்க்கின்ற இந்தச் சமுதாயத்திலே உற்ற தோழியிடம் கூட இவற்றைப் பகிர்ந்து கொள்ள முடியாதே! ஒரு வேளை வாழ்நாள் முழுவதுமே எனது ஆசைகளை நெஞ்சுக்குள்ளே வைத்துப் புதைத்து வைத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுமோ?

அவள் தவியாய்த் தவித்தாள்.

அறையில் படுத்திருந்த மாதவியின் தாயார் 'லொக்கு லொக்கு' என்று இருமும் சத்தம் கேட்டது. அவள் ஒரு நீண்ட நாள் நோயாளி. அடிக்கடி தொய்வு நோய் ஏற்படும்.

இதனால் மாதவிக்கு வீட்டில் நிறைய வேலைகள் இருந்தன. வீடு வாசலைக் கூட்டி துப்புரவாக வைத்திருப்பதிலிருந்து, சமையல், பொருட்கள் கொள்வனவு எல்லாமே அவளது பொறுப்புத்தான். பொறுப்பற்று, உழைப்பதை முழுதும் குடியில் செலவு செய்துவிடும் அப்பாமீது அவளுக்குக் கோபத்தை விட அனுதாபமே அதிகம். எனினும் அவர் ஒழுங்காக உழைத்துச் சம்பாதித்து மிச்சம் பிடித்திருந்தால் அவளுக்கு



இந்நேரம் கலியாணமாகி குழந்தை குட்டிகளும் இருந்திருக்கும். அவளோடு படித்த தோழிகளை நினைத்துப் பார்க்கிறாள் மாதவி. அநேகமாக எல்லோருக்குமே திருமணம் முடிந்து விட்டது. அவளுக்குக் கீழே படித்தவர்கள் கூட மணமாகிவிட்டார்கள் என்று ஏங்கிக் கொண்டிருந்த வேளையில் அம்மாவின் இருமல் மீண்டும் அவளை நினைவுக்குக் கொண்டு வந்தது.

"அம்மா... தேத்தண்ணி போட்டுத் தரட்டே?"

"வேண்டாம் பிள்ளை. குளிரிலை ஈரவிறகும் எரியாது, நீ படு பிள்ளை..." என்று அம்மா தடுத்தாள்.

"இல்லையம்மா போட்டுத் தாறன்..." என்று எழுந்தாள் மாதவி.

இப்படி வேலையில் மூழ்கினாலாவது நினைவுகளுக்குக் கடிவாளமிடலாம் என அவள் நினைத்தாள்.

தேநீருடன் வந்த மாதவியிடம், "அப்பா எழும்பிச் சாப்பிட்டவரே பிள்ளை?" என்று வினவினாள் அம்மா.

"மனிசன் குடிச்சிட்டுச் சாப்பிடாமல் படுத்திட்டுது. இக்கணம் ஈரல் அறுந்து சாகப் போகுது... ம்... இந்த மனிசனுக்கு குடும்பத்தில அக்கறை இல்லை. வீட்டிலை ஒரு குமர் இருக்கெண்டு சிந்தனையில்லை" என எரிச்சலுடன் தனது கணவனைப் பற்றி குறைபட்டுக் கொண்டாள்.

அம்மா தேநீர் பருகியதும் மாதவி மீண்டும் வந்து படுத்துக் கொண்டு நள்ளிரவு வானத்து நிலவையும் நட்சத்திரங்களையும் ஜன்னலூடாகப் பார்த்து ரசிக்கத் தொடங்கினாள். அப்போது அவளுக்கு சேகரன் ஏற்கனவே மணமானவன் என்ற உண்மையையும் மீறி அவனது அந்தச் சிரித்த முகமும், எடுப்பான மீசையும் அவளது ஆசைகளுக்கு அந்தரத்தில் மனத்தீனி போடத் தொடங்கின.

'சீ என்ன நினைப்பு' மீண்டும் ஒரு நெடு மூச்சு. அவளது ஏக்கத்தையும் சோகத்தையும் பகிர்ந்து கொள்ளுவதைப் போல ஒரு பறவை அவளது வீட்டைச் சுற்றிச் சுற்றி கூவி அவளது மனச்சுமையைக் குறைத்தது.

கடந்து போன ஈரேழு வருடங்களில் அவளது பருவ நெருடல்களின் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ள முனைந்த பல இளைஞர்களை நினைத்துப் பார்க்கின்ற போது மனதில் பலத்த ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது.

அன்று யாரையும் சட்டை பண்ணாத அவள் இன்று மணமான சேகரன் மீது பாய்ச்சல் கொள்ளும் அவல நிலை! மனதளவில் சோரம் போயினும் அவள் இன்றுவரை நெருப்பாகவே இருக்கிறாள். பிறரை நெருங்க விடாது தடுத்த அந்த நெருப்பு இப்போது அவளையே தகனம் செய்திட முனைகின்றதோ?

கடந்த சில நாட்களாகவே படர் கொம்பின்றித் தவிக்கும் பூங்கொடியான மாதவிக்கு சேகரன் மீது ஒரு வித ஈர்ப்பு பந்தலற்ற கொடி ஒரு மரத்தைப் பற்றிக் கொண்டது போல சேகரனின் தரிசனங்களும், அவனது கழுகுப் பார்வையும் அவளது வறண்ட மனத்தை மழைத்தூறலாக நனைத்தது. ஊழித் தாண்டவமாடிய அவளது மனப் பேரலையைத் தணிக்க இது பெரிதும் உதவியது.

இன்று நேற்றல்ல, கடந்த சில காலமாகவே பூவையவள் மனதில் பூகம்பம் ஒன்று எரிமலையாய் வெடிக்கக் காத்திருக்கின்றது. இன்று சேகரனுடன் ஒழுங்கையில் ஏற்பட்டுவிட்ட சிறு விபத்து அவளது எண்ணங்களுக்கு எண்ணெயை ஊற்றி நிற்கிறது. அவளது தேகம் அதனால் கொதித்த வண்ணமிருந்தது.

பதின்மூன்று வயதில் அழகின் மதமதப்பில் வாழ்வு பற்றிய வசந்தக் கனவுகளில் மிதந்தபோது காலால் எட்டி

உதைத்தவையெல்லாம் இப்போது கிட்ட வராதா என்ற எண்ணம் ஊற்றெடுக்கின்றது. சேகரன் குடும்பஸ்தன், அவனை நினைப்பது தவறல்லவா? என்ற நினைப்பையும் உதறித் தள்ளிவிட்டு திமிர் பிடித்த குதிரையாய் பாயும் அவள் மன உளைவுகளின் உந்துதலுக்குக் கடிவாளம் இட முடியாமல் தலையணையை அணைத்தாள்.

காலங்கள் கடுகதியில் மறைந்த வண்ணமிருந்தன. இழந்துபோன வாழ்வின் வசந்தங்களைத் தேடி அலைபவள் போல மாதவி இப்போதெல்லாம் தத்தளித்துக் கொண்டிருந்தாள். என்ன செய்கின்றேன் என்ற இலக்கற்றுத் தவித்தாள்.

சேகரன் தன்னை நாடி வரவேண்டும் என்ற ஆழ் மனத்தவிப்பை மனக்கூட்டுக்குள் அமுக்க முடியாமல் அவன் பார்வைக்காக ஏங்கி தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அவளில் தெரியும் சில மாற்றங்களை அவனும் கண்டு கொண்டான்.

இரவு பகல் என மாறி மாறி வந்தாலும் இருளுக்குள் நின்று கொண்டு வெளிச்சத்திற்காக ஏங்கினாள். அக்கறையற்ற பெற்றோர்கள், சீதனம் என்ற கொடிய ஆயுதத்தைத் தூக்கித் திரியும் சமூகம், எதுவுமே அவளது மன உணர்வுகளைப் புரிந்ததாயில்லை.

பாடம் கேட்டுப் படிக்க வரும் பத்மனின் சந்தேகங்களுக்கெல்லாம் துரித விடை சொல்லித் தர முடியாமல் தடுமாறினாள். அன்று காலையிலே அம்மாவும் அப்பாவும் தொலைவிலுள்ள உறவினர்

ஒருவரின் திருமண வீட்டிற்குப் போய்விட்டார்கள். தனிமையிலே குழப்பத்துடன் அவள் சமையலில் ஈடுபட்டிருந்த போது சேகரன் வந்திருந்தான். அவனது வரவில் அவள் உடல் தந்தியடித்தது.

"இருங்கோ... வீட்டிலை ஒருத்தரும் இல்லை" ஒரு வித குழப்பத்துடன் கூறினாள் மாதவி.

"அது தெரிஞ்சுதான் வந்தனான்..." அவளை ஆழமாக நோக்கியபடி சேகரன் கூறினான்.

"சரியான ஆள்தான்... ரீபோட்டு கொண்டு வாறன்..." என கன்னம் குழிவிழ நாணத்தோடு சிரித்தபடி உள்ளே சென்று அடுப்பைப் பற்ற வைத்தாள்.

"ரீ... வேண்டாம்" என்று கூறிக்கொண்டே பூனை போல் மெல்ல எழுந்து நடந்த சேகரன் குசினியுள் நுழைந்தான். திரும்பிப் பார்க்காமலே அவன் வரவை உணர்ந்த மாதவி ஒருவித மகிழ்வுடன் அவனை எதிர்கொள்ளத் தயாரானாள். அவன் அவளது தோள்களைப் பற்றவும் 'மாதவி' என்று அழைத்து அடுத்த வீட்டு அம்பிகாவின் குரல்.

அவள் கலக்கத்துடன் அவனிடமிருந்து விலகவும், அம்பிகா உள்ளே வரவும் சரியாக இருந்தது. செய்வதறியாது திகைத்த மாதவி சேகரன் மீது சீற்றத்துடன் பாய்ந்தாள்.

"இந்தச் சேட்டையை மட்டும் என்னிலை வைச்சுக் கொள்ளாதையும்..."

மாதவியின் ஆக்ரோசமான வார்த்தைகளில் அதிர்ந்து வெலவெலத்து உடல் வியர்க்க நழுவினான் சேகரன்.


"பொறுக்கி..." போகும் அவனைப் பார்த்துக் கூறியபடி "நல்ல வேளை நீ வந்தது அம்பிகா..." என வரவேற்றாள்.

"பதற்றப்படாதே மாதவி... ஆம்பிளைகளின்ரை குணம் இதுதான்... எளிய நாய்க்குணம்..." அம்பிகா அவளைத் தேற்றினாள்.

மனதிலே அம்பிகா மீது எரிச்சல் ஏற்பட்டிருந்தாலும் அதை மறைத்தபடி கதைத்தாள். சிறிது நேரம் உரையாடிவிட்டு விடைபெற்ற அம்பிகாவை மனதில் வைதபடி சிரித்து வழியனுப்பினாள் மாதவி.

பூசை வேளையில் கரடியாக வந்த அம்பிகாவினால் அவளது தவிப்புகள் நிராசையானதினால் மனம் ஒரு நிலையின்றித் தவித்தது. மௌனமாய் எரிந்த திரியை சேகரன் தூண்டிவிட்டுச் சென்று விட்டானே என்ற கனத்த நெஞ்சுடன் அவள் இதயம் அடித்துக் கொண்டது. சமையலையும் மறந்து நெடுநேரம் கட்டிலில் படுத்துக் கிடந்தாள் அவள்.

– *தினமுரசு (2003)*





# சிதைவுகள்

அந்தச் சோதனைச் சாவடியைத் தாண்டி அரை கிலோ மீற்றர் சென்றால் தான் அவளது வீடு. தினமும் பாடசாலைக்கும், தனியார் கல்வி நிலையத்திற்கும் இதைத்தாண்டித் தான் போய் வரவேண்டும்.

கீதாவுக்கு அந்தச் சாவடிக்கு கிட்டவரும்போதே கால்கள் பின்னும். அதைத் தாண்டுவதில் ஏற்படப் போகின்ற சிரமம், நரகவேதனை என்பவற்றை வார்த்தைகளில் அடக்க முடியாது.

சோதனைச் சாவடியில் நிற்கும் அரும்பு மீசைச்சிப்பாய்கள் மாத்திரமென்றில்லை, நடுத்தர வயதுச் சிப்பாய்கள் கூட சுத்த மோசம். அடிக்கடி மனிதத்தன்மை இவர்களிடமிருந்து விலகிப் போய் விடும். அப்படியான நேரங்களில் அவர்கள் மனதில் ஒளிந்திருக்கும் காட்டுமிராண்டித்தனங்கள் சன்னதம் கொள்ளும்.

பொம்பிளை என்றால் போதும் பத்து வயதுப் பாலகர்கள் முதல் பாட்டிகள் வரை சல்லடை போட்டு உடற்சோதனை செய்வார்கள். கர்ப்பிணிப் பெண்கள்,

நோயாளிகள் என்று கூட வேறுபடுத்திப் பார்க்க மாட்டார்கள். தலைமுதல் கால்வரை அணுஅணுவாகச் சோதிப்பார்கள். சோதனை என்ற பெயரில் இவர்கள் செய்யும் சில்மிசங்கள் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் என்று எண்ணவைக்கும். இவர்களது சொறிச்சேட்டைகளுக்குப் பயந்துதான் கீதா வெறுப்படைந்தாள்.

இந்தச் சிப்பாய்களின் சொறிச் சேட்டைகளை அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை. பெண்களைப் பெண்கள் தான் சோதிக்க வேண்டும் என்கின்ற நடைமுறை பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இப்படியான நாட்களில் பெண்கள் பாடு திண்டாட்டம்தான். கூடவே அரைகுறைத் தமிழில் இரட்டை அர்த்தத்துடன் அவர்கள் கதைக்கும்போது அருவருப்பாக இருக்கும்.

அன்றும் சாவடியில் பெண் சிப்பாய்கள் இருக்கவில்லை. ஒரு அரும்பு மீசை இளசுதான் சோதனை நடத்திக் கொண்டிருக்கின்றது. திரும்பிப் போகலாமா என்று கீதாவுக்குத் தோன்றியது. எனினும் படிப்பில் அவளுக்கிருந்த ஆர்வம் அவ் எண்ணத்தை மாற்றியது. கீதா மெல்ல நகர்கின்றாள். அவளது முறை வந்தபோது அவன் விரசமாகச் சிரித்தபடி "நங்கி ஹரி லஸ்ஸனாய்..." (தங்கச்சி நீங்க நல்ல வடிவு). என்கின்றான். அவனது கரங்கள் தலையிலிருந்து கால் வரை தேடுகின்றன. "வேற குண்டு இல்லைதானே நங்கி" தங்கை என்று அழைத்தபடி இவனால் எப்படி கீழ்த்தரமாக நடக்க முடிகின்றது? கீதா

மனதில் சாடினாள். அவர்களது சமூகத்தில் காதலர்கள் கூட ஐயே, நங்கி என்று தான் பேசிக் கொள்வார்களாம் என்று சித்தப்பா சொன்னது அவளது ஞாபகத்திற்கு வந்தது.

ஒருவாறு பொயின்ரைத் தாண்டிய பின்னர்தான் அவளுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. அவள் வீட்டிற்கு விரைந்தாள். பரீட்சை நெருங்கி விட்டது. படிக்க வேண்டும். சாதாரண தரப்பரீட்சையில் அவள் சாதனை புரிந்தவள்தான். இப்போது வருவது உயர் தரப்பரீட்சை. இப்போட்டிப் பரீட்சையில் பல தடைகளை அவள் தாண்ட வேண்டும். தரப்படுத்தலினால் தரைப்படுத்தப்பட்ட பல கெட்டிக்காரரை அவளுக்குத் தெரியும்.

இரவில் படிப்பது சிரமம். மின்னொளியில் வாழ்ந்தவர்களுக்கு மண்ணெண்ணெயும் மறுக்கப்பட்டு விட்டதால் மங்கிய குப்பி விளக்கொளியில் தான் படிக்க வேண்டும். உயிருக்குப் போராடி மூச்சு இழுத்துக் கொண்டிருக்கும் நோயாளி போல் உயிர்மூச்சு இழுத்துக் கொண்டு எரியும் இந்தச் சிக்கன விளக்கில்தான் சுற்றவர அமர்ந்திருந்து அவளும், அவளது தம்பி, தங்கையரும் படிக்க வேண்டும்.

ஒரு ஜாம் வெற்றுப்போத்தலில் குறுக்காக ஒரு தகடு போட்டு இரு கம்பிகளில் தொங்கவிட்டு ஒரு சிறு துவாரத்தினூடே மெல்லிய திரியைச் செலுத்தி போத்தலின் அடியில் தேங்காய் எண்ணெயை விட்டு ஏற்றி வைத்த சிறு விளக்கு. வாழ்க்கையை மட்டுமா இந்த யுத்தம் இருளாகியுள்ளது. இருட்டிலேயே வாழ வைத்து விட்டதல்லவா?

ஓ... இந்த யுத்த காலத்தில் தான் எத்தனை கண்டு பிடிப்புகள். மண்ணெண்ணெயில் ஓடும் மோட்டார் சைக்கிள்கள். அதை ஸ்ராட் செய்வதற்கு சிங்கர் ஒயில் சூப்பிப் போத்தலில் ரின்னர்!

கீதா மட்டுமல்ல இங்கு எல்லோருமே பயத்துடனும் சலிப்புடனும் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படியே போனால் எதிர்காலம் எப்படி இருக்கப் போகின்றது என்ற திகைப்புதான் அனைவர் மனதையும் ஆக்கிரமித்திருக்கின்றது. இத்தனைக்கும் மத்தியிலும், எதிர்காலத்தில் சுபீட்சமான ஒரு நல்வாழ்வை எமது அமைப்பு ஏற்படுத்தித்தான் தரப்போகின்றது என்ற நம்பிக்கையின் ஒளிக்கீற்றும் இல்லாமலில்லை.

எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு தானும் போராடப் போகலாமா என்று கீதா யோசிப்பாள். எனினும் அப்பா சொல்லும் வார்த்தைகள் அவளைக் கட்டிப் போடும். "பிள்ளை படிக்கிற வயசில படிக்க வேணும். படிச்சு முடிஞ்சவுடன் நீ விரும்பினால் நானே உன்னைக் கூட்டிக் கொண்டு போய் ஒப்படைப்பன்... கவலைப்படாமல் படி"

அத்துடன் வீட்டின் வறுமை நிலையும் நோய்வாய்ப்பட்ட அம்மாவும் அவளது சுடர் விட்டெரியும் எண்ணத்தை அணைக்கும் காரணிகளாக அமைந்தன.

சிறுவயதில் இருந்தே கீதா படிப்பில் சுட்டி. இரண்டாவதாக வந்தால் கூடத்தாங்க மாட்டாள். இசை,

விளையாட்டு, ஆங்கிலம் எதிலுமே அவள் சோடை போகவில்லை. அவள் வாங்கிக் குவித்த பரிசுகள் ஏராளம். 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை விரட்டியபோது எல்லாவற்றையும் விட்டு விட்டு வரவேண்டியதாயிற்று. வடமராட்சிக்கு வந்த பின்னர் அவர்களது வாழ்வு நிலையில் பெருமாற்றம்.

வலிகாமத்தில் வீடு, கிணறு, தோட்டம், துரவு என்று வாழ்ந்த வாழ்க்கைக்கு எதிராய் இப்போதைய வாழ்க்கை அமைந்து விட்டது. மாணிக்க வாத்தியார் கை கொடுத்ததில் அவரது காணியில் ஒரு குடிசை அமைத்து ஏதோ வாழ்க்கையைக் கொண்டு போக முடிகின்றது. எவ்வளவு தான் கஷ்டமிருந்தாலும் வடமராட்சிக் கல்விப் பாரம்பரியம் கீதாவுக்குப் பிடித்திருக்கின்றது. இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் கல்வியில் அவர்கள் காட்டுகின்ற அக்கறை அவளுக்கும் உந்து சக்தியாக இருந்து வருகின்றது.

அப்பாவின் ஊக்க மாத்திரையில் அவளது சோர்வு பறக்கும் ''பிள்ளை... நானும் படிக்கவில்லை. அம்மாவும் கனக்கப் படிக்கவில்லை. அதால தான் இண்டைக்கு முன்னுக்கு வர முடியவில்லை. நீ நல்லாகப் படிக்க வேண்டும். உன்னைப் பார்த்து சின்னவையும் படிக்க வேண்டும். மற்றப் பெற்றார் மாதிரி டொக்டராக வா... இஞ்சினியராக வா... அப்புக்காத்தாக வா... என்று நான் சொல்லயில்லை. ஆனால் படிச்சு முன்னுக்கு வர வேணும். நாலு பேருக்கு முன்னால படிச்ச மனிசர் என்று பெயரெடுக்க வேணும்...''



பாடசாலையில் பிரசாரம் செய்ய வரும் அக்காமாரும், அண்ணாமாரும் அவளை வரும்படி கேட்கும் போதெல்லாம் "நான் வருவன். படிப்பு முடிச்சிட்டுத்தான் வருவன்..." என்பாள்.

"நீர் படிச்சு முடிச்சிட்டு வாறதுக்கிடையில் நாடு பறிபோயிடும். அவங்கள் எல்லாத்தையும் அழிச்சு முடிச்சுப் போடுவாங்கள்."

கீதாவும் விடமாட்டாள். "பிடிச்சால் திருப்பி அடிச்சுப்பறிப்பம்." என்று கூறுவாள்.

"நல்லாக் கதைக்கப்பழகிட்டீர்"

"நாலு சொல்லுப்படிச்சதாலதான் கதைக்க முடியுது"

"நாங்க படிக்கத் தெரியாமலே வெளிக்கிட்டு வந்தனாங்கள்? நாடு பறிபோகுதாம். கண்டறியாத படிப்பு..."

அவர்கள் என்ன சொன்னாலும் கீதா மசிய மாட்டாள். ஒரே பதில், "நான் படிச்சு முடிச்சுட்டு வாறன்"

"நீர் படிச்சு முடிச்சிட்டு வாறதுக்கிடையில் உம்மையே முடிச்சுப் போடுவாங்கள்"

அவளோடு படித்துக் கொண்டிருந்தவர்களில் எத்தனையோ பேர் கடிதம் எழுதி வைத்து விட்டுப் போய் விட்டார்கள். அவளோடு போட்டி போட்டு படித்த ஜெகனும் போன கிழமை போய் விட்டான். அவளது மனதிலும் போராட்டம்.

படிப்பா? போராட்டமா? விடை காண முடியாத தவிப்பில் படிக்க முடியாமல் குழம்பினாள். சில நாட்களில் பசி கூட எடுப்பதில்லை. "என்ன பிள்ளை யோசனை? போற யோசனையென்றால் சொல்லு. பிறகு நான் உயிரோட இருப்பன் என்று மட்டும் நினையாதை..." அம்மா பயமுறுத்தினாள்.

இராணுவ கெடுபிடிகளும் அதிகரித்தன. சோதனைச் சாவடியில் பிடிபட்ட கீதாவின் சித்தப்பா காணாமல் போனார். எந்த முகாமிலும் சிறைச்சாலையிலும் இல்லை என்று பதில் வந்தது.

கீதா கலங்கத் தொடங்கினாள். மனம் நிறையசிரிக்கின்ற அவளது சிரிப்பு மறையத் தொடங்கியது. கண்களிலே இனம் தெரியாத சோகமும் கலக்கமும் குடிகொண்டது.

அடிக்கடி தலைக்கு மேலால் புக்காராக்களும் ஹெலிகளும் பறந்து கிலிகொள்ள வைத்தன. அடிக்கடி குண்டுகள் விழுந்து பெருஞ்சத்தத்துடன் வெடித்து மிரள வைத்தன. அது தொலைவிலே விழுந்தாலும் யார் யாரையோ சிதற வைத்தது. வீடுகள் சிதைவடைந்தன.

பாடசாலையும் ஒழுங்காக நடப்பதில்லை. பரீட்சை வருவதால் உயர்தர வகுப்பு ஒன்றுதான் ஒழுங்காக இயங்கிக் கொண்டிருந்தது. பாதிப்பேர் கூட வருவதில்லை. சிலர் ஆயுதமேந்தப் போய் விட்டார்கள். இன்னும் சிலர் வீடுகளில் பயத்தில் முடங்கிப் போயிருந்தனர்.

கீதா மட்டும் ஒழுங்காகப் பாடசாலைக்கு வந்து போய்க் கொண்டிருந்தாள். ஆர்வமாகப் படிப்பித்த ஆசிரியர்கள் கூட சலித்துப்போயிருந்தனர். சிலர் ஒழுங்காக வருவதில்லை.

கீதா முழுமூச்சுடன் படித்தாள். பரீட்சையும் வந்தது. அவளது இலட்சியக் கனவை நிறைவேற்றப் போகும் பரீட்சை அல்லவா? அவள் மருத்துவத்துறையை நோக்கி உயிரியல் பாடங்களில் தோற்றினாள். ஒவ்வொரு பாடம் முடிந்ததும் அவள் பூரித்தாள். எதிர்பார்த்த மாதிரியே நன்றாகச் செய்திருந்தாள். எல்லாப் பாடமும் ஏ வரும்போல் தோன்றியது.

அவளது நம்பிக்கையான பதிலில் அப்பா நிறைவு கொண்டார். பரீட்சை முடிந்ததும் மீண்டும் அழைப்புக்கள் அவள் நிராகரித்தாள்.

"பரீட்சை முடிவு வரட்டும் பார்ப்பம்" என்றாள். நாட்கள் நகர்ந்தன.

மறுநாள் பரீட்சை முடிவுகள் வெளிவருகின்றன என அறிந்த கீதா மகிழ்வோடு காத்திருந்தாள். விடிந்ததும் சைக்கிளை எடுத்துக் கொண்டு பாடசாலைக்கு விரைந்தாள். வழியில் சென்றி. ஆயுதங்களைச் சுமந்து கொண்டு வீதியில் பச்சைத் தொப்பிகள் என்றைக்குமில்லாதவாறு குதூகலமாக இருந்தனர்.

கீதா பயந்ததுபோல் எதுவும் நடக்கவில்லை. சிரமம் எதுவுமின்றி செக் பொயின்ரைத்தாண்ட முடிந்தது. அவள் பாடசாலையை நோக்கி விரைந்தாள். சைக்கிள் மோட்டார் சைக்கிள் போல் ஓடியது.

பாடசாலையில் நுழையும் போதே பாராட்டுதல்கள் 'எல்லாம் ஏ' அவள் வானத்தில் மிதந்தாள். நான் இனி ஒரு டொக்டர் என்ற இனிய சேதியை வீட்டில் கூற விரைந்தாள்.

சோதனைச் சாவடியில் ஒரு அரும்பு மீசை 'ஐ சி' கேட்டது. அடையாள அட்டையை அவசரத்தில் விட்டு விட்டு வந்தது கீதாவுக்கு நினைவு வந்தது.

அவன் அவளை முகாமுக்கு அழைத்துச் சென்றான். இன்று வரை அவள் திரும்பவேயில்லை.



- வெள்ளி நாதம் (2002)




பஸ் தரிப்புக்குச் சென்றால் அடுக்கடுக்காக பஸ்கள் வந்தாலும், சென்றாலும், தேவையான பஸ் வராது. ஆனால் கொழும்பில் அப்படி இல்லை. அதுவும் காலி வீதியில் அடுக்கடுக்காக பஸ்கள் வரும். அகல்யா பஸ் தரிப்புக்கு வந்து ஒரு நிமிடம் கூட காத்திருக்க வேண்டியதில்லை. புறக்கோட்டை பஸ் வந்தது. அவள் ஏறுவதற்காக இறங்குபவர்கள் இறங்கி முடியும் வரை காத்திருந்தாள். பஸ்ஸின் நடத்துனர் பம்பலப்பிட்டிய, கொள்ளுப்பிட்டிய, கோல்பேஸ் என்று கூவியழைத்தபடி தரிப்பைப் பார்த்தார். இவர்கள் அவசியமில்லாமல் கூப்பாடு போடுவதாக அவளுக்குப் பட்டது.

வெள்ளவத்தை றொக்சி பஸ் தரிப்பு நிலையத்திற்கு அவள் வதியும் றொக்சி காடனிலிருந்து நடந்துவர பத்து நிமிடம் எடுக்கும்.

பம்பலப்பிட்டியிலுள்ள சீமா பயிலும் நிறுவனத்திற்குச் செல்ல கால் மணி கூடத்தேவையில்லை

எனினும், சில வேளைகளில் 'ரபிக் புளொக்' ஏற்பட்டு விட்டால் அதோகதிதான். இன்றும் பஸ்கள் மெது மெதுவாகப் போவதைப் பார்த்தால் தாமதம் ஏற்படலாம் என நினைத்தாள். குடையை மடக்கியபடி துரிதமாக பஸ்ஸில் ஏறினாள்.

பஸ் நடத்துனர் உள்ளே வந்து, 'சல்லிதெண்ட' என்றபடி கைகளை நீட்டினார். ஆறு ரூபாய் சில்லறையாகக் கொடுத்தாள். ஜன்னலோரம் இருப்பதற்கு இடம் கிடைத்தது. முன்பு ஏறியவர்கள் நின்று கொண்டிருக்க, இவள் நின்ற இடத்திற்கு அருகில் இருந்த இருவர் அடுத்த தரிப்பில் இறங்கியதால் இடம் கிடைத்து விட்டது. ஜன்னலோரம் அமர்ந்தபடி தெருவோரக் காட்சிகளை ரசிப்பதில் அவளுக்கு அலாதிப் பிரியம்.

தெருவோர நடைபாதையில் இயந்திர வேகத்தில் நடந்து சென்று கொண்டிருப்பவர்களைப் பார்க்கும்போது 'இவர்கள் எங்கே இவ்வளவு துரிதமாக ஆலாய் பறக்கிறார்கள்? மனித வாழ்க்கையே இயந்திர மயமாகிப் போய்விட்டது. நகர வாழ்க்கை உண்மையிலேயே பகட்டாகத் தெரிந்தாலும் நரக வாழ்க்கைதான்' என எண்ணினாள். எப்போதும் சன நெருக்கடியும், வியர்வை நெடியும், அதை விரட்டும் 'சென்ற்' மணமும் எதுவுமே அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஊரில், கிராமத்தில் வாழ்ந்த சுகம் இங்கு இல்லை. கொடிய யுத்தத்தினால் கூடுகலைந்து இடம் பெயர்ந்து வந்தாயிற்று. நிம்மதியைத் தேடி வந்த இங்கும் நிம்மதியில்லை. அடிக்கடி நிகழும் சுற்றி வளைப்புகள், கைதுகள்



பயணத்தின் போது வரும் சோதனைச் சாவடிகள் - அகல்யா சலித்துக் கொண்டாள். வெள்ளவத்தை மார்க்கெட்டில் வழமையான ஆர்ப்பரிப்புகள், தெருவோர வியாபாரிகளின் லாபாய், லாபாய் அழைப்புகள், சுடச் சுட வறுத்து கடலை விற்பவன், வீதியோர சப்பாத்து தைக்கும் தொழிலாளி, தூக்கிக் காட்டியபடி கவுண் விற்பவன், ஒவ்வொன்றாகப் பார்வையைப் படரவிட்டாள்.

வெள்ளவத்தை பிரதான தரிப்பில் சிலர் இறங்கினார்கள். பலர் ஏறினார்கள். பார்வையை உள்ளே படரவிட்டாள். எல்லா இருக்கைகளும் நிரம்பியிருந்தன.

இரு வரிசைகளில் மேலும் பயணிகள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களது இருக்கையுடன் முன்னிருக்கையின் கம்பிகளில் பிடித்தபடி மறுகையில் சுமையுடன் ஒருத்தி நின்றிருந்தாள். பஸ் ஓட ஆரம்பித்த போது அவள் சிரமப்பட்டாள். இவளது பக்கம் ஒரு புன்னகையைப் படர விட்டபடி எதையோ இறைஞ்சுவது போல அகல்யாவை நோக்கினாள். அகல்யா அவளது கைச்சுமையை வாங்கித் தனது மடியில் வைத்துக் கொண்டாள். பஸ்ஸிலும் ஒருவித அமைதி குடிகொண்டிருந்தது. யாரும் யாருடனும் பேசிக் கொண்டிருக்கவில்லை. 'சல்லி தெண்ட' என்று தன் கடமையிலேயே கண்ணாக இருந்த நடத்துனர், 'இசராட யண்ட' என பயணிகளை முன்னால் நகர்த்தினார். யாராவது தெரிந்த சிநேகிதர்களின் முகத்தைத் தேடினாள் அகல்யா. எவரும் இல்லை. இப்பொழுது இவளின் இருக்கையின் அருகில் நின்ற அந்த இளம் பெண்ணை நெருங்கி ஒரு நடுத்தர வயதுக்காரன் பட்டும், படாமலும் உரசியபடி நின்றான். அவளோ மனதிலிருந்த வெறுப்பைக் காட்ட முடியாமலும், சங்கடத்துடனும் நெளிந்தாள். விலகிச் செல்லவும் இடம் இருக்கவில்லை. பஸ்ஸின் குலுக்கல்களுக்கு ஏற்றவாறு தவறுதலாக அவளது மேனியில் படுவது போல அமுக்கி சுகம் தேடியபோது அவள் அருவருப்புடன் நெளிந்தாள்.

அகல்யாவுக்குக் கோபம் கோபமாக வந்தது. எழுந்து ஏசவேண்டும் போல் மனது குறுகுறுத்தது. அந்தப் பெண் திரும்பி அவனை முறைத்தாவது பார்க்கலாமே! அகல்யாவும் இப்படியான அவஸ்தைகளைச் சில

சமயங்களில் அனுபவித்திருக்கிறாள். ஏன்தான் இந்த ஆண்கள் இப்படி இருக்கிறார்களோ?

ஏதோ காணக் கிடைக்காத போகப் பொருளாகப் பெண்ணை நினைக்கிறார்களே! அவர்களை மனிதப் பிறவியாக அறிவு ஜீவியாக ஏன் நினைத்துப் பார்க்கிறார்களில்லை. பெண் என்றால் இவர்கள் கணிப்பில் வெறும் உடல்தானோ? - அகல்யா சலித்துக் கொண்டாள்.

பொது இடங்களில் - பயணிகளான பெண்களிடம் துஷ்பிரயோகம் புரிபவர்களை உடனுக்குடன் நேருக்கு நேர் எதிர்த்திட பெண்களால் முடிவதில்லை. அப்படி எதிர்க்கும்போது பெண்களே அங்கு காட்சிப் பொருளாகும் அவலத்தினை அவள் அனுபவப் பட்டிருக்கிறாள். ஒரு தடவை அப்படி ஒருவனை எதிர்த்தது, அந்தச் சம்பவம் அம்மாவினுடைய காதுக்கு எட்டியபோது அம்மா அவளைத்தான் ஏசினாள். ''நாங்கள் விலகிப் போயிடணுமேயன்றி, எதிர்க்கக் கூடாது. எதிர்த்தால் அவர்கள் பழிவாங்கப் பார்ப்பார்கள் மகளே...'' என்று அறிவுரை கூறினாள். பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தட்டிக் கேட்க முடியாத அவலநிலை அவள் மனதைக் குடைந்தது. தட்டிக் கேட்டால் அகங்காரி, ஆணவக்காரி என்று பட்டங்கள்!

இப்போது சில காலமாக வடக்கு - கிழக்கில் பெண்களுக்கு எதிராகப் படையினரால் புரியப்படுகின்ற அட்டூழியங்களுக்கு எதிராக அப்பிரதேசப் பெண்கள் ஒருங்கிணைந்து வெகுண்டெழுவது அவளது மனதைக்

கவர்ந்தது. ஆனாலும், வடக்கு, கிழக்கில் இன்னொருபுறம் சில அடாவடித்தனம் புரியும் இளைஞர்களால் பெண்கள் இழிவுபடுத்தப்படுவதையும், சில பெண்கள் அதை ரசிப்பதையும் அவளால் ஏற்க முடியவில்லை.

பஸ்ஸில் யாராவது தெரிந்தவர்கள் ஏறுகிறார்களா என அடுத்த தரிப்பில் அகல்யா முகம் திரும்பிப் பார்த்த போது பஸ்ஸின் பின் இருக்கையில் சூழலை மறந்து ஒரு காதல் ஜோடி உரசும் சுகம் கண்டு கொண்டிருந்தது. அவளது இடுப்பில் அவனது கைகள் படர்ந்திருந்தது. அவளது பறக்கும் முடியுடனான கன்னப்பகுதி அவனது தோளில் சாய்ந்து கொண்டிருந்தது. அவன் ஏதோ சொல்ல அவள் 'கிளுக்' என சிரிக்க, இவளால் பார்க்கச் சகிக்கவில்லை. 'சீ என்ன மிருகங்கள்' என்று நினைத்தபடி முன்பக்கம் பார்வையைத் திருப்பினாள். சீ... இத்தனை பேரின் தரிசனத்தில் முன்னால் இப்படி என்ன வேண்டிக் கிடக்கிறது?... காதல்... காதல்... எல்லாமே வெறும் காமம்தான்... தனிமையில் சல்லாபிக்க வேண்டியது தானே? பார்க், பீச் என்றால் கூட பரவாயில்லை!

வானொலி பஸ்ஸின் இன்னொருபுறம் ஒலித்துக் கொண்டிருந்தது. மன்மத ராசாவை கணக்குப் பண்ணி முடித்துவிட்டு இந்த ஆட்டம் போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா? என துள்ளிசை குலுக்கிக் கொண்டிருந்தது.

இப்போது அவளருகே அமர்ந்திருந்த யுவதி இறங்கிட, அதில் ஓர் இளைஞன் வந்து அமர்ந்து கொண்டான். வலு மரியாதையுடன், பஸ் குலுங்கலின்

போது கூட அகல்யாவில் முட்டாது இருக்கவே அவளுக்கு அவன் மேல் மதிப்பு ஏற்பட்டது. ஆண்களிலும் தங்கமானவர்கள் இருக்கிறார்கள், பெண்களிலும் பித்தளையானவர்கள் இருக்கிறார்கள் என எண்ணினாள்.

அகல்யாவின் அருகிலிருந்த இளைஞனின் பார்வை இப்போது பஸ்ஸின் பின்புறம் நோக்கியது. அந்தக் காதலர் ஜோடியைத்தான் பார்க்கிறான் என்று இவள் நினைக்கும்போதே, அவன் தனக்குள்ளே முணுமுணுத்தபடி திரும்பினான். "கறுமம்... கறுமம்" அவனது முகத்தில் கோபமும், சோகமும் தெரிந்தன.

அகல்யா தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். பின்னர் அவனை நோக்கினாள். இப்போது அவள் பக்கம் திரும்பி, "உதவாக் கெட்டதுகள்..." என்றான்.

"அவர்களது அந்தரங்கத்தில் நீங்கள் ஏன் தலையிடுகிறீர்கள்?... இது சுதந்திர நாடு... வெளிநாடுகளில் இதெல்லாம் சர்வ சாதாரணம்" – வேண்டுமென்றே அவனோடு இடக்கு முடக்காகக் கதைத்தாள்.

"இது வெளிநாடு அல்லவே!... எங்களுக்கென்று ஒரு கலாசாரம், பண்பாடு இருக்கிறதல்லவா?" என்று நெற்றி சுருங்க அவளை நோக்கினான்.

"எமது பண்பாடு கலாசாரம் இவற்றில் ஏதாவது இன்னமும் மீதமாக எம்மிடம் இருக்கிறதா? உதாரணத்துக்கு நீங்களே உங்கள் ஆடையை மாற்றி விட்டீர்கள். வேட்டியையும், தேசிய மேலங்கியையும் மறந்து விட்டீர்கள். பெண்கள் ஜீன்ஸ் போட்டால் மட்டும்

எமது கலாசாரம், பண்பாடு எல்லாமே குடிமுழுகிப்போய் விட்டதாகக் கூச்சலிடுகிறீர்கள். ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதியா?"

"நன்றாக வாதிடுகிறீர்கள்... பெண்களின் உடலமைப்பு ஆண்களின் உணர்வைத் தூண்டக்கூடியது. எனவே தான் கௌரவமாக உடை அணிய வேண்டும்..."

"ஆண்கள் தங்கள் மனதை அடக்கலாமே? அதை விடுத்து ஏன் பெண்களுக்குக் கட்டுப்பாடு போட வேண்டும்?"

"ஒரு பழமொழி கேள்விப்பட்டிருப்பீர்கள். சேலை முள்ளில் விழுந்தாலென்ன, முள்ளு சேலையில் விழுந்தாலென்ன சேலைக்குத் தானே சேதம்... உதாரணமாக அந்தப் பின் சீட் ஜோடியைப் பாருங்கள்... பெண்ணைத்தானே கேவலமாக நினைப்பார்கள். சேறு கண்ட இடத்தில் காலை வைத்து, தண்ணீர் கண்ட இடத்தில் கழுவுவது ஆண்கள் புத்தி..."

"இப்போது பெண்கள்தான் அதிகமாகக் கழுவி விடுகிறார்களாம்..." அகல்யா சிரித்தாள்.

இப்போது அவன் முகம் ஓடிக்கறுத்தது. இதுவரை அவளுக்குப் போட்டியாகக் கதைத்துக் கொண்டிருந்தவன், இப்போது அவள் சொல்வதை ஏற்று "உண்மைதான்" என்றான்.

பொருத்தமான நேரத்தில் வானொலியில் அடுத்த பாடல் ஒலித்தது. 'கண்களே பெண்களை நம்பாதே...' தேவாவின் தேமதுரக் குரல் கணீரென்று ஒலித்தது.

பஸ் கதிரேசன் கோயில் தரிப்பினில் நின்றது. நடத்துனர் கூவி அழைத்தார். "பிட கொடுவ... கோல்பேஸ் பார..." சிலர் ஏறினார்கள்.

அகல்யா தொடர்ந்தாள். "இந்தப் பாட்டு சுத்த அபத்தமானது. ஆணாதிக்கத்தின் பாற்பட்டது. உண்மையிலே ஆண்கள் ஏமாற்றியதால் எத்தனையோ பெண்கள் தற்கொலை புரிந்திருக்கிறார்கள். பாலியல் கட்டுப்பாடு வேண்டும் தான்... ஆனால் ஆண்கள், பெண்கள் இருவருக்கும் இதில் சமத்துவம் வேண்டும்... "பொம்பிளை சிரிச்சாப் போச்சு போயிலை விரிச்சாப் போச்சு மனநிலை மாறணும்"

"ஆனாலும், இன்றைய பெண்கள் மோசம்... நான் உங்களைச் சொல்லவில்லை... பல பெண்கள் அப்படித்தான்..."

"ஆண்கள் மட்டும் என்னவாம்?"

"அது பழைய கதை... காலம் காலமாகத் தொடரும் கதை... கண்ணபரமாத்மா காலத்திலிருந்தே தொடரும் கதை... நான் சொல்ல வரும் கதை புதிய கதை..." அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவள் இறங்க வேண்டிய தரிப்பு வந்தது.

"இறங்கப் போகிறீர்களா?... நான் பெண்களைப் பற்றி குறைவாகக் கதைத்ததைத் தப்பாக எடுத்து விடாதீர்கள். எனது ஏமாற்றத்தினால் அப்படிச் சொல்லி விட்டேன். நான் ஒருத்தியை மனதாரக் காதலித்தேன். ஆனால் அவள்..."

"அவள்...?"

"அதோ பின் சீட்டில் இன்னொரு இளைஞனின் தோளில் சாய்ந்தபடி..."

அவனது கண்கள் பனிந்தன. அகல்யாவுக்கு திக்கென்றது. அவனது கண்ணீரைத் துடைக்க வேண்டும் போன்ற உணர்வு.

பஸ்ஸை விட்டிறங்கி நீண்ட நேரத்தின் பின்னரும் அவளது மனது கனத்துக் கொண்டே இருந்தது.

– ஈழநாடு (2005)





# நான் சாகமாட்டேன்

தொலைபேசி மூலம்தான் அந்தப் பயமுறுத்தல் வந்தது. நான் எண்டைக்கும் சாவுக்குப் பயந்தவனில்லை. மரணம் எப்பவும் யாரையும் தன் வசமாக்கும் எண்டு எனக்குத் தெரியும். மரணம் கருணை இல்லாதது. வயது பார்க்காதது, வேண்டியவர், வேண்டாதவர் அதற்குக் கிடையாது. எந்த அடிப்படையில் மனிதரை ஆட்கொள்ளும் எண்டதையும் அறிய முடியாது. அது எந்த மாதிரியும் வரலாம். வயோதிபத்தால், நோயால், விபத்தால், இயற்கை அனர்த்தங்களால், யுத்தத்தினால் – எப்படியும் வரலாம். கொலையாய், தற்கொலையாய் கூட வரலாம்.

எனக்கு இப்ப வந்த தொலைபேசி கொலைமிரட்டல்! இப்ப எல்லாம் எங்க நாட்டில் இந்த மிரட்டல் நித்திய நிகழ்வு பாருங்கோ. அதோட இவங்கள் சொன்னபடியே பாவ இரக்கமின்றி செய்தும் விடுவார்கள். வட கிழக்கிற்கு எண்டு மட்டுப்பட்டிருந்த இந்த

கைங்கரியம் இப்ப மெல்ல தலைநகருக்கும் வந்திட்டுது. ஆயுத கலாசாரம் எங்கட தேசிய கலாச்சாரமாகியிட்டுது.

இந்தக் கொலை அச்சுறுத்தல்கள் பலதரப்பட்டவர்களுக்கு வாறது. முந்தி போராளிகளுக்கும், போராளிகளுடன் தொடர்பு வைத்திருந்தவர்களுக்கும், போராளிகளுக்கு உணவு வழங்கியவர்களுக்கும், ஊர்காவல் படையினருக்கும், மாற்றுக்குழு உறுப்பினர்களுக்கும் எண்டு இருந்தது. இப்போது அந்த எல்லைகளைத் தாண்டி பத்திரிகையாளர், எழுத்தாளர், பணக்காரர் என்று விரிவடைந்து விட்டுது. பணக்காரர்கள் சில சமயங்களில் சாதாரண பணம் படைத்தவர்கள் கூட கடத்தப்பட்டு கப்பம் கோரப்படுகினம். வித்துச்சுட்டோ, கடன்பட்டோ கப்பம் செலுத்தியவர்கள் விடுபட்டிருக்கினம். இன்னும் சிலர் கொலை செய்யப்பட்டிருக்கினம். இந்த நாட்டிலை தமிழராய் பிறந்ததாலை எத்தனை கஸ்டங்கள்?

ஸ்கொட்லான்ட்யாட் பொலிசாருக்கு ஒப்பான திறமையான பொலிஸ் வளங்களைக் கொண்ட பல குற்றவாளிகளைத் தங்கட திறமையால் இனம்கண்டு, தேடிப்பிடித்த எங்கட பொலிசாரால் இப்ப இங்கே நடக்கிற கடத்தல் கொலைகளிலை ஒரு சம்பவத்தையாவது கண்டுபிடிக்க முடியாமலிருக்கிறது தான் வியப்பாயிருக்கு. அதோட பலவித சந்தேகங்களையும் கிளப்பிவிட்டிருக்கு.

என்னைப் பயமுறுத்தியதற்கான காரணத்தையே அறிய நீங்கள் ஆவலாக இருக்கக்கூடும். நான் ஒரு கீழ் நடுத்தர வர்க்க மனிசன். எந்தப் போராளி அமைப்புக்கும்

ஆதரவானவனுமல்ல. வீண் சோலி வம்பு, தும்பு எதற்கும் போகாதவன். நான் மிதித்தால், என்ர பாதம் பட்டு புல்லு வாடாது எண்டு என்ர பாட்டனார் என்ர அமைதியான போக்குப்பற்றி கூறுவார். ஆனால் என்ர இயல்புகளிலும், செயற்பாடுகளிலுமிருந்த மென்மை என்ர பேனாவுக்கு இருக்கயில்லை. அது மையுக்குப் பதிலாக இரத்தத்தைத் தோய்த்தே எழுதுற இயல்புடையது. இவரா இதையெல்லாம் எழுதுகிறார் எண்டு பலரும் வியந்திருக்கினம். என்ர மனிசிக்காரி கூட சொல்லுவாள், "நீங்க இரண்டு விசயங்களில் தான் கடுமை. ஒண்டு உங்கட எழுத்து; மற்றது உங்கட பெண்சாதியான என்னோட, உண்மைதான்! நான் என்ர மனிசியோடை காட்டுற அட்டகாசத்தைப் பார்த்தால், இந்தப் பூனையும் பால் குடிக்குமா எண்டு தான் வியப்பியள். அவ்வளவு கடுமையான ஆதிக்கம்! மற்றும்படி அன்பும் அதிகம் தான். அன்பிருக்கும் இடத்தில் தான் கோபமும் இருக்குமாம். உண்மையாகத்தான் இருக்க வேணும்.

என்ர எழுத்துக்கள் எப்பும் சமகாலத்தைப் பிரதிபலிப்பன. சமகாலக் கொடூரயுத்த அவலங்களை என்ர கதைகளிலும், கவிதைகளிலும் இயல்பாக வடிப்பன். எனக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய விசயங்களை நாசுக்காகவாவது எழுதுவன். எனினும் வாசகர்கள் புரிந்து விடுவினம். என்ர எழுத்தில் நாசுக்கெண்டு கருதுவதை, நாசுக்கின்மை எண்டு என்ர மனிசி சொல்லுவா. அவ சொல்லுறதும் சரியாகத்தான் இருக்க வேணும்.

அண்மைக்கால கடத்தல், கொலை சம்பவங்களைப் பற்றி நாசுக்காக எழுதி ஒரு சாராரை கண்டித்தமையை

அவர்களே விளங்கிக் கொண்டு விட்டினம். அதன் பிரதிபலன் தான் இந்தக் கொலை அச்சுறுத்தல்.

"உனக்கென்ன, நீ பெரிய எழுத்தாளன் எண்ட நினைப்போ?... இனியும் ஏதாவது கண்டபடி எழுதினால் தலை வெடிதான்... பேசாமல் பேனையை மூடி வைச்சிட்டிரு... பிள்ளை குட்டிக்காரன் எண்டு பார்க்கிறம்... இல்லாட்டி இப்பவே உன்னைப் போட்டிருப்பம்..."

தொலைபேசியில் வந்த மிரட்டல் இதுதான். எவ்வளவு தான் சாவுக்குப் பயந்தவனல்ல எண்டாலும், இந்தத் தொலைபேசியழைப்பு என்னை உலுப்பித்தான் விட்டுது. எண்டாலும் நான் இதுபற்றி மனிசியிடம் கூட சொல்லயில்லை. பாவம் அவ நிச்சயமாக இதைத் தாங்கிக் கொள்ள மாட்டா. அவவைப் பார்க்கும் யாரும், அவ ஒரு துணிச்சல்காரி எண்டு தான் நினைப்பினம்... ஆனால் உண்மையிலேயே வெறும் வாய்ச்சவடால் தான். சரியான பயந்தாங்கொள்ளி எண்டது எனக்குத் தான் தெரியும். அந்தாள் மனிசிக்குச் சரியான பயம் எண்டுதான் எங்களோடு பழகிறவை நினைப்பினம். ஆனால் உண்மையிலேயே மனிசி எனக்குச் சரியான பயம் அல்லது பயபக்தி எண்டும் சொல்லலாம். பாவம் அவவை நோக வைக்கக் கூடாது என எண்ணிக் கொண்டு பேசாமலிருந்தன.

என்னில் தெரிஞ்ச சில மாற்றங்களை இவ கண்டுகொண்டா. "என்ன ஒரு மாதிரி இருக்கிறியள்?" எண்டு கேட்டா. ஒண்டுமில்லை எண்டு சமாளிச்சன். இரவு பிள்ளையளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த

வேளையிலும் மனதில் ஏதோ ஒருவித கனதி. "ஒரு வேளை நான் செத்துப் போனால், இவர்களுடைய எதிர்காலம்...?" ம்... நெடுமூச்செறிஞ்சுது...

இரவு இவ வழக்கத்திற்கு மாறாக 'மூட்'டிலிருந்தா. நான் வழக்கத்துக்கு விரோதமாக 'டல்' லாக இருந்ததைக் கண்டு கொண்டா. "இஞ்சாருங்கோ, என்ன ஒரே யோசனையாய் இருக்கிறியள்?.... மனசிலை இருக்கிறதைச் சொன்னால் தான் ஆறுதல் கிடைக்கும்?" மூக்கைப் பிடித்து ஆட்டினா.

"ஒண்டுமில்லையப்பா..." எண்டு கூறியபடி அவவோடு ஒருவாறு ஒன்றினன். இரவு தூக்கம் வரயில்லை. 'இப்பவே உன்னைப் போட்டிடுவம்' எண்ட அவன்ர இறுதி வார்த்தைகள் மனதைக் குத்தி வலி எடுத்தது. பெருமூச்சு வெடித்தது.

இரண்டு மூண்டு நாட்கள் பேனையைத் தொடயில்லை. மனிசிக்குப் புதுமையாக இருந்தது. "ஒண்டும் எழுதேல்லையே அப்பா?"

"எழுதி எழுதி என்னத்தைக் கண்டது? நாடு என்ன திருந்தினதோ? எங்கட திருப்திக்காக எழுதுறம்... அவ்வளவுதான்... போட்ட புத்தகங்களும் தேங்கிப் போயிருக்கு..."

இரண்டு மூண்டு நாட்களின் பின்னர் நான் எழுதிய கவிதை ஒன்டு பிரசுரமாகியிருந்தது. அதிலும் ஏதோ அவர்களுக்கு நெருடலாக இருந்திருக்க வேணும். தொலைபேசியில் தொடர்பு கொண்டிருக்கினம். நான்

வீட்டில் இருக்கயில்லை. மனிசிதான் கதைத்திருக்கிறா. என்னட்ட சொன்னதை அவவிடமும் சொல்லயிருக்கினம். அவ பதறிப்போனா நான் வீட்டிற்கு வந்ததும் குய்யோ முறையோ எண்டு ஒப்பாரி வைத்து அழுதா. எங்கிருந்து இவ்வளவு கண்ணீர் பெருக்கெடுத்தது எண்டு எனக்கு வியப்பாக இருந்தது.

''இனிமேல் நான் எழுதயில்லை'' எண்டு மனைவியின் கையில் அடித்துச் சத்தியம் செய்தன். இரண்டொரு நாட்களில் எழுத்தாளர் சந்திரபோஸ் சுதாகரின் படுகொலைச் சேதி என்னையும் கலக்கிவிட்டுது. என்னைவிட மனிசி இன்னொருபடி கூடுதலாகக் கலங்கி நொடிந்து போனா. ஒரு நடைப்பிணம் போல அவ இருப்பதைப் பார்க்க மனதுக்கு என்னவோ போலிருந்தது.

என்ர நண்பரான சண்முகம் சித்தப்பாவும் இனி எழுத வேண்டாம் எண்டு ஆலோசனை கூறினார். சுவிசிலிருந்து என்ர தம்பி போகணும். இதையே அண்ணிக்காரிக்கு தொலைபேசியில் கூறியிருக்கிறான். மனிசி மிகவும் குழம்பிப் போனா மீண்டும் மீண்டும் இனி எழுத வேண்டாம் எண்டு கேட்டுக் கொண்டா. நானும் உடன்பட்டு சத்தியம் செய்து கொடுத்தன.

சில நாட்களாக எதுவும் எழுதயில்லை. வழமையாக எழுதும் மல்லிகை, ஞானத்திற்குக் கூட எழுதயில்லை. ஜீவா என்னைக் கண்டபோது, "என்ன கனநாளாக எழுத்து ஒண்டையும் காணன்..." எண்டு கேட்டார்.

"வீடு கட்டுறம் கொஞ்சம் பிசி..." எண்டு அசடு வழியச் சிரித்து வைத்தன். ஞானம் ஆசிரியருடன்

தொலைபேசியில் கதைப்பதைக் கூடத் தவிர்த்துக் கொண்டன்.

யாராவது சோதனையிட வரக்கூடும் எண்டு நினைத்த என்ர மனிசியும் நான் எழுதி, பத்திரிகைக்கு அனுப்பாது வைத்திருந்தவற்றையெல்லாம் தீயிலிட்டா, ஜனாதிபதியிடம் நான் சாகித்திய மண்டல விருது பெற்ற படத்தினை முன்னறையில் மாட்டினா. "ஏனப்பா, அளவுக்கு மிஞ்சிப் பயப்படுகிறாய்" எண்டு பாதிகிண்டலாகவும், பாதி ஆறுதலாகவும் கூறினன். "நீங்கள் திருந்த மாட்டியள்" எண்டு அவ செல்லமாகக் கடிந்து கொண்டா.

மாதங்கள் நகர்ந்தன. எப்பொழுதோ நான் எழுதிய அரசியல் கட்டுரை ஒண்டு தேசியத் தினசரியில் பிரசுரமாகியிருந்தது. சொந்தப் பெயரில் இல்லாமல் புனைபெயரில் தான் எழுதியிருந்தன். கொஞ்சம் காட்டமான கட்டுரை. இதை இப்போது பிரசுரித்து விட்டார்களே எண்டு மனது படபடத்தாலும், என்ர பெயரில் எழுதவில்லை தானே எண்டு என்னை நானே தேற்றிக் கொண்டன். மனிசிக்கு விசயம் தெரியாததால் அவ அமைதியாக இருந்தா. எனது கட்டுரை என்பதை இனம் கண்டு கொண்ட எழுத்தாள நண்பர் தருமலிங்கம் எனக்கு ஆலோசனை கூறினார். "இனி கொஞ்சக் காலத்திற்கு இப்படி எழுதாதையுங்கோ"

"சரி எண்டு பதிலளிச்சன். சொன்னபடியே நான் எழுதுவதை நிறுத்திக் கொண்டன். 'நீ ஒரு கோழை' எண்டு மனது கேலி செய்தது.

எழுத்துக்கு ஓய்வு கொடுத்ததும் தொலைக்காட்சியில் அதிக நேரம் செலவிடுவது வழக்கம். இலங்கை அணி, அவுஸ்திரேலியாவுடன் மோதும் கிரிகட் மாச், ஜெயசூரியா விளாசிக் கொண்டிருந்தார். அவுஸ்திரேலியப் பந்து வீச்சாளர்கள் மீது எரிச்சல் ஏற்பட்டது.

அழைப்பு மணி அடித்தது. மனிசிதான் போய்த் திறந்தா. தள்ளிக் கொண்டு உள்ளே வந்தவை என்னை நெருங்கி வந்து எட்டிப் பிடிச்சினம். உடுப்பு மாற்றவும் அவகாசம் தராமல் கொற இழுவையில் வெளியே கொண்டு போய் வெள்ளை வானில் ஏற்றிச்சினம். என்ர கண்கள் கட்டப்பட்டன. எங்கே கொண்டு போகினம் எண்டு தெரியேல்லை. ஒரு அறை விழுந்தது. சரமாரியான கேள்விக் கணைகள். என்ர பேனாவுக்குத் துப்பாக்கியால் பதில் சொல்லப்போகினம் எண்டு புரிந்தது. மனிசி கதறுவது கேட்டுத் தேய்ந்தது. சிங்களத்திலும் தமிழிலும் மாறி மாறிக் கதைச்சாங்கள்.

ஓரிடத்தில் கொண்டு போய் இறக்கி பலவித கேள்விகள் கேட்டினம். பதிலளிக்க முடியாமல் திணறிப் போனன். இப்படியே ஓரிரு நாட்கள் நகர்ந்தன. என்மீது சிறிது அனுதாபம் இருப்பதும் புரிந்தது. நான் அவையளோடு மோதவில்லை. இடக்கு மடக்காக அவையின்ர மனதைத் தாக்கும் பதில் ஏதும் சொல்லயில்லை. ஒரு கோழை போல கொள்கையற்றவனாய் பதிலளிச்சன். ஒரு உயிரின் பயம் எண்டது ஒரு மனிசனை எப்படி எப்படியெல்லாமோ மாற்றிவிடும் எண்டு புரியுது. இந்த வேளையிலும் உயிரைத் துச்சமாக மதிப்பவர்கள் பற்றியும் எண்ணினன் பெருமிதமாக இருந்தது.

சாப்பாடு தந்தார்கள். விலங்கிடயில்லை. பிறகு, மோசமாகத் தாக்கயில்லை. உயிர்மேல் ஆசையால் நானும் பச்சோந்தியாகிவிட்டனோ? ஒரு வேளை என்னை மன்னித்து விடுவார்களோ?

மாலையில் ஒரு இளைஞன் என்னிடம் வந்தான். ''நீங்கள் எங்களுடைய கொடுமையள் பற்றி எழுதுறியள். அவங்கடை, கொடுமையள் உங்கட கண்ணுக்குத் தெரியாது பயமோ? பக்தியோ?'' எண்டு கேட்டான். நான் மௌனமாக இருந்தன். அவன் பட்டியலிட்டான். மனதில் சில பதில்கள் எழுந்தாலும், பாதுகாப்பின் நிமித்தம் மௌனம் சாதிச்சன். அவனது கூற்றுக்களை ஏற்று நான் கதைக்காததில் அவன் எரிச்சலடைந்தான். ''உங்களுக்கெல்லாம் காதுவெடிதான் வைக்க வேணும்...'' எண்டு சொல்லிவிட்டு நகர்ந்தான்.

பயம் என்ர மனதைக் கவ்விக் கொண்டது. ''ஒரு வேளை செத்துப் போவனோ? இனி என்ர மனிசி, பிள்ளையள், அம்மா யாரையும் காணாமலே செத்து விடுவனா?'' மனம் பக் பக் எண்டு அடித்துக் கொண்டது. இத்தனைக்கும் மேலாக ஏதோ ஒரு நம்பிக்கை சாவை மறுதலித்தது. 'நான் சாகமாட்டன்! நான் சாக மாட்டான்' என்ர மனதின் ஆழத்திலிருந்து ஏதோ ஒண்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

இரவு சாப்பிடப் பிடிக்கயில்லை. மெத்தையில் படுத்தெழும்பும் எனக்கு வெறும் பாயில் படுத்தெழும்புவதிலும் சிரமம் தெரியேல்லை. எனினும்

மனதில் சூழ்ந்த இராட்சத இருளினால் உறக்கம் தொலைஞ்சு போச்சுது. கடா எருமை வாகனத்தில் பாசக் கயிற்றுடன் இயமன் உலாவருவது போலிருந்தது. தொலைவில் ஆந்தை ஒண்டு அலறியது. ஆட்காட்டிக் குருவி கத்தியபடி பறந்தது. போர்த்து மூடியாவது ஒளிக்கலாம் எண்டால் போர்வையும் இல்லை. உடல் பயத்தில் நடுங்கியது.

வாழ்வில் இதுவரை அனுபவிக்காத பயம் அடிக்கடி வந்தது. வீட்டு நினைவுகள் மீண்டும் மீண்டும் வந்து போனது. மனிசியின் அன்பும், பாசமும் இந்த நிலையில் மிகவும் புரிவது போல் உணர்ந்து மெய் சிலிர்த்தது.

நான் அடைத்து வைக்கப்பட்டிருந்த இடம் ஒரு கிராமப்புறமாக இருக்க வேணும். அமைதியான இடம். இந்த இரவில் சின்ன சத்தம் கேட்டால் கூட நெஞ்சு விறைக்கத் தொடங்கியிடும். இப்ப நான் இருக்கிற நிலையில் பயப்படாமல் இருக்கேலுமே? ஒரு மரண தண்டனைக் கைதி தூக்கிலிடும் நாளை எண்ணிக் கொண்டிருப்பது போன்ற அவலமான மனநிலை. என்னவும் நடக்கலாம். எப்பவும் நடக்கலாம். எத்தனையோ கண்டங்களைத் தாண்டிவந்த எனக்கு இது தான் கடைசிக் கண்டமோ? வீட்டிலை செல்விழுந்து தங்கைச்சியும், மச்சானும் செத்த அண்டைக்கு, பக்கத்து அறையிலை படுத்திருந்தும் சிறு காயமும் இல்லாமல் தப்பினனான்... ஓம்... சாவு என்னை நெருங்காது... நான் சாகமாட்டன்... ம்...

நாங்கள் நினைக்கிறபடி தான் நடக்குமெண்டில்லை... வாற ஒவ்வொருத்தன்ர பார்வையும் பிடிச்சு விழுங்கிற மாதிரித் தானிருக்கு... இவங்களட்ட துவக்கு இருக்கு. எதுவும் செய்வாங்கள்... முரண்படாமலிருந்தால் தான் தப்பிப் பிழைக்கலாம்... அனுக்குட்டியையும், அகல்குட்டியையும் பார்க்க வேணும் போல ஆசையாயிருக்கு... மனிசியின்ர வாயால பேச்சு வாங்கவேணும் போலிருக்கு... விடுவாங்களோ? இல்லை தட்டியிடுவாங்களோ?...

ஏதோ நடக்கக் கூடாதது நடக்கப் போகுதெண்டு உள்மனம் சொல்லுது... மனம் விட்டு ஆரோடையாவது கதைக்க வேணும் போலயிருக்கு... இங்க என்னோட இன்னும் சிலரை வைச்சிருக்கிறாங்கள்... எல்லாருடைய முகங்களும் இறுகிப்போன மாதிரி இருக்கு... சவக்களை எண்டு சொல்லுவினமே... அப்படி! வாய்திறந்து கதைக்க பயமாக இருக்கு...

தனித்தனியக் கூட்டிக் கொண்டு போய்த்தான் விசாரிப்பாங்கள்... என்னைத் தவிர மற்றவையளட்ட கப்பம் கேட்டுத்தான் வைச்சிருக்கிறாங்கள்... கொஞ்ச நஞ்சமல்ல... கோடிக்கணக்கில! 'அவங்களுக்குக் கொடுக்கிறனீங்கள் எங்களுக்குத் தந்தாலென்ன?' எண்டு ஏசுறாங்கள். என்னட்ட கப்பம் கேட்கயில்லை... சிங்களவன் தமிழன் எண்டு மாறி மாறி வந்து விசாரிக்கிறாங்கள். கடத்தல் காரரிலை உள்ளவை சிவிலுடையிலை தான் வந்து போவினம். ஆனாலும் ஆயுதப்படை ஆட்கள் எண்டு புரியுது.

இரவிலை கதவைப் பூட்டிப் போட்டுப் போயிடுவாங்கள். ஜன்னலும் இல்லை. ஒரே நுளம்புக்கடி இருள் சூழ்ந்த அறைக்குள்ள புழுங்கி அவிய கண்ணோட கண் மூட முடியாமல் பயத்திலை முழிச்சிருப்பன்... இந்த அறையிலை படுத்திருந்தவர் நேற்றும் சாமத்திலை ஏதோ கனவு கண்டு குளறினவர்... மரணமாவது போன்ற கனவாக இருக்க வேணும்... இரவிலை நாய்கள் வலுமோசமாகக் குரைக்கும்.

இண்டைக்குக் காலமை ஒருத்தரை நல்லாய் ஏசிப் போட்டுக் கூட்டிக் கொண்டு போனவங்கள்... திரும்பிக் கொண்டரயில்லை... ஆள் முடிஞ்சிருக்கும்... எப்பவோ கெதியிலை நானும் சாகப் போறன்... இல்லை... இல்லை நான் சாகமாட்டன். நான் சாகமாட்டன். கடவுள் கைவிடமாட்டார்.

இரவு முழுக்கத் தூக்கமில்லை. காலையிலை மற்ற இரண்டு பேரையும் கொண்டு போயிட்டாங்கள். பிறகு வரயில்லை... நான் இப்ப தனியத்தான்... இரவு வருகுது. இண்டைக்கு அறையிலை நான் தனியத்தான்... முடங்கினபடியே படுத்திருக்கிறன். புழுங்கி அவியுது... நாளைக்கு நானோ?... சுட்டுப் போட்டு வீதியிலை போட்டுவிடுவாங்கள். இருள் விழுங்கியிருக்கின்ற இரவின்ர கனத்திலை தூக்கம் வரவில்லை... கண்ணை இறுக்கி மூடியபடி தூங்க முயற்சிக்கிறன். நினைவுகள் அறுபடயில்லை... கதைகளும் கவிதைகளும் மனதிலை உருக்கொள்ளுது.. இந்த நிலையிலும் இப்படி உருக்கொள்ளுறது எனக்கு வேடிக்கையாகவும் இருக்கு.

இவ்வளவு காலமும் எழுதி என்னத்தைக் கிளிச்சன்? எழுதினதாலை என்ன பிரயோசனம்? எழுத்தாலை மனிதர்களைத் திருத்த முடிஞ்சுதா...? இன்னும் வெறி கொள்ளவெல்லோ வைச்சிருக்கு...? உண்மையைச் சொன்னா எழுத்தாலை ஒரு பிரயோசனமும் இல்லை. சமூகத்தையும் திருத்த முடியாது... உழைக்கவும் ஏலாது... இருந்த பணத்தையும் புத்தகம் போட்டு அழிச்சது தான் மிச்சம்... அப்படியானால் ஏன் எழுதினான்? என்னால எழுதாமலிருக்க முடியேல்லை என்பது தான் உண்மை.

வாசிக்கிறவை என்னத்துக்கு வாசிக்கினம்? கலாரசனைக்கு மட்டும் தான் கலை இலக்கியங்களா? உண்மையைச் சொன்னால் மனிதன் பல வழிகளில் கட்டுண்டிருக்கிறான். உலகில் எத்தனையோ வாழ்க்கை இருக்கு. அதிலை ஒரு சிலவற்றைத் தான் மனிதன் தன்ர வாழ்வில் சந்திக்கிறான்... ஆனால் கற்பனையில் கண்ட வாழ்க்கைகளைக் கதைகளிலையும், கலை வடிவங்களிலையும் தான் கண்டு வடிகால் தேடுறான்...

எனக்குக் கூட இப்ப ஒரு துப்பாக்கிக் கிடைக்காதா எண்ட ஆசை... இவங்களை எல்லாம் சுட்டுத்தள்ள வேணும் எண்ட வெறி... ஆனா இது நிறைவேறாது... சினிமாக் கதாநாயகன் கையிலை துவக்கோட சுற்றி நிற்கிறவையளை சுட்டுத் தள்ளையுக்கை எங்கட மனசு குதூகலிக்கிறது இதனால தான்... நாம் அடைய முடியாத ஒன் கதாநாயகன் செய்யுற போது நாமும் அவனாய் மாறி மகிழ்கிறம்... காதலும் இப்படித்தான்... காதல் எண்டதும் இப்ப அவளின்ர நினைவு வருகுது... காதலிச்சு... காதலை முறிச்சு... பிரிஞ்சு... எண்டாலும் இப்பவும் இந்த மரண

நேரத்திலும் அவளை நினைச்சால் மனசு குதூகலிக்குது... எவ்வளவு அருமையான மனிசி கிடைச்சும் ஏன் அவளின்ர நினைவு இன்னமும் மாறயில்லை...?

எண்ணங்களூடே கண்கள் சொருக நினைவறுகிறது... தூக்கமா?... கதவு தட்டப்படுகுது... என்னை வரச் சொல்லுறாங்கள் "கறுப்புத் துணியாலை கண்ணைக் கட்டி விடுறாங்கள்... பிறகு வானிலை ஏத்திக் கொண்டு போறாங்கள்... வெடி தான் வைக்கப் போறாங்களோ?... ஐயோ நான் சாகமாட்டன்... என்னைக் கொல்லாதையுங்கோ... விட்டிடுங்கோ..." கத்துகிறன்... தூக்கம் கலையுது. இப்படி ஒரு கோழித்தூக்கம் மாதிரித் தான் என்ர நித்திரை... இடையில பயங்கரமான கெட்ட கனாக்களும் இப்படித் தான் வந்து பயமுறுத்தும். நான் தனிச்சுப் போன பிறகு ஒவ்வொரு இரவிலும் இப்படித்தான் எப்பவும் தவிர்க்கேலாமல் செத்துக் கொண்டிருக்கிறன். பயங்கரமான கனவுகள்...

இப்பதையில் என்னை விசாரிக்கிறதுமில்லை... சாப்பாடு வரும்... அறைக்குள்ளேயே வாழ்க்கை, உறக்கமற்ற இரவுகள்...

கதவு தட்டப்படுகுது. வெள்ளை வானிலை கண்ணைக் கட்டிக் கொண்டு போறாங்கள். மைமல் விடியல் பொழுது... ஒரு இடத்தில் இறக்கிவிட்டு காது வெடி வைக்கிறாங்கள்... ஐயோ எண்டு குளறியபடி நிலத்திலை விழுகிறன். "வான்" பார்வையிலையிருந்து மறையுது. என்னைச் சுற்றி இரத்த வெள்ளம்... பார்வை எல்லாம் மங்கிக் கொண்டு வருகுது... வானம் மின்னல்

எறிஞ்சு இடி முழங்கிற மாதிரிக் கிடக்கு. கண்களைத் திறக்க எவ்வளவோ முயற்சி செய்து பார்க்கிறன். திறந்து பார்க்க முடியாமல் ஏதோ ஒரு அமுக்கம். பவன அமுக்கத்தால ஆகாயமெல்லாம் முகில் போர்த்திக் கிடக்கு. கண்களைத் திறக்க முடியாட்டிலும், பிரகாசமான வெளிச்சம் தோன்றுகிறபோது, அந்த ஒளி தெரியுற மாதிரி இல்லாட்டில உணருகிற மாதிரி இருக்கு...

பிறகும் ஒருக்கால் எல்லா இடமும் வெளிச்சமாக ஒரு மின்னல்! அது ஆகாயமெல்லாம் கிளைவிட்டு பூமியிலை விழுந்து தலை பிளந்து அதிருகிற மாதிரித் தெரியுது... கிட்டவாய்த் தான் இடி விழுந்திருக்கும்... அதின்ர வெக்கையிலை என்ர உடம்பும் தீக்குழம்பில கருகிப் போறமாதிரி இருக்கு... எண்டாலும் பக்கத்திலை நிண்டு ஆரோ கதைக்கிற மாதிரிக் கேட்குது... இதுவெறும் பிரமையில்லை... பிரக்ஞை இல்லாமல் மனசு அலையுது. கனவில்லை; நனவு போல இருக்கு.

நெஞ்சு அமுக்கத்திலை வேதனை தாங்கேலாமல் கிடக்கு. உடம்பெல்லாம் அனல் வீசுறமாதிரி... எங்கை என்ர உடம்பு கிடக்கு?...

அதார்?... ஒரு விகாரமான உருவம் எனக்குக் கிட்டவாய் வந்து நிண்டு பயம் காட்டுகிற மாதிரி... என்ர இரத்தம் எல்லாம் உறைஞ்சு போற மாதிரிக் கிடக்கு...

ஒண்டாகத் தெரிஞ்ச உருவம். இரண்டாகி, மூண்டாகி தெளிவில்லாமல் தோன்றுது... எண்டாலும் என்னை நோக்கி மெல்ல மெல்ல நெருங்கி வாறமாதிரிக் கிடக்கு...

சின்ன வயதிலை தும்பி பிடிச்சு வால் தலைப்பை நுள்ளி எறிஞ்சிட்டு, அதுக்குள்ளை புல்லைச் செருகி பறக்க விட்டு வேடிக்கை பார்த்ததும், வண்ணத்துப் பூச்சியின்ர வடிவான சிறகுகளைப் பிடுங்கி அதைத் துடிதுடிக்க வைச்சதும், பொன்வண்டைப் பிடிச்சு தீப்பெட்டிக்குள்ளை அடைச்சு வைச்சதும் இப்ப ஒவ்வொண்டா நினைவுக்கு வருகுது... பாட்டி சொன்ன கதையளிலை வாற மாதிரி கொதி எண்ணெயுக்கை தான் போடப் போறாங்களோ?... யோசிக்க யோசிக்க பயமாயிருக்கு.

இப்ப கொஞ்ச நாளாய், செத்துப் போவன் எண்ட பய உள்ளூறுத்தலாலை, வாழ்க்கையின்ர எதிர்பார்ப்புகள் சரிஞ்சு முக்குளிச்சபோதுகூட இப்ப மாதிரிப் பயப்பிடேல்லை. உடம்புக்குள்ளேயே இரத்தம் உறைஞ்சு போன மாதிரிக் கிடக்கு.

என்னை அழிக்கிறதுக்கு கனலொன்று புறப்பட்டு வாறமாதிரி, கொடூரமான உருவங்கள் நீண்ட கூறான பற்களோட வந்து சுற்றி நிண்டு என்னை தூக்கிக் கொண்டு போகப் போறமாதிரிக் கிடக்கு. குழறிக் கதற வாயுன்னினாலும், சத்தம் வெளிவராமல், அதிலையும் தோற்றுப் போய்...

இப்ப பெரிய ஒரு உருவம் எருமைக் கடாவிலை ஏறியிருந்து வருகுது. கையிலை என்ன...? கயிறோ? நிச்சயமாக இது இயமன் தான்... பாசக் கயிற்றோட வாறன்...

என்னை விட்டு விடும்படி கெஞ்சிக் குளறிக் கை எடுத்துக் கும்பிட முயற்சிக்கிறன்... ஒண்டும் முடியவில்லை. கயிறு கழுத்திலை விழுந்து சுருக்குது.

எல்லாமே அடங்கிப் போற மாதிரி...

இலையான்கள் வந்து முகத்திலை மொய்க்குது... தட்டி விட கைகளை உயர்த்துகிறன். முடியேல்லை, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இருளும் நிசப்தமுமாய் உலகே செத்துக் கிடக்கு. எங்கும் மயான அமைதி குடிகொண்டிருக்கு. நினைவுகள் அறுத்தும் அறாமலுமாய்... நான் உயிரோடு இருக்கிறனா? செத்துப் போனனா? ம்... நான் சாகமாட்டன்! ஏதெதோ நினைக்க நினைக்கிறன். ஆனால் ஒண்டும் நினைக்க முடியாமல்... எனது இருப்பைத் தெரிவிக்க முடியாத ஒரு நிலையில் இருப்பதைக் கூட முழுமையாய் உணர முடியவில்லை. கனவு இல்லையெண்டு விளங்குது.


திடீரெண்டு லேசு லேசாகி வானவெளியில் பறப்பது போன்ற உணர்வு... பாரமற்றதாக இருக்கு. சின்னவயதில் பறக்கும் பறவைகளைப் பார்த்து நானும் பறக்க வேணுமெண்டு ஆசைப்பட்டிருக்கிறன்... பிறபு பிளேனிலை கூட பறக்கக் கிடைக்கயில்லை. இப்ப மகிழ்ச்சியான பிறப்பு... ஆனாலும் இறக்கைகள் எதுவும் இருப்பதாகத் தெரியேல்லை... ஏன் என்னையே தெரியேல்லை. மாயமனிதன் மறைந்து வேடிக்கை காட்டுற மாதிரி... இன்னும் மேல மேல பறந்து கொண்டிருக்கிறன்... திடீரெண்டு ஒரு பெரிய பிரகாசமான ஒளிப்பிளம்பு தெரியுது! சூரியனோ?... இல்லை இல்லை... வெக்கை இல்லையே...! அந்தப் பேரொளியை நெருங்க நெருங்க மனதெல்லாம் புளகாங்கிதமடைவதாய் உணருகிறன். இப்ப அந்த ஒளியைக் கடந்து செல்வதா... திரும்பிச் செல்வதா?... ஒளிப்பிழம்பின் வாசலில்

நின்றபோது பூமிப்பந்து தெரியுது... நினைவுகளும் தெளிவாவது போன்ற நிலை... பிரமைதானோ?... ஒண்டுமாய் விளங்கவில்லை.

அதென்ன அந்த வீதியிலை கூட்டம்? ஆரையோ சுட்டுப் போட்டுப் போட்டிருக்கிறாங்கள்... விசாரணை நடக்குது போல... ஒரு பெண், அவனது மனைவியாக இருக்க வேணும்... கதறிக் கதறி அழுகிறாள். பரிதாபமாக நோக்கிறன்... அது ஆரோ அறிமுகமான... அட என்ர மனிசி... என்ர மனிசி... ஏன் அழுகிறா? பிள்ளையளும் அவவின்ர காலைக் கட்டி அழுகுதுகள்... ஏன் அழுகுதுகள்? ஆர் செத்திருப்பினம்? பிரதேத்தை வெள்ளைத் துணியால் மூடியிருக்கு. நீதிவான் வருகிறார்... பொலிஸ்காரரர், உடலை திறந்து காட்டுறார்... ஆர் அது?... அட என்னைப் போல இருக்கு... நான்... நான்... செத்துப் போயிட்டனா?... ம்... ம்... நான் சாகமாட்டன்... நான் சாகமாட்டன்... என்ர மனிசியை, என்ர பிள்ளையளை, என்ர கதை, கவிதையகளை விட்டிட்டு நான் சாகமாட்டன்.

இதற்கிடையில எந்த ஒளிப்பிழம்பு உள்ளே இருக்குது. நான் அப்படியே மறைஞ்சு போறன்.

– ஞானம் (2007)





# உறவுகள்

மாரிக்காலக் காலை வெயிலின் தகிர்ப்பின் சண்டித்தனத்தை எதிர்க்க முடியாமல், இயற்கை வெறுப்போடு கிடக்கிறது. ஓடிக் கொண்டிருந்த சயிக்கிளின் வேகத்தில், தழுவிச் செல்லும் வாடைக்காற்றின் சுகத்தில் தேகம் இதம் கண்டது. கீழ்வானத்திலிருந்து புறப்பட்டுவிட்ட கதிரவன் மின்மினிகளைத் தன் தேகத்தில் அள்ளிப் போட்டுக் கொண்டு வெள்ளிக்கதிர்களினால் பூமியைத் தழுவிக் கொண்டிருந்தான்.

அம்மா தந்த பட்டியல் படி சந்திக்குச் சென்று, பொருட்களை வாங்கிக் கொண்டுவர போய்க் கொண்டிருந்தேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இது எனது கடமை.

அதிகாலை வரை மழைமேகங்களால் மறைக்கப்பட்டிருந்த வானம், சேலை அகற்றி, நீல வண்ணத்தில் சிரித்துக் கொண்டிருக்கிறது. நத்தார்

பண்டிகைப் பிரார்த்தனைகள் முடிந்து போகும் கிறிஸ்தவர்களும், திருவெம்பாவை இறுதி நாட் பூசை முடிந்து திரும்பும் இந்துக்களுமாகத் தெருவே கலகலப்பாக இருந்தது. பருவத்திற்கே உரிய ஈர்ப்பில், எதிர்வரும் வண்ணச் சிட்டுக்களைக் கண்கள் தழுவிச் செல்வதைத் தவிர்க்க முடியவில்லை.

நளினி நினைவில் வந்தாள். போன மாதம் நெல்லியடியில் கண்டபோது என் மனம் பூரித்தது. நினைவுக்கு வந்தது. நளினியை அருகிலிருந்து பார்த்தாலும், தூர இருந்து பார்த்தாலும் அழகாகத் தெரிந்தாள். வில் போன்ற அந்தப் புருவங்கள் ஒரு அற்புதமான ஓவியனால் வரையப்பட்டது போலவும், உதடுகள் அளவாகப் பிடித்து வைத்தது போலவும் நீண்ட மூக்கு, அங்கங்கள் எல்லாமே அழகுக்கு அழகூட்டுவனவாகவும் இருக்கும். தலைமயிர் நீண்டதாக இல்லாத போதிலும், அதை அவள் கவர்ச்சியாக வைத்திருந்தாள். எனக்கு இதுவரை பான்ற்ரும் ரீ சேட்டும் பெண்கள் அணிவது பிடிப்பதில்லை. தங்கை தேவகிக்கும் வாங்கிக் கொடுத்ததில்லை. ஆனால் போன தடவை நளினியை அந்த உடையில் பார்த்ததும் எனது எண்ணத்தை மறுபரிசீலனை செய்திட வேண்டியதாயிற்று. எந்த உடையும் அவளுக்கு எப்படிப் பொருந்துகின்றது என்ற வியப்பு எனக்குள்!

எனக்கும் திருமண வயது. வேலை கிடைத்துவிட்டது. அம்மாவுக்கும் தனது அண்ணன் குடும்பத்தில் எனக்குச் செய்து வைக்க வேண்டுமென்ற விருப்பம். பழைய மனக்கசப்புகளையும் மறந்து, போன

மாதம் அம்மா நளினியை எனக்குச் செய்து வைப்பதற்கு கேட்டு மாமா வீட்டிற்குச் சென்றபோது, நான் தடுக்காததற்குக் காரணம் மச்சாள் மீதிருந்த ஒருவித மயக்கம்தான்.

ஆனால், மாமியோ நளினிக்கு இப்போது கலியாணம் செய்து வைக்கும் நோக்கம் தங்களுக்கு இல்லை என்று கூறி அனுப்பிவிட்டா. அவர்களுக்கு இருக்கும் வசதிக்கு அவர்கள் பெரிய இடமாகப் பார்ப்பதாக தரகர் கூறினார். கடந்த ஒரு மாதமாக இது என் மனதை நெருடிக் கொண்டிருந்தது. ஏற்கனவே சில காலம் மாமா வீட்டில் தங்கியிருந்த காலத்தில் நளினியை எனக்குப் பிடித்துவிட்டது.

அவள் அழகிதான். ஆனாலும் அந்த அழகைப் பின்தள்ளும் அகம்பாவம், எனினும் அவளிடமிருந்த ஆற்றலும், ஆளுமையும், சலனப்படாத தன்மையும் என்னை மிகவும் ஈர்த்தது. அப்போது கட்டிளமைப் பருவம். இப்போது வளர்ந்து மனம் பக்குவப்பட்டிருப்பாள் என்ற நப்பாசை. ஆனால் அவள் கூட கலியாணத்தில் அதிக அக்கறை காட்டவில்லை என அம்மா கூறினார். வெட்கமாக இருக்கும் என என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

நளினி இன்னும் மாறவில்லை என்பதை அண்மையில் அவளைக் கண்டபோது புரிந்தது. எனினும் அவள் மீதான என் விருப்பம் மாறாமலே இருந்தது. மனதிற்குப் பிடித்தவள் நம்மைத் தூக்கி எறிந்தாலும், நம்மால் அப்படி முடிவதில்லையே?

மாமா பெரிய பணக்காரர். பல வள்ளங்களை வைத்து கடற்தொழில் செய்து கொண்டிருந்தார். அந்தக் கடற்கரைப் பிரதேசத்திலேயே அவர்களது வீடுதான் பெரியது. அவர்களின் பணத்திற்கு ஏணி வைத்தாலும் எமக்கு எட்டாது. மாமியிடமிருந்த பணக்காரி என்ற அகம்பாவம் மச்சாளிடமும் இருந்தது. மாமா சற்று வித்தியாசமானவர். அம்மாவின் மீதும் எங்கள் மீதும் நல்ல பாசம்.

இவ்வுலக வாழ்வை ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணத்தில் பார்க்கிறார்கள். மனித வாழ்க்கை உடலாலும், உணவாலும் மட்டுமானதில்லை. வாழ்க்கை என்பது உயிர் வாழ்வதற்கு மட்டுமில்லை. உயர் வாழ்க்கை வாழ்வதற்கும்தான். உயிர் வாழ்க்கை என்பது வேறு. உயர் வாழ்க்கை என்பது வேறு. உயர் வாழ்க்கை அமைய உள்ளம் செம்மை அடைய வேண்டும் என அம்மாவும் நாங்களும் நினைக்கின்றோம். ஆனால் பணம், பட்டம், பதவி தான் வேண்டும் என மாமி நினைக்கிறா. நளினி மாறுவாளா? என் மனதின் ஆழமான அன்பைப் புரிந்து கொள்வாளா?

பலவிதமான மன உணர்வுகளோடு கடைவீதிக்குச் சென்ற எனக்கு காலையில் நடந்து முடிந்த அபூர்வ அதிசய அனர்த்தம் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை. நகர வீதிகளில் என்றுமில்லாத ஒரு வித்தியாசமான பரபரப்பு தெரிந்தது. ஆங்காங்கே கூடிக் கூடி நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். சயிக்கிளை நிறுத்தி ஒரு காலை நிலத்தில் ஊன்றியபடி, உரையாடல்களுக்குக் காது கொடுத்தேன்.



"கடல் பெருகி ஊருக்குள்ளை வந்திட்டுது... தென்னை மர அளவு உயரமாக எழும்பி அலை வந்ததாம். வேகமெண்டா ஏரோப்பிளேன் மாதிரி..."

"மெய்யோ?... இதென்ன புதுமையாயிருக்கு? புயல் மழை கூட இல்லாமல்... ஒரு வேளை வதந்தியோ?"

"கடல் பூகம்பம் எண்டு றேடியோவிலை சொல்லுகிறார்கள். சுனாமி எண்ட பெயராம் உந்த ஆழிப்பேரலைக்கு."

பலவிதமான கருத்துக்கள் காற்றில் கலந்து வந்ததால், சயிக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு தகவல் அறிய முயன்றேன். தகவல்கள் நம்ப முடியாதவையாகவும், கிலிகொள்ள வைப்பவையாகவும் இருந்தன.

"இப்பவும் அடிக்குதோ? திரும்பியும் வருமாமோ?"

"நிண்டுட்டுது என்று கேள்வி..."

கடைகளில் எல்லாம் வானொலியை உரத்த சத்தத்தில் விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நானும் செவிமடுத்தேன். காலையில் கடல் வற்றிக் கொண்டு

உட்சென்றதாகவும், சிறிது நேரத்தின் பின்னர் பேரலைகள் ஏற்பட ஆரம்பித்து மிகப் பிரமாண்டமான இரண்டு அலைகள் வந்து கரைதாண்டி ஊர் மனைகளுக்குள் புகுந்து வடகிழக்கு மற்றும் தென்பகுதிகளில் கரையோரம் எங்கும் பேரழிவு ஏற்பட்டதாகவும் தகவல் அறிந்ததும் மனம் பதறியது. உயிர் இழப்புகள் நூறுகளாயிருந்து, நேரம் செல்லச் செல்ல ஆயிரங்களாகி பல்லாயிரங்களாக அதிகரித்தது என வானொலிச் செய்தி கூறியது.

பெறுமதிமிக்க பல உயிர்களோடு வீடு, வாசல், உடைமைகள், வாகனங்கள், வள்ளங்கள் என பலவித சொத்துக்களும் அள்ளுண்டு சிதைந்து போனதாகச் செய்திகள் தெரிவித்தன.

மாமாவையின் வீடு கடற்கரையில் தான் இருந்தது. நளினியின் நினைவு சட்டென்று மேலோங்கியது. மாமா குடும்பத்தவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கலாம் என மனது பதகளித்தது. கடவுளே… அவர்களுக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது என பிரார்த்தித்தேன்.

"மந்திகை ஆஸ்பத்திரியில் இறந்த பிரேதங்கள் நூற்றுக்கணக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கு. அதோட காயப்பட்டவை, மூர்ச்சையானவை எண்டு வாட்டுகளெல்லாம் நிரம்பி வழியுது." ஒருவர் பதைபதைப்புடன் சொல்லிக் கொண்டிருந்தார்.

"நீங்கள் பார்த்தனீங்களோ?"

"ஓம் இந்த இரண்டு கண்ணாலையும் பார்த்திட்டு வாறன்… அங்க சனமெல்லாம் கத்திக் குளறிக் கொண்டிருக்குதுகள்…"

அதற்கு மேல் என்னால் நிற்க முடியவில்லை. சயிக்கிளை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தேன்.

என் மனதில் நேற்றிலிருந்தே ஏதோ நடக்கப் போகின்றது என்ற எச்சரிக்கை மின் அலை போல் அதிர்ந்து கொண்டிருந்தது இதற்காகத்தான் என்று இப்போது புரிந்தது. போர்த்தவிர்ப்பு முறிந்து மீண்டும் யுத்தம் வெடிக்கப் போகிறதோ என்றுதான் மனம் பதகளித்தது. நீறு பூத்த நெருப்பாக இருந்து அடங்கிப் போயிருக்கும் யுத்தம், சாம்பல் தட்டுப்பட்டு மீண்டும் அழிவுகளும், அவலங்களும் ஏற்படுமோ என்ற பயம் மனதைச் சிலிர்க்க வைத்துக் கொண்டிருந்ததால் இரவு சரியாக உறங்கக் கூட இல்லை. கால் நூற்றாண்டு கால யுத்தத்தின் குருதிச் சுவடுகளில் நானும் தோய்ந்து எழுந்தவன் என்பதால் மீண்டும் அப்படி நிகழக் கூடாது என்ற அங்கலாய்ப்பு மனதில் எழுந்தது.

நான் ஒன்று நினைக்க இப்போது வேறொன்றாகி...

சமுத்திரம் நீரோடு தொடர்புடையது தான். ஆனாலும் தினமும் அலை வந்து மண்ணோடு தழுவி தொடர்புபடுத்துகிறது. சங்கமிப்பு என்பது இன்பப் பிரவாகத்தை ஏற்படுத்துவதுதானோ? வானும் கடலும் கூட தொலைவில் சங்கமிக்கின்றன தானே? சூரிய அஸ்தமனத்தின்போது அதைப் பார்ப்பதே பேரின்பம்தான். அந்தச் சங்கமிப்பை இரசித்தபடி மக்கள் கூட்டத்தினர் மின் செலவின்றி காற்றை வாங்கிச் செல்வார்கள்.

ஓ... அந்த அழகிய கடலா இப்போது? வாழ்வளித்த கடல் வாழ்வழிக்கும் என்று யாரும் நினைத்திருப்பதில்லை. இறைவனும் கண்ணுறங்கிவிட்ட ஒரு கணப் பொழுதில் இயற்கை அவனையும் தோற்கடித்துவிட்டது. ஒரு சில நிமிடப் பொழுதில் எல்லாமே நடந்து முடிந்து விட்டதோ?

மனதில் பலவிதமான குழப்ப எண்ணங்களோடு வைத்தியசாலையை அடைந்தபோது அங்கு கூட்டம் நிரம்பி வழிந்தது. எங்குமே மரண ஓலம். தாயைப் பறிகொடுத்த குழந்தை, குழந்தையைத் தவறவிட்ட தாய், மனைவிக்காகத் துடிக்கும் கணவன், இறந்த கணவனின் உடலருகே கதறியழும் மனைவி, உடல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த காட்சியைப் பார்க்க குருதியே உறைந்து விடும் போலிருந்தது.

உடல்களைப் பார்வையிட்டேன். அதில் மாமா குடும்பத்தினரின் உடல்கள் இல்லாதபோது மனம் ஆறுதலடைந்தது. பின்னர் அவர்களை வாட்டுகளில் தேடினேன். அங்கும் இல்லாதபோது வெளியே வந்து, நிற்கும் கூட்டத்தில் தேடினேன். சிவா என்ற அழைப்பு! மாமாவின் குரல் தான்!

எதிர்பாராதவிதமாக மாமாவைக் கண்டதும் மனம் பூரித்தது. ஓடிச்சென்று அவரது கைகளைப் பற்றியபடி, நளினி... மாமி... என்று நாக்குழறக் கேட்டேன்.

"எல்லோரும் தப்பியிட்டம்..." மாமாவின் கண்கள் பனித்தன. "நாங்கள் தப்பினது அருந்தப்பு. ஓட ஓட கடல் துரத்திக் கொண்டு வந்தது. கடைசியில் இடுப்பு வரை

அமிழ்த்திப் போட்டுது. பிறகு வடியத் தொடங்கியிட்டுது.'' மாமாவின் உடல் இன்னமும் வெடவெடத்துக் கொண்டிருந்தது.

''வீடு வாசல், வாகனங்கள், வள்ளங்கள், பொருள் பண்டங்கள் எல்லாமே அடிபட்டுப் போச்சு சிவா... மாமியின்ர தங்கைச்சியவையின்ர குடும்பம் அப்படியே கடலோட போட்டுது...''

மாமியும் நளினியும் இன்னொருபுறம் நின்று விசும்பிக் கொண்டிருந்தனர். நான் எல்லோருக்கும் ஆறுதல் சொன்னேன். அவர்கள் அழுது முடியவில்லை.

இதற்கிடையில் கரைதாண்டி வந்த கடல் மீண்டும் தன் எல்லைக்குள் சென்று விட்டதாகவும், கடல் அலைகளின் சீற்றம் குறைந்து விட்டதாகவும் அறிந்தோம். நளினியையும் மாமியையும் அங்கேயே நிற்கச் சொல்லி விட்டு, மாமாவைச் சயிக்கிளில் ஏற்றிக் கொண்டு கடற்கரைப் பகுதிக்கு விரைந்தேன். அந்தப் பகுதி முழுவதும் சுடுகாடாக இருந்தது. வீடு வாசல்கள் எல்லாம் இடிந்து சரிந்து அள்ளுப்பட்டுப் போயிருந்தன. வாகனங்கள் எல்லாம் நொருங்கிப் போயிருந்தன. மாமாவின் வீட்டில் எச்சங்கள் ஏதுமில்லை.

போராளி இளைஞர்களும், இராணுவத்தினரும், பொதுமக்களும் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள். இடிபாடுகளுக்கிடையில் இருந்த சடலங்களையும் காயப்பட்டவர்களையும் மீட்டுக் கொண்டிருக்கவே நாமும் இணைந்து சிறிது நேரம் செயற்பட்டோம்.

மீண்டும் வைத்தியசாலைக்குத் திரும்பியபோது பசி வயிற்றைக் கிள்ளியது. நளினியும், மாமியும் சோர்ந்து போயிருந்தனர். குழந்தைகள் பசியில் வீறிட்டு அழுதனர். சில தொண்டர் நிறுவனங்கள் பாண், பானம் முதலானவற்றை வழங்கியபோது அவை தேவாமிர்தமாக இருந்தன.

மாமியும், நளினியும் இன்னமும் விசும்பிக் கொண்டிருந்தனர். "இப்படியே இங்கே நின்று இனி என்ன செய்யுறது? எங்கட வீட்டுக்குப் போவாம் மாமா" என அன்போடு அழைத்தேன்.

எல்லோரும் தயங்கினார்கள்.

"பழையதை யோசிக்காதேயுங்கோ மாமி. இந்த நிலைமையிலும் மனித உறவுகளும், மனித நேயங்களும் பேணப்படாட்டில் என்ன அர்த்தம் இந்த வாழ்வில்? கால் நூற்றாண்டு காலம் எதிரும் புதிருமாக நின்று சண்டைப்பட்ட ஆமியும் போராளியளும் இணைந்து ஒன்றாக நின்று மீட்புப் பணிகளில் ஈடுபடுகினம்... நாங்கள் ஒண்டுக்குள்ள ஒண்டு..."

நளினி நன்றிப் பெருக்கோடு என்னை நோக்கினாள். அவளது பார்வையில் ஏற்பட்டிருந்த கனிவு எனக்கு வியப்பை ஏற்படுத்தியது. மாமி தலைகுனிந்து நின்றார்.

எல்லோரையும் வற்புறுத்தி வீட்டிற்குக் கூட்டிச் சென்றேன். தேவகி உடனே சுடச்சுட தேனீர் கொண்டு வந்தாள். அம்மா துரிதமாகச் சமைத்து உணவு

பரிமாறினாள். தேவகி நளினிக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"எல்லாத்தையும் இழந்திட்டு வந்து நிற்கிறம். வீடுவாசல் நகைநட்டு, பொருள் பண்டம், வாகனம் வள்ளம், ஐஸ்தொழிற்சாலை எதுவுமே மிச்சமில்லை..." மாமா ஏக்கத்துடனே கூறினார்.

"என்ன செய்யுறதண்ணை. எல்லாம் ஊரோடு ஒத்தபடி நடந்துபோச்சு... ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. எங்கட வீடு சிறிசென்றாலும் மனம் பெரிசு. தம்பி இருக்கிறான். உழைச்சு எல்லாரையும் பார்ப்பான்" அம்மா ஆறுதல் வார்த்தைகளால் ஒத்தடம் கொடுத்தள்.

மாமி குற்ற உணர்வில் தவித்துக் கொண்டிருந்தார்.

ஏழு வருடத்திற்கு முன்னைய ஞாபகம். அப்போது எங்கள் கிராமம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தப்பட்டது. சில வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சில அப்பாவி இளைஞர்களைச் சுட்டுக் கொன்றனர். இன்னும் சிலரைப் பிடித்துக் கொண்டு சென்றனர்.

இறுதி வரை இடம்பெயர்வதில்லை என்றிருந்த எமது உறுதி, ஷெல் வீட்டில் வந்து விழுந்து அப்பாவையும் பலி கொண்ட பின்னர் தகர்ந்தது. வீட்டுக்குள்ளேயே அப்பாவை அவசரம் அவசரமாக அடக்கம் செய்து விட்டு, உயிர் தப்பினால் போதும் என்று எண்ணியபடி சில

முக்கியமான பெறுமதியான பொருட்களோடு இரவோடு இரவாக இடம்பெயர்ந்தோம்.

முதலில் பாடசாலைக்குச் சென்றோம். இடநெருக்கடியும், அசௌகரியங்களும் அங்கு தங்குவதை அசாத்தியமாக்க மாமாவையின் நினைப்பு வந்தது.

நாம் மாமாவின் வீட்டிற்குச் சென்றபோது மாமி வாசலில் நின்றார். உற்சாகமான வரவேற்பில்லை. இதற்கிடையில் அங்கு வந்த மாமா எங்களை அன்போடு வரவேற்றார்.

"காலமை பேப்பர் பார்த்த பிறகுதான் உங்கட பகுதியில சண்டை என்று தெரிஞ்சுது. பதறிக் கொண்டு வந்தன். நல்லவேளை நீங்களே வந்து சேர்ந்திட்டியள்..." என அன்போடு நடந்தவை பற்றியும் விசாரித்தார்.

மாமியும் இப்போது மாமாவுடன் சேர்ந்து கொண்டு புதினம் விசாரித்தார். "என்னவோ கடவுள் புண்ணியத்தில் தப்பி வந்திட்டியள்... முகாமில் தங்கினால் நிவாரணம் நிறையக் கிடைக்கும்..." மாமியின் வார்த்தைகளில் அம்மாவின் முகம் ஓடிக் கறுத்தது. எனினும் மாமாயின் வற்புறுத்தலினால் மனம் தேறியது.

மாமாவின் விருந்தாளிகளாகச் சில நாட்கள் இருந்த போது பல மனநெருடல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. மாமியின் இயல்பு அப்படி. அவர் பெரும் போக்கு, வசதியான குடும்பத்திலிருந்து வந்தவர். காதல் கல்யாணம் வேறு. மாமா பாவம். மாமிக்கு

அடக்கம் என்பது இங்கு வந்த சில நாட்களிலேயே தெரிந்தது. நாங்கள் அங்கு தங்கியிருப்பது மாமிக்குப் பிடிக்கவில்லை என்பதால் மாமா சில சமயங்களில் இருதலைக் கொள்ளி எறும்பு போல் சிரமப்படுவதைப் புரிந்து கொண்டோம்.

"மாமா, இங்கே நாங்கள் இருக்கிறது கஷ்டம் தானே... உங்களுக்கும் இடைஞ்சல். நாங்கள் வாடகைக்கு ஒரு வீடு பார்த்துக் கொண்டு போக யோசிக்கிறம்..."

"இதென்ன சிவா. இவ்வளவு பெரிய வீடிருக்க நீங்கள் ஏன் வேற இடத்திற்குப் போக வேணும்..." என்ற மாமாவின் அன்பையும் மீற முடியவில்லை. எங்களை மறித்ததற்காக பின்னர் மாமா மாமியிடம் வாங்கிக் கட்டிக் கொண்டார்.

மாமி எதற்கெடுத்தாலும் நொட்டை சொல்வார். ஒருநாள் அம்மா அயற்சியில் சோபா செற்றியில் படுத்ததைக் கண்ட மாமிக்கு வந்ததே கோபம், "இது படுக்கிறதுக்கே வைச்சிருக்கு? காசு கொடுத்து வாங்கினால் தானே பெறுமதி தெரியும்?" என்று கூறவே அம்மாவுக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது.

இதை எல்லாம் மாமாவிடம் சொல்லி, குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்த அம்மா விரும்பவில்லை. எனினும் இறுதியில் மாமாவுக்குப் புரிந்து போயிற்று. அவராகவே வீடு பார்த்து ஒழுங்கு செய்தார். கூடவே மாமிக்குத் தெரியாமல் என் படிப்புக்கும் உதவி செய்தார்.

•

ஏழு வருடத்திற்கு முன்னைய நினைவுகளில் நான் மூழ்கியிருந்தபோது அம்மாவோ எதுவித மனத்தாக்கமுமின்றி மாமா குடும்பத்தவரை அன்போடு உபசரித்தாள். எங்களுக்குப் பற்றாக்குறை இருந்தாலும் அவர்களுக்குக் குறை வைக்க மாட்டாள். தேவகியும் வெறும் கையோடு வந்த நளினிக்குத் தன்னிடமிருந்த புது உடுப்புகளையும், அம்மாவின் சங்கிலியையும் அணியக் கொடுத்தாள். "அண்ணை... அண்ணிக்கு சுடிதாரைவிட ஜீன்ஸும், ரீசேட்டும் தான் பிடிக்கும். கடைக்குப் போய் வாங்கி வாங்கோ..." என்றாள். தேவகியின் அன்பில் நளினியும் உருகினாள். தனிப்பிள்ளையாக வாழ்ந்த அவளுக்கு இப்போது அன்பு, பாசம், உறவு என்பன புரிய ஆரம்பித்தது.

ஒரு உடுப்புக்கு இரண்டு உடுப்பாக நான் வாங்கி வந்த போது நளினியின் முகம் மலர்ந்தது "உங்களுக்குத் தான் கஷ்டம்..." என்றாள்.

கடனுக்குத் தான் உடுப்பு வாங்கி வந்திருந்தேன் என்றாலும், "இல்லையே நளினி, உனக்குத் தாறதில எனக்கு ஆனந்தம்" என்றேன்.

நளினி பூரிப்புடனும், நன்றியுடனும் என்னை நோக்கினாள். அவளது கண்கள் முதற் தடவையாக ஆயிரம் கதைகளைச் சொல்லாமல் சொல்வதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. நாட்கள் நகர்ந்தன. மாமா குடும்பத்தினர் எமது வீட்டில் தமது சொந்த வீட்டில் இருப்பதாகவே உணர வைத்த அம்மாவின் பெருந்தன்மையினால் எங்கள் வீட்டில் ஆனந்தம் பொங்கி விளையாடியது.

ஆழிப்பேரலை ஏற்படுத்திய அழிவுகளாலும் அனர்த்தங்களினாலும் உடைந்து போயிருந்த மனங்களும் மெல்ல மெல்ல வடுக்களை மறந்து மனம் இயல்புக்கு வரவே மாமா, "இனி நான் மறுபடியும் தொழில்துறை ஆரம்பிக்க வேணும். இவங்கட நிவாரணம் கிடைக்குமென்று நம்பிக்கை எனக்கு விட்டுப் போச்சு... நாங்கள் ஊரோட போக யோசிக்கிறம்" என்று கூறினார்.

"என்ன அண்ணை? வீடுவாசல் இல்லாமல் இப்ப போய் என்ன செய்யுறது? வீட்டைக் கட்டிக் கொண்டு போகலாம். அதுவரை இங்கே இருக்கலாம். நீங்கள் மட்டும் தொழில்துறை ஆரம்பிக்கப் போய்ப் போய் வரலாம் தானே?" என்று அம்மா அன்போடு கூறவே மாமா நெகிழ்ந்து போனார். மாமியும் தான்.

"எங்கட இரண்டு பேரின்ர நகையளைக் கொண்டு போய் விற்றுவிட்டு தொழில் தொடங்குங்கோ அண்ணை..."

மாமா மறுத்தார். அம்மா பிடிவாதமாகக் கொடுத்தபோது மாமிக்கும் அன்பு, பாசம், உறவு என்பவை பற்றி எல்லாம் புரிய ஆரம்பித்தன. மாமியின் வார்த்தைகள் வெளிப்பட்டது. "இப்பவே ஒரு தொழில் துறை இல்லாமல் சிவாவினுடைய உழைப்பில் சீவிச்சுக் கொண்டிருக்கிறம். இந்த நிலையில் நகை நட்டையும் தந்துதவ வாறியள்..."

"இப்ப ஏன் கலங்கிறியள் அண்ணி? சிவா ஆர்? உங்கட மருமகன் தானே?..." என்று அம்மா கூறிய போது நான் நளினியின் பக்கம் திரும்பினேன். அவளது முகம்

ஓடிச் சிவந்தது. உங்கட மருமகன் என்பதை அம்மா அழுத்திச் சொன்னது போலிருந்தது.

இப்போதெல்லாம் முன்னரைப் போலில்லாமல் நளினி என்னோடு கதைப்பாள். மாமி மாமி என்று அம்மாவில் உருகுவாள். தேவகியுடன் அப்படியொரு நட்பு.

காலையில் நான் ரவுணுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது நளினி என்னருகில் வந்து மௌனமாக நின்றாள். என்ன? என்பது போல் அவளை நோக்கினேன்.

அவள் சிறிது தயங்கினாள்.

''என்ன ஏதாவது அலுவலோ?'' என்று நோக்கினேன்.

''ஒன்றுமில்லை ரவுனில் சாமான் வாங்க வேணும்...'' மீண்டும் தயக்கம் முகத்திலே ஒரு வித வெட்கம். பின் மௌனம்.

''என்னவென்று சொல்லுமன்...''

''ஒரு பிறா... ஒரு கோட்டெக்ஸ் பக்கெட்'' என்றபடி தலை குனிந்தாள். இப்போது எனக்குச் சிரிப்பு வந்தது. ''சரி'' நான் புறப்பட ஆயத்தமான போது மீண்டும் குனிந்தபடி ''சைஸ் 32'' என்றாள். நான் கற்பனையில் மிதந்தேன்.

– மல்லிகை (2005)




நினைவுகளின் ஊர்வலத்தில் மூச்சுக் காற்று படும் நெருக்கத்தில் சந்திரா! முதல் முத்தத்திற்கிடையே சில கணங்கள்! கடித்த நுளம்பு நினைவைக் கலைத்தது. நுளம்புக்கடிதாங்க முடியவில்லை. போர்வையை விலக்கிவிட்டு எழுந்து உட்கார்ந்தேன். கொசு வலையின் ஓட்டைகளுக்குள்ளால் நுளம்பு சுதந்திரமாக வந்து போய்க் கொண்டிருக்கின்றது. புதிய வலை வாங்கலாம். எனினும் இந்த வலையே இன்னும் பாவிக்கக்கூடியது. பொத்தல்களைத் தைத்தால் போதும். அதற்கு எங்கே நேரம்? இல்லையில்லை, நேரத்தை ஒதுக்கி விடவில்லை என்பது தான் உண்மை. நுளம்புத்திரியும் ஒத்துக் கொள்ளாது. காலையில் எழும்போது தலையிடிக்கும்; இரவிலும் நாசு அரிக்கும். இதனால் திரியே வாங்குவதில்லை.

இல்லத்தில் ஒரு இல்லாள் வந்து விட்டால் எல்லாம் உரிய நேரத்தில் நடக்கும். இளமை தொலையப் போகிறது. இன்னும் அதற்கு வேளை வரவில்லை. அக்கா, அடுத்தடுத்துப் பிறந்து விட்ட இரண்டு தங்கைகள். அப்பா நேர காலத்துடன் போய்ச் சேர்ந்து விட்டார். அப்புறம் அம்மாவுக்கு முட்டுக் கொடுத்தது எல்லாம் நான்தான். அக்காவுக்கும் முதலாவது தங்கைக்கும் மாப்பிள்ளை தேடிச் செய்து வைத்ததில் காலம் கரைந்து விட்டது. கையில் இருந்தவையும் தான்.

சுவரில் தொங்கிய அப்பாவின் படத்தைப் பார்த்தேன். வாடாத செயற்கை மாலை படத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது. தொடர்ந்து அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஏதோ மனதைப் பிசைந்தது. கண்டிப்புடனும் எல்லையில்லா அன்புடனும் வளர்த்து ஆளாக்கிய தெய்வம். வேலையால் திரும்பிக் கொண்டிருந்தவர், கெலியிலிருந்து பாய்ந்த சன்னத் தொடர்களில் ஒன்று தலையைப்பதம் பார்த்திட, அந்த இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து அடங்கிப் போனார். வருடங்கள் ஓடிக்கரைந்த பின்னரும் அவர் பிரிவு ஏற்படுத்திய வடு மாறுவதாயில்லை.

அம்மா இடையிடையே அப்பாவை ஞாபகப்படுத்தி அழுவாள். அப்பா இருந்தபோது அவரோடு சத்தம் போட்டு சண்டையிட்டு இறுதியில் ஆற்றாமையால் அழுததைப் பார்த்திருக்கின்றேன். அம்மா மாறவில்லை. அப்பாவிற்குப் பிறகாவது அம்மா அழுகையை விட்டு விடுவாள் என்று நினைத்தேன். அழாமலிருக்க அம்மாவால் முடிவதில்லை போலும்.

அவளைப் போல் எனக்கு அழுகை வருவதில்லை. ஆண்களுக்கு கல் மனதோ? அன்பும் பாசமுமாக வளர்த்த அப்பா இறந்த சேதி கேட்டு ஒரு கணம் அதிர்ந்தேன். மனதில் எல்லையில்லா சோகம் முட்டி மோதினாலும் நான் அழவில்லை. கடைசியாக அழுத சந்தர்ப்பத்தை நினைவுகளில் தேடினேன். பிரேத அடக்கத்திற்காக வீட்டை விட்டுத் தூக்கிப் புறப்பட்டபோது பலரும் வெடித்தழ அன்று அழுத ஞாபகம். அதுவும் நீண்ட நேரம் அழவில்லை. அம்மாவும் தங்கைகளும் சுற்றி நின்று கட்டி அழுதபோது கூட வெறும் விசும்பல் தான் ஏற்பட்டது.

லைற்றை நூர்த்து விட்டு மீண்டும் வந்து படுக்கிறேன். கலைந்து போன தூக்கத்தை மறுபடியும் கொள்ள முடியவில்லை. இரவு அரக்கனின் அமைதியில் மனதில் ஆயிரம் வண்ணச் சிட்டுக்கள் ஊர்வலம் வருகின்றன. நடுவே தேவதை போல் சந்திரா.

வெட்டிப்போன அவள் பார்வை மனதை அரிந்து ரணமாய் வலித்தது. தினமும் எத்தனையோ பெண்கள் தரிசனமாகின்றார்கள். ஆனால் எவளாலும் இவள் நினைப்பைத் தோற்கடிக்க முடியவில்லை. எனது ஸ்கலிதக் கனவுகளில் கூட அவள் தான் வந்து போவாள். அவளிடமான ஈர்ப்பு அதீதமானது.

சந்திரா வேறு யாருமல்ல, எனது மாமன் மகள் தான். ஆனாலும் மகா அழுத்தக்காரி யாரும் அப்படி இப்படி நெருங்க முடியாது. மாமாவுக்கு ஒரே பெண். படித்துப்பட்டம் பெற்று ஆசிரியையாக வலம் வருகின்றாள். மாமாவின் சொத்துப் பத்திற்குக்

குறைவில்லை. தலையணைக்குள் பஞ்சுக்குப் பதிலாக ரூபா நோட்டுக்கள் தான் இருக்கும் என்பார்கள். எனினும் ஆடம்பர வாழ்வு கிடையாது. மகளையும் கடிவாளமிட்டே வளர்ந்திருந்தார்.

பிரம்மன் சந்திராவைப் படைத்த பொழுது எதுவித குறையையும் வைக்கவில்லை. பார்ப்போர் மயங்கும் கட்டழகி. படிக்கும் காலத்திலேயே அவள் மீது எனக்கு ஒரு கண். கண் என்றால் கண் மட்டும் தான். கதைத்துப் பேசக்கூட வாய்ப்பில்லை. மாமாவின் கழுகுப் பார்வைக்குப் பயம். மறுபுறம் சாந்தமான மாமியைப் பார்க்கும்போது தான் மனதில் தென்றலடிக்கும்.

எனது மச்சாள் தானே என்பதால் சந்திராவுக்குப் போட்டியில்லை என்று நினைத்து விடாதீர்கள். மாமன் மகள் வீதி வலம் வந்தால் கடை வீதியே கலகலக்கும். வெளியாரை விடுங்கள். ஊதி விரட்டி விடலாம். உள்ளுக்குள்ளேயே பலத்த போட்டி. எனது சொந்தத்தம்பி முதல், பெரியப்பா பையன்கள், சித்தப்பா புத்திரர்கள் எல்லோருமே எனக்கு வில்லன்கள். அல்லது நான் அவர்களுக்கு வில்லன். மணந்தால் அவளையே மணப்பது என்று எல்லோரும் கச்சைக் கட்டிக் கொண்டு நிற்கின்றார்கள். ஆனாலும் எனக்கொரு நம்பிக்கை. சந்திரா என்னைத்தான் விரும்புவாள் என்று!

ஆனால் எல்லோருமே அப்படித்தான் நினைத்துக் கொண்டிருப்பது பின் நாளில் தெரிந்தது. எனினும் எனது கற்பனையும், நம்பிக்கையும் தகர்ந்து போகவில்லை.

மனதிலே தோன்றிவிட்ட ஒருதலை ராகத்தை இருகை ஓசையாக்க முடியவில்லை. வீட்டுச்சுமைகளில் தோய்ந்து அமிழ்ந்து என் எதிர்காலம் பற்றி சிந்திக்க வாய்ப்பின்றி இயந்திரமாய் உழைத்துக் கொண்டிருந்தேன்.

அக்காவின் கலியாணம் முடிந்து தங்கையரில் ஒருத்திக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருந்தபோது தான் அந்த இனிப்பான சேதி கிடைத்தது. மாமா அம்மாவிடம் சந்திராவுக்கு என்னைக் கேட்டு வந்தார். சந்திரனுக்குப் போன மகிழ்ச்சி எனக்கு.

எனினும் அத்தனையும் அடுத்த கணமே தவிடு பொடியாகின. "அண்ணை உதை மட்டும் கேளாதையுங்கோ. சின்னவளுக்கும் முடிச்ச பிறகுதான் யோகனை விடேலும்..." என்று கறாராய்ச் சொன்னாள் அம்மா.

மாமாவின் முகம் ஓடிக்கறுத்து விட்டது. "சீதனம் நிறையத் தரலாம். பிள்ளையளின்ரை பெயரிலை காசைப்போடு. ஒண்டுக்கை ஒண்டுதானே பிறகும் பார்த்துச் செய்யலாம்..."

"காசு பணம் இல்லை முக்கியம். நல்ல மாப்பிள்ளை கிடைக்கவேணுமே. யோகன் இருந்தால் தான் அவளுக்கும் மதிப்பு..." அம்மா மசியவில்லை. மாமாவைப்போலவே என் மனக்கோட்டையும் தகர்ந்தது. விடு தேடி வலியவந்த சீதேவியை அம்மா மறுத்துவிட்டார். அன்றிலிருந்து சந்திராவை மறக்க முயன்றேன். இன்றுவரை அந்த முயற்சி தோல்விதான். வெட்ட வெட்ட தழைக்கும் வேலா வீட்டுப்புளி போல அவள் மீதான மானசீகக் காதல் தழைத்து வளர்ந்தது.



ஒரு தங்கையின் திருமணமும் ஒப்பேறிவிட்டது. திருமணத்திற்கு வந்திருந்த சந்திரா என்னைப்பார்த்து சிரித்தாளா, முகத்தை வெட்டித்திருப்பினாளா? என்று புரியவில்லை. அவளது முகத்தில் தெரிந்தது ஏமாற்றமா? கோபமா என என்னால் இனம் காண முடியவில்லை.

சின்னவள் சுமதி கொண்டு வந்த சேதி சரிந்த ஆல மரத்திற்கு விழுது முட்டுக்கொடுத்தது போல் என்னை நிமிர்ந்து உட்கார வைத்தது. "அண்ணை, சந்திரா மச்சாளுக்கு உங்களில ஒரு கண்..." கண் சிமிட்டிக் கூறினாள் சுமதி. "ஏன் சொன்னவளே?" தவிப்போடு கேட்டேன். உடனே, "சொன்னால் தான் காதலா...?" என்று திருப்பிக்கேட்டாள் சுமதி.

சுமதி மட்டும் தான் என்னோடு சுட்டித்தனமாகக் கதைக்கக்கூடிய சகோதரி.

"உங்களுக்கும் சந்திரா மச்சாளிலை விருப்பம் தானே?"

"ஆர் சொன்னது? அடி வாங்கப் போறாய்"

"மச்சாள் தான் சொன்னவ..."

"உண்மையாய்?"

இதயத்தின் ஆழத்தில் பதுங்கிப் போயிருந்த சந்திரா தூசி தட்டப்பட்டு மறுபடியும் மேலெழுந்து இரத்தச் சுற்றோட்டத்தில் கலந்தாள். பார்வைகளின் பரிமாற்றம் காதலைப் பகிரங்கமாகப் பறைசாற்றின. பாதைகளில் சந்தித்து ஓரிரு வார்த்தைப் பரிமாற்றம். காதல் இனித்தது. மனது நிரம்பிக்கனத்தது. கனதியில் வலி தெரிந்தது. சுவையான சுமை என்பார்களே, அப்படி!

தூக்கத்திற்கும் நினைவுகளுக்கும் தீராத பகை. தூக்கத்தை நினைவுகள் விரட்டியடித்து விடுகின்றது. காதல் வலி என்றால் சொல்லவே தேவையில்லை. அது சங்கிலி போட்டு விடுகின்றது. இன்னும் சொல்லப் போனால் காதல் போல ஒரு ஆளைக் கொல்லாமல் கொல்வது வேறொன்றுமில்லை. அது உள்ளத்திலிருந்து கொண்டே உடலையும் மனதையும் வதைக்கின்றது.

சந்திராவும் என்னைப் போல் தூக்கம் வராத இரவுகளில் என்னை நினைத்து உருகுவாளா? காதலை ஒவ்வொருவரும் தான் அனுபவித்த மாதிரித்தான் சொல்ல முடியும். ஆனாலும் அது நிஜம். காதல் இளையோரை

வதைக்கிறது. உண்மை. ஒரு மனிதன் எதிலிருந்து வேண்டுமானாலும் தப்பிக் கொள்ளலாம். ஆனால் காதலில் இருந்து தப்பிக் கொள்ளவே முடியாது என்று தோன்றியது.

நான் இதை என் அனுபவத்திலிருந்து சொல்கிறேன். என் அனுபவம் மட்டுமல்ல. நிறையப் பேரின் அனுபவமும் இதுதான். ஆண் பெண் இருபாலாருக்கும் அப்படித்தான்.

காதலுக்கு என்று உருவம், வடிவம் உண்டா? காதலர்களைக் காட்டலாம். காதலைக் காட்ட முடியுமா? இப்படித்தான் இருக்குமென்று ஒப்பிட முடியுமா? அதை உணர முடியும். மனம் தான் உணரும். சந்திராவும் நானும் பேசவில்லை, பழகவில்லை. ஆனால் காதலைப் பரஸ்பரம் உணர்கிறோம். இடையிலுள்ள சிலரும் இதைப்புரிந்து கொள்கின்றார்கள் – தங்கை சுமதியைப் போல்!

காதலுக்குப் பச்சைக்கொடி காட்டிய எனக்கு கலியாணத்திற்குக் காட்ட முடியவில்லை. சுமதியின் அலுவல் முடிய வேண்டும்.

மீண்டும் நுளம்பு கடிக்கிறது. இங்கே மலேரியா பயமில்லை. டெங்குவும் இல்லை. ஆனால் தூக்கம் தானில்லை. எங்கேயிருந்து இவ்வளவு நுளம்புகள் புறப்பட்டு வருகின்றன? அதிகாலையில் தான் கண்ணயர்ந்தேன்.

**ம**றுநாள் மகிழ்வாக விடிந்தது. சுமதியைப்பெண் கேட்டு வந்திருந்தார்கள். காதலா? கள்ளி! சொல்லவே இல்லையே!

ஜாம் ஜாம் என கொட்டு மேளம் வரை தடங்கலின்றியே நடந்து முடிந்தது.

நான் இனி சுதந்திரப் பறவை. சந்திராவிடம் பறந்து சென்றேன். "ஐ லவ் யூ" என்றேன். "ரூ லேட் யூ காவ் மிஸ் த பஸ். தாமதமாகி விட்டது. பேருந்தைத் தவற விட்டு விட்டீர்கள்..." என்றாள். "புட் போட்டிலாவது இடம் கிடைக்குமா?" என்றேன். "முயற்சியுங்கள் விழுந்து விட்டால் நான் பொறுப்பாளி அல்ல" முயற்சித்தேன். முயற்சி சிந்தித்தது. வாழ்வும் தித்திக்க ஆரம்பித்தது.

வீட்டில் அம்மா குண்டைத் தூக்கிப் போட்டாள்.

"யோகன்... உனக்குக் கலியாணம் ஒழுங்கு பண்ணிட்டன்... பதினோராம் திகதி நாள் வச்சிருக்கு..."

"ஐயோ என்னைக் கேட்காமல் ஏன் முடிவு செய்தியள்?" பதறினேன்.

"ஏன் பதறுகிறீர்கள் அண்ணா? சந்திரா மச்சாள் தான் பொம்பிளை..." சுமதி சிரித்தாள்.

சிரித்தேன். சிலிர்த்தேன். மலர்ந்தேன்.

கொட்டு மேளம் கொட்டியது.

பாலோடு வந்தவள் பாதம் தொட்டு வழிபட்டாள். "இதென்ன சந்திரா" அவளை அருகே எடுத்து அணைத்தேன். லைற்றையும் தான்.

நுளம்பு கடிக்கவில்லை. அல்லது கடித்தது தெரியவில்லை. முப்பது நாள், அறுபது நாள் அப்படி இப்படிக்கழிந்தது.

"ஐம்பதுக்கு ஐம்பது" என்றேன். "ஆண் பெண் சமத்துவம்"

"இல்லை இல்லை ஐம்பத்தியொன்றிற்கு நாற்பத்தியொன்பது" என்றாள். ஏற்றுக் கொண்டேன். அப்புறம் தான் தெரிந்தது. அவள் ஐம்பத்தியொன்று கேட்டது தனக்கு என்று. பின்னர் ஒரு நாளில் இதை நண்பனிடம் கூறினேன். "பரவாயில்லையே... எங்கள் வீட்டில நூற்றுக்கு சைபர்..." என்று ஆறுதல் கூறினான்.

சந்திரா எனக்கு மனைவியாக வந்ததும் நான் வாழ்வில் படிப்படியாக உயர்ந்தேன். பதவியில், எழுத்துத் துறையில், சமூகப்பணியில்...

எல்லாவற்றிலுமே சந்திரா ஊக்கியாக நின்று தூக்கி விட்டாள். என்னை உயர்த்தியவள் தானும் உயர்ந்தாள். முதலில் மகிழ்ந்தேன். பின்னர்...?

யோகனின் மனைவி என்று சந்திராவைச் சொன்னவர்களெல்லாம், இப்போது என்னை சந்திராவின் கணவர் என்று சொன்னார்கள். மனதில் ஏதோ ஒன்று நெருடியது. பெண் விடுதலையை எழுத்தில் வடித்தவன் நான்... ஜீரணிப்பதில் ஏனோ கஷ்டம் தெரிந்தது.

திருமணமாகி ஐந்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் நாள் ஞாயிற்றுக்கிழமையில் வந்ததில் எனக்கு மகிழ்ச்சி. ஏதேதோ திட்டமிட்டேன். நான் ஞாபகமூட்டும் வரை சந்திரா மறந்து போய் விட்டாள்.

"இன்று முழு நாளும் என் கூடவே" என்றேன். இயந்திர மயப்படுத்தப்பட்டு விட்ட வாழ்வு நீரோட்டத்தில் எனது நப்பாசை.

சொறி டார்லிங்... காலையில் லயன்ஸ் கிளப் கூட்டமிருக்கு... மாலையில் இந்து மாமன்ற விடுதியில் கூட்டமிருக்கு... இடையில வேணுமென்னா லஞ்சுக்கு எங்காவது செல்வோம்..." ஏமாற்றத்திற்குள்ளும் சிறிது ஆறுதல்; எனினும் மனதின் புழுக்கம் குறையவில்லை.

மதியம் அவளுக்காகக் காத்திருந்ததில் சலிப்புத்தான் மிஞ்சியது. தொலைபேசி அழைப்பு வந்தது. "மன்னிக்கனும் இங்கே பெண் விடுதலை பற்றி ஒரு கலந்துரையாடல் நடக்குது; ஆர்வமாயிருக்கு. மதிய உணவும் ஒழுங்கு செய்திருக்கிறாங்க தலைமை வகிக்கிறதால விட்டு விட்டு வரமுடியவில்லை... சாப்பிடுங்க. இரவுச் சாப்பாட்டுக்கு ஒன்றாய்ப் போவோம்" எரிச்சலை அடக்கிக் கொண்டேன். ஒரு குழந்தை இருந்தாலாவது வீட்டோடு நிற்பாள் என மனது நினைத்தது.

மனம் வலித்தது பெண்ணும் ஆணைப் போல சம உரிமையுள்ள பிறவிதானே? அப்புறம் ஏன் எனக்குக் கோபம் வருகிறது. சந்திரா என்னை நேசிக்கிறாள். உயிருக்கு உயிராக இன்னமும் காதலிக்கிறாள். கலியாணத்தின் பின்னான காதல் இனிமையானது. ஆனாலும்...

புத்தகங்கள் தோழமையாகின. நேரம் போனது தெரியவில்லை. வாசலில் அழைப்பு மணி. கதவைத் திறந்தேன். எதிர்பார்த்தது போல் சந்திராதான். மனதின்

தகிர்ப்பை முகம் காட்டியதை அவள் உணர்ந்து கொண்டு என் அருகே வந்து கை விரல்களைப் பிடித்துக் கொண்டாள். "காக்க வச்சிட்டேனா?"

என் கோபம் தணியவில்லை. "வெளியே போவோமா?..." மீண்டும் சந்திரா என் முகத்தைப்பார்த்தாள். பதில் இல்லாது போகவே என் நாடியைத் தடவிக் கொடுத்தாள்.


"என்னிலை கோபமா?" என் தலை அசைந்தது.

"டின்னருக்குப் போவோம். குளிச்சிட்டு வருகிறேன்." போகிற போக்கில் ஒரு முத்தம் தந்தாள்.

குளித்துவிட்டு வந்தாள்.தேவதை போல நின்றாள். வெளியே போக வேண்டிய அவசியம் இருக்கவில்லை. நெருக்கத்தில் இருந்தபோது "என்ன பரிசு தரப் போகின்றீர்கள்" என்றாள். வாங்கி வைத்திருந்த வைரத்தோட்டை எடுத்து நீட்டினேன். முகம் மலர்ந்தாள்.

"நீ என்ன பரிசு தரப்போகிறாய்?" என்று கேட்டேன். காதோடு சொன்னாள். "குழந்தை."

– புதிய உலகம், அனைத்துலக தமிழ் சஞ்சிகை (2004)






அடுப்பில் சோற்றுலைக்குத் தீமூட்டியபடி அடுப்படியில் அமர்ந்திருந்த பஞ்சவர்ணம் ஏதோ ஆழமான எண்ணத்தில் மூழ்கியிருந்தாள். பருவவயதுக்கே உரிய ஆசைகள் மனதில் குடிகொண்டு கடந்த சிலநாட்களாக அவளை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தன. மாரியம்மா அடுக்களைக்குள் வந்தபோது, நெருப்பு அடுப்புக்கு வெளியே பரவி எரிந்து கொண்டிருந்தது. மகள் ஏதோ கற்பனையில் லயித்திருந்த லட்சணத்தையும் அடுப்பு எரியும் கோலத்தையும் பார்த்த மாரியம்மா, “என்னடி யோசனை?... அடுப்புக்கு வெளியில நெருப்பு விளாசி எரியுறது கூடத் தெரியாமல்...” என்று கேட்டதும்தான் சுயநினைவுக்கு வந்தாள் பஞ்சவர்ணம். விறகுகளை அடுப்புள் தள்ளியபடி, தான் இத்தனை நேரம் தோட்ட சுப்பவைசர் லசிந்தவின் நினைவில் மூழ்கியிருந்ததை எண்ணித் தனக்குள் வெட்கப்பட்டாள்.

மலைச்சாரலின் தேயிலைச் செடிகளைத் தழுவிவரும் காற்றின் கூதலுக்கு அடுப்படி வெக்கை

இதமாக இருந்ததாக அம்மாவிடம் சொல்லியபடி எழுந்து அரிசியை உலையிலிட்டாள்.

மாரியம்மாவும் மகளது பருவத்தைத் தாண்டி வந்தவள்தான். மேலும் மலையில் நடப்பதை அவளது கழுகுக் கண்கள் நோட்டமிடாமலில்லை.

"யாரையடி நினைச்சுக்கிட்டிருந்தே?"

அம்மா ஒருநாளும் இப்படிக் கேட்டதில்லை. காலையில் மலையில் கொழுந்தெடுத்துக் கொண்டிருந்தபோது சுப்பவைசர் லசிந்த அவளருகே வந்து நின்று பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்ததை அவள் பார்த்திருக்க வேண்டும் என எண்ணிக்கொண்ட பஞ்சவர்ணம் "ஒன்றுமில்லையம்மா" என்று பாசாங்கு செய்தாள்.

மாரியம்மாவுக்குச் சினம் ஒருபுறம், சிரிப்பு மறுபுறம். பஞ்சவர்ணம் இருந்த நிலையைப் பார்த்தால் யாருமே அப்படிக் கேட்கத்தான் செய்வார்கள். அவள் இந்த உலகிலேயே இருக்கவில்லையே. பெண் வளர்ந்து பருவமடைந்துவிட்டால், மடியிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போன்ற நிலைதான் தாய்மாருக்கு. அதிலும் இந்தத் தோட்டப்புறத்தில் எத்தனையோ கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். அனைத்திலுமிருந்து காத்து ஒருத்தனின் கையில் பிடித்துக் கொடுக்கும் வரை கண்ணும் கருத்துமாய் தான் இருக்க வேண்டும்.

மாரியம்மாவின் கணவன் சிவலிங்கம் நல்ல உழைப்பாளி. மலையில் எந்த வேலையானாலும்

அத்துப்படி. கவ்வாத்து வெட்டல், கான்வெட்டுதல், உரமிடுதல், பதியமிடல், லொறிகளில் சுமையேற்றுதல் என எல்லா வேலையும் செய்வான். ஆனாலும் உழைப்பதை குடியில் விரயமாக்கி விடுவான். இதனால், வீட்டில் எப்பொழுதும் கஷ்டமான சீவியம்தான்.

சிவலிங்கத்திற்கு வீட்டுள் வளர்ந்த குமர் இருப்பது பற்றியோ நேரகாலத்திற்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பது பற்றியோ துளியும் அக்கறை கிடையாது. ஆனால், மாரியம்மாவுக்கு எப்பொழுதும் மகளின் நினைப்புத்தான். மலையில் மேற்பார்வையாளராக நியமனம் பெற்று வந்திருக்கும் மலையடிவார கிராமத்தைச் சேர்ந்த இளைஞனான லசிந்தாவுக்குப் பஞ்சவர்ணத்தின் மேல் ஒரு கண் என்பதை மாரியம்மா அவதானித்திருந்தாள். அவளால் அசண்டையாக இருக்க முடியவில்லை.

"என்னடி சுப்பவைசர் ஐயாகிட்ட என்ன பேச்சும் சிரிப்பும்?"

பஞ்சவர்ணம் தாயின் கேள்வியில் விறைத்துப் போனாள். அவளால் பதில் சொல்ல முடியவில்லை. நேர்ப்பார்வையைத் தவிர்த்தபடி மௌனம் சாதித்தாள்.

"என்ன நினைச்சுக்கிட்டிருக்கே நீ?... அவங்க யாரு? நாம யாரு? விளையாட்டு வினையாய்த்தான் முடியுமடி..."

பஞ்சவர்ணம் அம்மாவை நிமிர்ந்து பார்த்தாள். "இப்ப ஏன் விகல்பமாகப் பார்க்கிறே?... வேலை செய்யுறபோது வந்து கதைச்சா நான் என்ன செய்யமுடியும்?"

அவளது பதில் மாரியம்மாவுக்குத் திருப்தி தரவில்லை. மகளை ஏற இறங்கக் கூர்ந்து கவனித்தாள். குளு குளு என்று மதாளிப்பான உடல்வாகு. எங்கிருந்துதான் இந்த மார்புக்கும் பிருஷ்டத்திற்கும் இத்தனை அழகு வந்ததோ? சில வருடங்களுக்கு முன் எலும்பும் தோலுமாய் பரட்டையாய் இருந்தவள் இப்போது பருவ எழிலில் பார்ப்பவர் பூரிக்கும்படியாக இருக்கிறாள். கறுத்த அடர்ந்த நீண்ட தலைமுடி வேறு.

மாரியம்மா பஞ்சவர்ணத்தின் பருவத்தில் இருந்த காலத்திலும் இந்தப் பெருந்தோட்ட மலையில் கங்காணிகளும், உத்தியோகத்தர்களும் எத்தனை பெண்களை ஏமாற்றியிருக்கிறார்கள். அவளும் மலையில் பிறந்து வளர்ந்த ஒரு தொழிலாளிப் பெண்தானே? காலம்காலமாகத் தொடரும் வஞ்சனைகளும் அதற்குத் துணைபோகும் சில தொழிலாளர்களும் இத்தனைக்கும் மத்தியில் தற்காத்தல் என்பது எவ்வளவு சிரமம் என்பது அவளுக்குத் தெரியும். அதிலும் தோட்டங்களை அரசாங்கம் கையேற்ற பின்னர் மலையடிவாரக் கிராமத்து சிங்கள இளைஞர்களுக்கே உத்தியோக வேலைகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் தொழிலாளரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. சில இளம்பெண்களைத் தம் வலைக்குள் சிக்கவைத்து ஆசைகாட்டி மோசம் செய்த சம்பவங்களை அவள் அறிவாள்.

பஞ்சவர்ணம் நல்ல பெண்தான். ஆனால், பருவம் பொல்லாதது. லசிந்த பழக நல்ல பையனாகத்தான் தெரிகிறான். இன்று இனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடு ஒருபுறம், பணம், பதவி என்பவற்றில் அவர்கள் உயர்வாக இருப்பது மறுபுறம் என இரு சாராரிடையிலான

திருமணம் என்பது அசாத்தியமாயே இருக்கிறது. இவை அனைத்தையும் உணர்ந்துகொண்ட மாரியம்மா சொன்னாள்.

"மவ... இப்ப நீ சின்னப் பொண்ணில்லே... வளர்ந்து பெரியவளாகியிட்டே. உன்னுடைய வாழ்வு பரந்துகிடக்கிற இந்த மலையிலே தொழில் புரியுற நம்ம இன பையனோட தான் அமையணும். அதுவரையில ஒழுங்கா இருக்கணும்... ஒழுக்கம் இருக்கே அதுதான் மவ பொண்ணுக்குப் பெரிய சொத்து.... என்னிக்குமே நாம நம்மளைக் காப்பாத்திக் கொள்ளணும். தோட்டத்தில ஓர் இளம் பெண் கொஞ்சம் அழகாயிருந்திட்டா இங்கே வேலை பார்க்கிற உத்தியோகத்தர்மார் கெடுத்துப்புட்டுப் போயிடுவாங்க..."

இதைச் சொல்லிவிட்டு மாரியம்மா மகளை எச்சரித்தாள். "இதோ பாரு... நீ வயசுப் பொண்ணு. சுப்பவைசர்மார், கண்டக்டர், கிளாக்கர்ன்னு பெரிய மனுச ரூபத்தில திரியுறவங்க எல்லாம் நல்ல மனிசர் என்னில்ல... வெளுத்ததெல்லாம் பால்ன்னு நம்புற வயது உனக்கு. தலைகால் தெரியாம திரியுற இளந்தாரிங்க இளவட்டப் பெண்களுக்கு முன்னும் பின்னுமா அலைஞ்சு கண்போடுவாங்க. காதல் என்கிற வேஷம் போட்டு கபடமாய் ஏமாத்தியிடுவாங்க... உன்னைப் பற்றியும் லசிந்த ஐயாவைப் பற்றியும் ஏற்கனவே தோட்டத்தில கிசுகிசுக்கிறாங்க... இதனாலே உனக்குக் கெட்ட பெயர் வந்திடுச்சுன்னா யாருமே அப்புறம் உன்னைக் கட்டிக்க மாட்டாங்க. நம்ம சொந்தத்திலேயே மாப்பிளை இருக்கு. எதிர்த்த லயத்து சின்னராசு நல்ல பையன்... உன்மேல பிரியமிருக்கிறதா வேற தெரியுது..."

அம்மா சொல்வதில் உள்ள நியாயம் பஞ்சவர்ணத்திற்குப் புரியாமலில்லை. ஏனோ தெரியவில்லை. சின்னராசு மேல் அவளுக்கு நாட்டம் ஒரு போதும் வரவில்லை. லசிந்தவுடன் கூட ஆரம்பத்தில் அவளுக்குப் பிடித்தம் ஏற்படவில்லை. ஆனால், ஒவ்வொரு நாளும் வேலைத்தலத்தில் அவன் அவள் மீது காட்டுகின்ற அக்கறை அவள் மனதை ஈடாட வைக்கவே செய்தது. இரவு உணவை முடித்துக் கொண்டு படுத்த பின்னும் பஞ்சவர்ணத்திற்குத் தூக்கம் வரவில்லை. பகலில் மலையில் கொழுந்து எடுத்தபோது லசிந்த அவளைக் கூப்பிட்டு அருகே நின்று கதைத்த ஞாபகமும் இரவு அம்மா பேசியதும் மீண்டும் மீண்டும் மனத்திரையில் ஊர்வலம் வந்தது.

லசிந்த லேசுப்பட்டவனில்லைதான் என்று நினைத்துக் கொண்டிருந்தாள் பஞ்சவர்ணம். எனினும், அவனுடன் உரையாடிய நினைவுகள் மனதில் அவளையும் மீறிக் குதூகலத்தை ஏற்படுத்துவதை உணர்ந்தாள்.

“பஞ்சவர்ணம்... இங்கே வா...” என்று அதிகாரத் தொனியில்தான் காலையில் கூப்பிட்டான் லசிந்த. “கொழுந்தெல்லாம் சுத்தமாக இருக்கா? இல்லே முத்தல் இலைகளையும் சேர்க்கிறியா? எங்கே பார்ப்போம்” என்றபடி அவளது முதுகிலிருந்த உரப்பையில் கைவிட்டு சிறிதளவு கொழுந்தை அள்ளிப்பார்த்தான். பஞ்சவர்ணத்திற்கு ஆத்திரம் வந்தது. ‘பெரிய இவரு’ என்று மனதில் திட்டியபடி முகம் கறுக்க நின்றாள்.

“ம்... சுத்தமாய் தானிருக்கு...” என்று சிரித்தபடி கூறியபோது அவளுக்குப் பெருமிதமாக இருந்தது.

மீண்டும் கொழுந்தெடுக்கப் போக வெளிக்கிட்டவளை, "நில்லு... பஞ்சவர்ணம்" என்று கொக்கிப் போட்டிழுத்தான் லசிந்த. "புதுசா இருபது வீடு கட்டி முடிச்சிருக்கு... லயத்திலே இருக்கிற இருபது குடும்பங்களுக்குக் கொடுக்கப் போறாங்க..." பாதி சிங்களமும் பாதி தமிழும் கலந்து லசிந்த கூறியபோதும் பஞ்சவர்ணத்திற்குப் புரிந்தது.

பஞ்சவர்ணம் ஐந்தாம் ஆண்டுவரை தோட்டப் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு பின்னர் பதினோராம் ஆண்டுவரை நகரப்பள்ளிக்கூடத்தில் படித்தவள். எனினும், வீட்டுச் சூழ்நிலையால் தொடர்ந்து படிக்கமுடியாமல் பரீட்சையும் எழுதாமல் பரம்பரைப் பரம்பரையாகச் செய்யும் கூலித் தொழிலுக்கே வரவேண்டியதாயிற்று. சிவலிங்கம் குடிக்காமலிருந்தால் அவளை மேலும் படிக்கவைத்திருக்கலாம்... அவள் படித்த பாடசாலையில் தமிழ், சிங்களம் என இரு இன மாணவர்களும் படித்ததால் அவளுக்குச் சிங்களம் ஓரளவு தெரியும்.

பஞ்சவர்ணம் மௌனமாக இருக்கவே, "உங்களுக்கு வீடு வேணாமா?" என்று கேட்டான். அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறே?"

"ஐயா வீடு கிடைக்கணுமென்னா அதிர்ஷ்டம் இருக்கணுமே. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பழைய குச்சு லயன்களிலை சிரமத்தோட வாழுறாங்க... யாருக்குக் கொடுப்பனவோ?"

"உனக்கும் அதிர்ஷ்டம் கிட்டும்..."

பஞ்சவர்ணத்திற்கு வாய் அடைத்துப் போய் விட்டது. சிறிய வீடுகளானாலும் அழகான தனித்தனியான

வீடுகள். இரண்டு அறை, குசினி... அவன் சொல்வது போல அதிர்ஷ்டம் கிட்டுமா?''

"சின்னதுரை நம்ம கூட்டாளி... நான் சொன்னால் கட்டாயம் கிடைக்கும்...'' அவள் ஆச்சரியத்தோடு அவனை நோக்கினாள்.. அவனது பார்வையில் குறும்பு தெரிந்தது.

"எனக்காக நீங்க ஏன் தொரைகிட்ட கேட்கணும்?''

"நான் கேட்காமல் வேறு யார் கேட்பது?'' குபீரென்று சிரித்தான் லசிந்த. ஏனோ அவளுக்கும் சிரிப்பு வந்தது. இருவரும் மனம்விட்டு வாய்விட்டுச் சிரித்தார்கள். ஏன் சிரிக்கிறோமென்று தெரியாமல் சிரித்தார்கள்.

'அம்மா சொல்வது போல லசிந்தவும் ஏமாற்றுக்காரனாக இருப்பானா?... இல்லாவிட்டால் அவளை உண்மையாக விரும்புகிறானா? இரவு உறங்க நீண்டநேரமாயிற்று. காலையில் அம்மா தட்டியெழுப்பியதும் தான் அரக்கப் பரக்க கண்விழித்தாள்.

இரவு அவள் உறங்காமலிருந்தபோது அம்மாவும் அப்பாவும் உரையாடியது அவள் நினைவுக்கு வந்தது. சாக்குத் திரையால் பிரிக்கப்பட்டிருந்த பக்கத்து அறையில் படுத்திருந்தபடி தான் அவர்கள் உரையாடினார்கள். இல்லை அவர்கள் சண்டை பிடித்துக் கொண்டிருந்தனர். அவள் காது கொடுத்துக்கேட்டாள். தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த வீடு பற்றியே அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள்.

"கிளாக்கர் ஐயாவுடைய கையிலதான் எல்லாம் தங்கியிருக்கு... அவர் பட்டியல் போட்டா துரை

அதைமாத்த மாட்டாரு. நம்ம தலைவர் எங்கிட்ட இரகசியமாகச் சொன்னாரு... ஒரு ஐஞ்சாயிரம் ரூபா கிளாக்கர் கிட்ட தள்ளினா நமக்கும் வீடு கிடைக்கும்... லட்சரூபா பெறுமதியான வீடில்லையா?... நாமளும் மழை, வெயில், குளிர் என்னு இந்த உடைஞ்ச வீட்டில இருந்து அல்லல்படுகிறோம்...'' சிவலிங்கம் சொன்னதும் மாரியம்மா சீறிப்பாய்ந்தாள்.

''வீடு வேணாம்னு யார் சொன்னா?... இப்போ காசு பணத்துக்கு எங்க போறது? உழைக்கிற பணத்தில மீதப்படுத்தி வைச்சிருந்தாலும் இப்போ பயன்பட்டிருக்கும். நீதான குடிச்சு அழிச்சுடுவியே... இப்போ காசுக்கு என்ன செய்யுறது?''

சிவலிங்கம் கோபத்துடன் சொன்னான்: ''அதெல்லாம் எனக்குத் தெரியும்... நீ ஒண்ணும் சொல்லவேணாம்...''

''என்ன செய்வியாம்?''

''மக கழுத்தில இருக்கிற சங்கிலியை வித்து கொடுத்திடலாம்... அப்புறமா கையில காசு கிடைக்கிறப்போ செஞ்சுப்போட்டுக்கலாம்...''

''அவளுக்கு இருக்கிறதே இந்த ஒரு சங்கிலியும் தோடும்தான். கையில வளையல்கூட இல்ல... வித்துச்சுட நான் விடமாட்டன். உனக்கு வயசுக்கு வந்த பொண்ணு வீட்டில இருக்கிற நினைப்புகூட இல்ல...'' மாரியம்மா கோபத்துடன் சொன்னாள்.

சிவலிங்கம் அவளைச் சமாதானப்படுத்துவது போல சொன்னான்: ''இதைக் கேளு புள்ள... வீடு

கிடைச்சுதின்னா எந்தப் பயலும் பஞ்சவர்ணத்தைக் கட்டிக்கவருவான்... அவ வடிவுக்கு நான் நீன்னு போட்டி போடுவாங்க..."

மாரியம்மா யோசித்தாள். கணவன் சொல்வதிலும் நியாயம் இருப்பதுபோல் பட்டது.

"நம்பிக்கையாக வீடு தருவாங்களா? அப்புறமாய் ஏமாத்திப்புட்டா...?"

"ஏமாத்தமாட்டாங்க... அப்படி செஞ்சா தொரைகிட்ட முறைப்பாடு செய்யலாம்..." சிவலிங்கத்தின் பதிலில் மாரியம்மா சமாதானமானாள்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டு படுத்திருந்த பஞ்சவர்ணம் பலவாறு யோசித்தாள்.

'வீடு பெறுவதற்கு ஏன் லஞ்சம் கொடுக்கணும்? லசிந்த கிட்ட சொன்னா கிடைக்குமே...' பலவாறான எண்ணங்களுடன் அப்படியே உறங்கிப் போனவள் இப்போதுதான் எழுந்திருக்கிறாள். இன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் மலையில் வேலையில்லை. அவள் சமையல்கட்டுக்கு வந்ததும் அம்மா அவளது கழுத்தை நோக்கவே அவளுக்கு விஷயம் புரிந்துவிட்டது. 'சங்கிலியைத் தான் கேட்கப் போறா.'

அவள் நினைத்தது சரியாகவே இருந்தது.

"மவ உன் சங்கிலியைத் தாறியா? இதை வித்து கிளாக்களருக்கு ஐஞ்சாயிரம் கொடுத்தா வீடு கிடைக்குமாம்."

பஞ்சவர்ணம் கோபத்தோடு அம்மாவை முறைத்தாள். "நான் மாட்டன்... இருக்கிறதே ஒரு சங்கிலி... அதையும் வித்துப்புட்டா நான் வெறுங்கழுத்தோட திரியுறதா? நான் மாட்டன்..." பஞ்சவர்ணம் செல்லமாகச் சிணுங்கினாள்.

"சும்மா இரடி... இன்னும் சின்னப்புள்ள எனன்னு நினைப்பு. அவசர தேவைக்கு உதவாத நகை எதுக்கடி?"

பஞ்சவர்ணம் சிறிது தயங்கி நின்றாள்.

"அம்மா நான் ஒண்ணு சொல்வேன்... கோவிச்சுக்காதே... நமக்கு வீடு கட்டாயம் கிடைக்கும்.... பணம் கொடுக்கத் தேவையில்ல..." தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

"அதெப்பிடியடி?... திடமா சொல்லுறே..."

"நமக்கு ஒரு வீடு ஒதுக்கிறதுக்கு லசிந்த ஐயா சின்னத்தொரைகிட்ட சொல்லியிருக்காரு..."

மாரியம்மா மகளை ஆழமாக நோக்கினாள். அவளது ஊடுருவலான பார்வையின் அர்த்தம் புரிவது போல பஞ்சவர்ணம் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"சுப்பவைசர் ஐயாக்கு நம்மகிட்ட ஏன் இவ்வளவு கரிசனை?... பஞ்சவர்ணம்... உண்மையைச் சொல்லு... ஏதாவது வித்தியாசமாக...?"

"இல்லேம்மா... ஒரு தப்பும் நடக்கல... எங்கிட்ட விருப்பமா இருக்காரு... அதால..."

"அதால...?" மாரியம்மா மகளைக் கடுப்புடன் நோக்கினாள். பஞ்சவர்ணத்திற்கு உடல் சிலிர்த்தது. தான் தவறு எதுவும் இழைத்து விடவில்லை என்று நிரூபித்து விடத் துடித்தாள். இத்தனை தூரம் ஆழமாக அவள் ஒன்றும் யோசித்துப் பார்க்கவில்லை. லசிந்த உதவி செய்வதாகக் கூறினான். அவள் ஓம் என்று கூடச் சொல்லவில்லை. ஒன்று மட்டும் நிச்சயம். லசிந்த கெட்டவனாகத் தெரியவில்லை. இருந்தாலும் இளவட்டமல்லவா? நெருப்பும் பஞ்சும் பற்றிக் கொள்ளச் சொல்லவா வேண்டும்?

மாரியம்மா மன அமைதி இழந்தாள். வீடு கூட வேண்டாம் என்று அவளுக்குத் தோன்றியது. பலன் இருந்தால் கிடைக்கட்டும். நல்லவேளை சிவலிங்கத்திற்கு இந்த விசயம் தெரியாது... தெரிந்தால் லசிந்தவிடம் கேட்கும்படி வற்புறுத்துவான்.

ஆனால், இவர்கள் உரையாடிக் கொண்டிருந்ததை மறைவிலிருந்து சிவலிங்கம் கேட்டுவிட்டான். உள்ளே வந்தவன், "நல்ல விசயம்தான்... கேட்டுட வேண்டியதுதானே?" என்றான்.

மாரியம்மாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. சகல பிரச்சினைகளையும் வாய்விட்டு சொல்லிவிட முடியுமா? அவள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவஸ்தைப்பட்டாள். துக்கமும் கோபமும் நெஞ்சை அடைக்க அவனை நோக்கிக் கத்தினாள்.

"பைத்தியம் பிடிச்சாப் போல என்ன சொல்லுறே நீ... அவங்க தூண்டில் போடுறாங்க... அதில நம்ம மகளைச்

சிக்கவைக்கப் பாக்கிறாங்க. வீடு பெரிசா... மகளுடைய மானம் பெரிசா?''

''இப்போ என்ன நடந்திச்சென்னு இவ்வளவு கோபப்படுறே...'' சிவலிங்கம் மனைவியை நோக்கினான். அப்பா சொல்வது சரியென்றே பஞ்சவர்ணத்திற்கும் பட்டது.

''எம் மவ மானத்தை... அவ வாழ்க்கையை நான் காப்பாத்தணும்... வந்தான் வரத்தானை நம்பி உதவி பெற்றா அப்புறம் படுகுழியில விழ வேண்டியதுதான்.''

''நம்ம பொண்ணு ஒழுங்கானவ... அவள் தவறிழைக்கக்கூடியவள் இல்ல...'' ஆணித்தரமாகக் கூறிய கணவனை இடைமறித்த மாரியாயி கேட்டாள்:

''பெண் கெட்டுப் போக எம்புட்டு நேரம் வேணுமாம்?''

சிவலிங்கம் பதில் சொல்லவில்லை. வாயடைத்துப் போய் நின்றான். பஞ்சவர்ணத்திற்கு அம்மா மீது கோபம் கோபமாக வந்தது.

அம்மா மீது கோபமேற்பட்டது எவ்வளவு தப்பு என்று அவளுக்கு அப்போது புரியவில்லை.

குளிப்பதற்காக பீலியடிக்குச் சென்று கொண்டிருந்த போது லசிந்த எதிர்ப்பட்டான். அவளது கால்கள் பின்னின. மனதில் இனம்புரியாத உணர்வு.

''பஞ்சவர்ணம்... உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?'' அவளது முகத்தையும் மார்பையும் குறுகுறு என்று நோக்கியபடி கேட்டான். அவள் பதில் சொல்லவில்லை.

முகம் குப்பென்று சிவந்து இதழோரம் புன்னகை மலர்ந்தது. "பஞ்சவர்ணம்... ஏன் பேசாமலிருக்கிறே? என்மேல கோபமா?"

இல்லை என்பது போல அவசரமாகத் தலையை இருபுறமும் ஆட்டினாள்.

"நாளைக்கு உனக்கு சின்னத்துரை பங்களாவிலதான் வேல... பங்களாவைக் கூட்டிக் கழுவி துப்பரவாக்கணும். மீனம்மாவும் வருவா..." லசிந்த விடைபெற்றான்.

இரவு முழுவதும் குழப்பம். 'போவதா? விடுவதா? போனால் லசிந்தவுடன் தனியே கதைக்கலாம். மனம்விட்டுப் பேசமுடியும்... இறுதியில் பருவம் வென்றது.

மறுநாள் பங்களா வேலைக்குச் சென்றபோது, மீனம்மா அங்கு வரவில்லை என்பது தெரியவே மனது கலங்கியது. எனினும், அவள் வேலையை ஆரம்பித்தபோது லசிந்த வந்து தடுத்தான்.

"பஞ்சவர்ணம்... துரைகிட்ட நல்லமாதிரி நடந்துக்க... அப்புறம் நானும்... வீடு கட்டாயம் கிடைக்கும்" லசிந்த வார்த்தைகளை முடிக்கவில்லை. பஞ்சவர்ணம் காறி உமிழ்ந்துவிட்டு மலையிறக்கத்தில் விரைந்து இறங்கினாள். வழியில் கட்டப்பட்டிருந்த புதிய வீடுகள் அவளைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. மூச்சிரைக்க இறங்கிவந்தவளின் ஓட்டம் லயத்தடிக்கு வந்ததும்தான் நின்றது. அம்மாவை அன்போடு நினைத்துக் கொண்டாள்.




கொடூர யுத்த அனர்த்தத்தினால் பிரதான பாதைகள் எல்லாம் மூடப்பட்ட பின் கடிதப் போக்குவரத்து கூட ஆமை வேகமடைந்து விட்டமையால், எப்போதாவது தான் கடிதம் வரும். அப்படி கடிதம் வருகின்ற நாட்களில் உள்ளம் குதூகலிக்கும். அம்மா ஊர் புதினங்களை எல்லாம் எழுதி, பேரப்பிள்ளையினது சுகங்களையும் கேட்டு எழுதியிருப்பார். பேரனோடு கொஞ்சி விளையாட வேண்டும் போலிருப்பதாகவும், தாம் இருவரும் வயோதிப காலத்தில் தனிமையை உணர்வதாகவும் எழுதியதைப் படிக்கும் போது காயத்திரியின் மனதும் தவிக்கும்.

அப்பா பிடிவாதமாக தான் பிறந்து வளர்ந்த யாழ்மண்ணை விட்டு வன்னிக்கு வர மறுத்ததால் தான் எல்லாப் பிரச்சினைகளும். இல்லாது விட்டால் எல்லோரும் ஓரிடமாக மகிழ்வோடு இருந்திருக்கலாம்... ம்... கைகூடவில்லை.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் இன்று கடிதம் வந்திருந்தது. குதூகலத்துடன் கடிதத்தை உடைக்கும் போது மனம் இன்னொருபுறம் திக்...திக்... எண்டு அடித்துக் கொண்டது. ஊரில் யுத்த அனர்த்தங்களில் யார் யார் இறந்திருப்பார்களோ எண்டு மனது குடைகிறது. இன்று கடிதத்தை அப்பா தான் எழுதியிருந்தார்.

அன்பு மகனுக்கும், மருமகளுக்கும் நலம் அறிய ஆவல். அம்மாவுக்கு சுகமில்லை. மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்திருக்கிறோம். நெருப்புக் காய்ச்சலாம். காய்ச்சல் விடுகிதில்லை. டாக்குத்தர் திருப்தியாகச் சொல்லவில்லை. அம்மா உங்கள் எல்லோரையும் பார்க்க ஆசைப்படுறா... ஆறு பிள்ளையளைப் பெத்தும் அருகில் ஒருத்தருமில்லை. உன்னைத் தவிர எல்லோரும் வெளிநாடுகளிலை... எண்டாலும் போனிலை கதைக்க முடியுது. பக்கத்திலை இருக்கிற உனக்கு போன் வசதியுமில்லை... நீங்கள் எல்லோரும் வந்தால் அம்மாவின் மனசு ஆறுதலடையும். அருகிலை ஒரு பிள்ளையுமில்லையெண்டு அழுகிறா அம்மா.... மருமகள் நிண்டால் தன்னை வடிவாகப் பார்த்தெடுப்பா எண்டு அழுகிறா..."

எனக்கு நெஞ்சை அடைக்கிறது. அம்மாவை நினைக்கும் போதெல்லாம் கடவுள் மாதிரி உணருவேன். தாய்க்குத் தலைமகன் எண்டு சொல்லுவினம். நான் தலைப்பிள்ளை தான் ஆனா, அம்மா எல்லாப் பிள்ளைகளையும் ஒரே மாதிரித்தான் வளர்த்தா. ஆம்பிள்ளைப் பிள்ளை, பொம்பிளைப் பிள்ளை எண்டு பேதமில்லாமல் எல்லோரையும் ஒரே மாதிரித்தான் நேசிக்கிறார். அம்மா எண்டா சின்ன வயதிலிருந்தே எனக்கு கொள்ளை ஆசை. நிலாக் காட்டிச் சோறு தீத்தின அம்மா

இப்ப சோறில்லாமல் படுக்கையில கிடக்கிறா. பக்கத்தில இருந்து தண்ணி பருக்கக் கூட அருகில் ஒரு பிள்ளையும் இல்லை. இவள் காயத்திரிக்கு மாமி மேல சரியான பாசம். அம்மாவும் அப்படித்தான். மருமகள் எண்டு பாராமல் மகள் மாதிரித்தான் காயத்திரியிலை அன்பு செலுத்துவாள். வேலைப்பளுவின் மத்தியிலும் அம்மாவின் நினைவுகள்...

அம்மா நான் எவ்வளவு குழப்படி செய்திருப்பன். கோயிலுக்குப் போய்வரேக்கை தும்புமுட்டாஸ் வாங்கித் தரேல்லை எண்டு அடம்பிடித்து அழுது உங்கட சீல உரிஞ்சு விழுகிறளவுக்குக் குழப்படி செய்திருப்பன். நான் சின்ன வயசில சரியான விசமம் எண்டு எல்லாரும் சொல்லுவினம். பால் குடிக்கேக்கை எத்தனையோ நாள் கடிச்சு புண்ணாக்கியிருக்கிறேன் எண்டு ஆச்சி சொல்லிச் சிரிக்கிறவ. அம்மா உங்கட கை விரலால என்ர விரலைப் பிடிச்சு அ, ஆ எழுதப் பழகினது இப்பவும் நினைவிருக்கு. பிறகு சிலேற்றில் எழுதிப் பழகிறபோது துப்பல் போட்டு அழிக்கக் கூடாது எண்டு நீங்கள் சொல்லுவியள். நான் கோபத்திலை உங்களுக்கே துப்பினது ஞாபகமிருக்கு. என்னுடைய குழப்படியளுக்கு அப்பா அடிப்பார். எத்தனை தடவை அப்பாட்டயிருந்து அடி விழாமல் காப்பாற்றியிருக்கிறியள். அம்மா.... வயிற்றோட்டத்திலை நான் கிடக்கேக்கை நீங்கள் அழுத அழுகையை நினைச்சால் இப்பவும் எனக்கு அழுகை வரும். உச்சிலம்மனுக்கு அடியளக்கிறதெண்டும், காளிக்கு வடை மாலை சாத்துறனெண்டும், முதலைக்குழி முருகனுக்குக் காவுதண்டு செய்துதாறதெண்டும் நீங்க வைச்ச நேத்திக் கடன்கள் எல்லாம்...

ம்... அம்மா நீங்க ஒரு தெய்வம்! எனக்கு கடவுளிலை எல்லாம் நம்பிக்கை இல்லை. ஆனா எனக்குத்

தெரிந்த ஒரு கடவுள், ஒரே கடவுள் நீங்கதானம்மா... உங்களுக்காக நீங்க கும்பிடுற தெய்வங்களுக்கெல்லாம் நேத்தி வைக்கிறனம்மா. வறுமையோடும், நோயோடும் போராடி எங்களை வளர்த்து உருவாக்க அப்பாவும் நீங்களும் பட்ட கஷ்டங்களும், தியாகங்களும் அளப்பரியது. அம்மா... இப்ப உங்கட பிள்ளையள் டொக்ரர், இஞ்சினியர் என்று பதவியாலையும், பணத்தாலையும் உயர்ந்திட்டம். ஆனால் என்னுடைய கவலையெல்லாம் கடைசிக் காலத்திலை பக்கத்திலை இருந்து உங்களைப் பார்க்க முடியவில்லையே எண்டதுதான். குத்தி இடிச்சு சட்டை தைச்ச உங்களையும், தலைச்சுமையாக பொயிலைக் கட்டுச் சுமந்து ஈரொட்டி வியாபாரம் செய்த அப்பாவையும் எப்படி மறக்க முடியுமம்மா? எங்களோடை வன்னிக்கு வரவும் மாட்டனெண்டிட்டியள். காயத்திரிக்கு உங்களை வைச்சுப் பார்க்க முடியவில்லையே எண்ட கவலைதான்.

அம்மாவின் நினைவுகள் மனக் கண்ணில் அலைமோதின. பொழுது சாயவும் நோயாளர்களைப் பார்த்து முடிக்கவும் சரியாக இருந்தது. வீட்டிற்குப் புறப்பட இருந்த வேளையில், வள்ளியம்மைப் பாட்டிக்குக் கடுமை எனத் தகவல் வந்தது. முதியோர் இல்லத்திற்கு விரைந்தேன். இந்த முதியோர் இல்லம்தான் வன்னியில் இருக்கும் முதலாவது முதியோரில்லம். காலத்தின் தேவை கருதி யோக சுவாமிகள் திருவடி நிலையத்தில், தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினரின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இல்லம். முதியோர் காவலர் கந்தசாமி ஐயாவின் அரும்பணியில், அனாதரவாக அல்லலுற்ற முதியவர்கள் பலர் இப்போது இங்கு

ஆறுதலடைகிறார்கள். கந்தசாமி ஐயாவுடன் சேர்ந்தமையினால் எனக்கும் இவ்வில்லத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. மனிதநேயம் மிக்க இப்பணியில் ஓர் ஆத்ம திருப்தி கிடைத்து வருகிறது. இங்குள்ள முதியவர்களுக்குச் சிகிச்சையளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இல்ல செயலாளரும் நான்தான்.

முதியவர்கள் அடிக்கடி நோய்வாய்ப் படுவார்கள். எனது வேலைப்பளுவின் மத்தியிலும் அவர்களுக்குச் சிகிச்சையளித்து ஆறுதல் வார்த்தைகள் கூறுவேன். காயத்திரிக்கு முதியோரைப் பேணலில் ஆர்வம் ஏற்பட்டிருந்தது. வள்ளியம்மைப் பாட்டியைப் பார்க்க விரைந்து வந்த போது அவரது நிலை கவலைக்கிடமாக இருந்தது. கடைசி நேர முயற்சிகளை மேற்கொண்டேன். பாட்டிக்கு நாலு பிள்ளைகள் வெளிநாட்டிலென்றும், எல்லோரும் அவரை அநாதரவாக விட்டு விட்டார்கள் என்பதையும் அறிய வந்த போது நெஞ்சு பொறுக்காமல் வெதும்பினேன். மகனே... மகனே... எண்டு எனது கைகளை இறுகப் பற்றியபடி பாட்டியின் ஆவி பிரிந்தது.

இம் முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவே முதலாவது மரணம் என்பதால் எல்லோரும் கலங்கிப் போனோம். பராமரிப்பாளர் கீதா விம்மி விம்மி அழவே எனக்கும் அழுகை பீரிட்டுக் கொணடு வந்தது. ''அம்மா...'' என பாட்டியின் கால்களைப் பற்றிப் பிடித்தபடி கதறினேன். பாட்டியின் உடலை நல்லடக்கம் செய்யும் நிகழ்வில், வேலைப்பளுவின் மத்தியிலும் கலந்து கொண்டேன். முதியோர் இல்ல ஐயா கொள்ளி வைக்கும்படி என்னிடம் வேண்டினார்.

"டொக்ரர்... நீங்கள் பாட்டிக்கு மகன் மாதிரி... கடைசி நேரத்தில உங்கட கையைப் பிடிச்சபடிதான் போனவ... ஏதோ முற்பிறப்பு உறவு. நீங்களே கொள்ளி வையுங்கோ..." என்றார். ஐயாவின் வேண்டுதலை நிறைவேற்றினேன். மனதில் ஏதோ ஒருவித ஆறுதல் ஏற்பட்டது.

அப்பாவின் கடிதம் வந்தமையால் லீவு ஒழுங்கு செய்து கொண்டு ஊருக்குப் போய்வர எண்ணினேன். காயத்திரி உடன் வரப்போவதாகத் துடித்தாள். மிகுந்த சிரமத்தின் மத்தியில் பாஸ் எடுத்து லீவு ஒழுங்கு செய்து புறப்பட முயன்றபோது வள்ள ஓட்டம் தடைப்பட்டு போயிருந்தது. ஆறேழு நாட்களில் பின்னர்தான் மீண்டும் கிளாலிப் பிரயாணம் தொடங்கியது. நானும் காயத்திரியும் அம்மாவைக் கண்டு விட வேண்டும் என்ற ஆசையுடன் புறப்பட்டோம். கரையிலே பெருங்கூட்டம். இன்று படகுச் சேவை நடைபெறும் என கடற் போராளிகள் அறிவித்ததனால் சனங்களுக்கு மனதிலே நிம்மதி. மகிழ்வும், அவசரமுமாகக் கூடிநின்ற ஆயிரக்கணக்கான மக்களைப் பார்த்ததும், இன்று படகு ஏறுவது சந்தேகம்தான் என்றாள் மனைவி. படகு கிடைத்தாலும் அக்கரைக்குப் போய் சேர்ந்த பின்தான் நிச்சயம்.

கிளாலிக்கான படகுச்சேவை இரவில் மட்டும்தான் நடைபெறும். பகலில் கிளாலிக் கடலை கடப்பதென்றால் முடியாத காரியம். ஒரு புறம் பூநகரி முகாம், மறுபுறம் ஆணையிறவு முகாம். பகலில் கடக்க முயன்றால் கடற்படையினர் வந்து துவம்சம் செய்துவிடுவார்கள். இரவில்தான் படகுகளில் கடலேரி தாண்ட வேண்டும். இரவிலும் கூட கடற்படை வருவதுண்டு. எனினும்

கடற்போராளிகள் அவர்களை வரவிடாமல் அடித்து விரட்டிவிடுவார்கள்.

முதற் தடவையாகக் கடற்பிரயாணம் காயத்திரிக்கு கரைக்கு வந்ததும் கலங்கிய கண்களுடன் குடாக்கடலைப் பார்த்து பயந்தாள். “நேவி வருமா...?” எண்டு திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தாள். நான் ஆறுதல் சொல்லித் தைரியமூட்டினேன். நாம் கரையை அடைந்தபோது மைமல் பொழுதாகிவிட்டது. அந்திசாயும் பொன்மாலைப் பொழுதில் இருள் மென்மையாகப் படர ஆரம்பித்தது. ஆலங்கேணிக் கரையில் படகுகள் கடற்பயணம் செய்ய ஆயத்தமான நிலையில் நின்றன. “உலச்சிலம்மாளே... வெல்லன் பிள்ளையாரே... சன்னதியானே... வல்லிபுரக் கடவுளே...” என்று அடுக்கடுக்காகத் தெய்வங்களைக் குரல் விட்டு அழைக்கத் தொடங்கினாள் காயத்திரி. ஒருவாறு வள்ளத்தை அடைந்து, சிறிது தூரம் தள்ளிக் கொண்டு வந்து ஓடி ஏறிக் காயத்திரியின் அருகில் அமர்ந்து கொண்டேன். வள்ளம் சிறிது தூரம் கால்வாயில் ஓடி ஆழ்கடலை அடைந்து வேகமாக ஓடத் தொடங்கியது. இருபக்கமும் உப்பு நீர் அடித்து நனைத்தது. முதலில் குளிர்ந்தாலும் பின்னர் அதுவே பழக்கப்பட்டு விட்டது. பூநகரிப் பக்கத்திலிருந்து அடிக்கடி வெளிச்சம் அடித்துக் கொண்டு இருந்தது. கடற்போராளிகளின் அதிவேகப் படகுகள் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு அதிவேகமாகக் குருவி பறப்பது போல் பாதுகாப்பை உறுதி செய்து கொண்டிருந்தன.

காயத்திரி பயப்பட்டாள். “பயப்படாதயப்பா... அது பொடியளின்ர ஜெட்போர்ட்....” எண்டு

தைரியமூட்டினேன். வாளை மீனொன்று துள்ளி வந்து படகுக்குள் விழவே ''ஐயோ...'' எண்டு பதறினாள் காயத்திரி.

படகில் பதினைந்து பேர் இருந்தார்கள். சாமான்கள் வேறு. படகு வேகம் கொண்டு நீரைக் கிழித்துக் கொண்டு இருபுறமும் அலையடித்தபடி மிதந்து விரைந்தது. கயிற்றில் கட்டித் தொடுக்கப்பட்ட இழுவைப் படகொன்றும் எரிபொருளின்றித் தொடர்ந்தது. படகு சரையிலிருந்து வெகு தூரம் வரவே கரையில் தெரிந்த வெளிச்சங்கள் சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. ஆழ்கடலை அடைந்து படகு அலையில் துள்ளி விழுந்து ஓடியது. பின் நிலவு போலும் இன்னமும் சந்திரனைக் காணவில்லை. வானத்து நட்சத்திரங்கள் மட்டும் கண்சிமிட்டிக் கொண்டிருந்தன. அணியத்திலிருந்த ஓட்டியின் வழிகாட்டி திடீரென்று பெருங்குரலெடுத்தான். ''அண்ணை நேவிக்காரன் வாறான் போல கிடக்கு...'' ''காயத்ரி என்னைக் கட்டிக் கொண்டு தேவாரம் பாடத் தொடங்கி விட்டாள். பக்கத்திலிருந்த இன்னொருத்தி செபம் செய்ய ஆரம்பித்தாள். எனது இதயமும் பயத்தினால் வேகமாக அடித்தது. சிலர் அழத் தொடங்கினர். ஓரிருவர் அணியத்தின் கீழ் பாய்ந்து பதுங்கினர். ''உள்ளுக்கு இறங்குங்கோ அப்பா'' எண்டு கீழே இறங்கி விட்ட காயத்திரி என்னை இழுத்தாள். பார்வையைப் படரவிட்டேன். எமது படகும் சற்று வளைந்து திரும்பி, ஓடிய பாதையிலிருந்து வேறுபக்கமாக விலத்தி ஓட ஆரம்பித்தது.

தொடர் நெருப்புப் பொறிகள் வாணவேடிக்கை காட்டின. எதிர்திசையிலிருந்தும் விட்டு விட்டு நெருப்புக்

கோளங்கள் போல் சன்னங்கள் பறந்தன. ''கடற்போராளியளுக்கும் நேவிக்கும் கடும் சண்டை நடக்குது'' என்றான் அணியத்தில் நின்ற வழிகாட்டி. ''கடற்போராளியள் வந்திட்டா இனிப் பயமில்லை இதுங்கால வரவிடமாட்டாங்கள்'' என்றான் ஓட்டி. சண்டை தொடர்ந்து கொண்டிருக்க வள்ளங்கள் ஒரு பக்கமாகப் பயணித்த வண்ணமிருந்தன. ''கடற்போராளியள்தான் எங்கட கடவுள்'' என்றேன். காயத்திரி இன்னும் உச்சில் அம்மாளை விட்டபாடில்லை. தூக்க கலக்கத்துடன் கிளாலிக்கரையை நெருங்கினோம். தூரத்தே வெளிச்சம் மங்கலாகத் தெரிய ஆரம்பித்து, பிரகாசமாகிக் கொண்டே வந்தது. படகின் வேகம் குறைந்து வந்தது. கரையைக் கண்டதும் காயத்திரியின் முகம் மலர்ந்ததை அவதானிக்க முடிந்தது. அவள் மட்டுமா... என் மனதிலும் ஒரு பெரு நிம்மதி. கடற்போராளிகளுக்கு மனதில் நன்றி சொன்னேன்.

காயத்திரி அம்மாளாச்சிக்கு நன்றி சொல்லியபடி வள்ளத்தை விட்டு இறங்கினாள். கடல் காற்றின் குளிர்மை இப்போது தெரிந்தது. உடல் நடுக்கம் எடுத்தது. இனி கிளாலியிலிருந்து எமது ஊரான் கரணவாய்க்கு தரைவழியாகப் பயணிக்க வேண்டும்.

நான் மோட்டார் சைக்கிள்காரனிடம் சென்றேன். கரையில் சில போராளிகள் முதியவர்களுக்கு உதவி புரிந்தபடி நின்றனர். சுறுசுறுப்பாக இயங்கும் பெண் போராளிகளைப் பார்த்தும் பெருமிதமாக இருந்தது. இண்டைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்புவரை அடுப்படியிலை. அடைப்பட்டுக் கிடந்த பெண்கள், இப்ப எவ்வளவு முன்னேறிவிட்டார்கள். உண்மையான

பெண்விடுதலை எங்கட தாயகத்தில தான் உருவாகி வருகிறது என எண்ணிப் பெருமிதமடைந்தேன்.

மேடும் பள்ளமும் விழுந்து எழும்பி மோட்டார் சைக்கிள் விரைந்தது. வன்னேரியில் பழக்கப்பட்டதுதான்.

"வெளிக்கிடுவமே ஐயா?" என்றான் மோட்டார் சைக்கிள் சாரதி. புறப்பட்டோம். கண்டி றோட்டிலையிருந்து பிரிந்து பருத்தித்துறை றோட்டில் இறங்கினோம். இந்த றோட்டைப் பார்க்கிற போதெல்லாம் தட்டிவான்தான் நினைவுக்கு வரும். எத்தனை வருசத்துச் சாமான்... இப்பவும் என்ன மாதிரி ஓடுது. "வெள்ளைக்காரன்ர சாமான் தான்" என்பார் அப்பா. இப்ப அமெரிக்காக்காரன் யப்பானோட சேர்ந்து ஓரம் கட்டிப் போட்டான். உலகமயமாதல் என்ற போர்வையில் அவன் சுரண்டுறான், ஏன், எங்கட யுத்தம் கூட அவனுடைய ஆயுத விற்பனைத் தந்திரம் தானே...? ஓ.. இந்த யுத்தம் எல்லாரையும் கூடுகலைச்சுப் போட்டுது.

பொழுது நல்லாய் விடிஞ்சிட்டுது. சுட்டிபுரக்கோயில். மோட்டார் சைக்கிளை தம்பி நிறுத்துகிறான். "அம்மாளாச்சி, ஒரு மாதிரிக் காப்பாற்றிக் கொண்டு வந்து சேர்த்திட்டாய்" என்றபடி இறங்கிய காயத்திரி கோயிலுக்குச் சென்றாள்.

சுட்டிபுரம் திருவிழா எண்டால் காசைக் கரியாக்குவங்கள். வீதியெல்லாம் ஏழெட்டுச் சிகரம், சோடனை, தண்டிகை, சப்பறம், நாலு வீதியிலையும் இரவிரவாக நிகழ்ச்சிகள் நடக்கும். தட்சணா மூர்த்தியிலையிலிருந்து இந்தியா காரைக்குறிஞ்சி அருணாசலம், சின்ன மௌலானா, சீர்காழி

கோவிந்தராஜன் என்று பல தரப்பட்ட கலைஞர்கள் வந்து போவார்கள். சின்ன மேளம், சதிர்க் கச்சேரி, வில்லுப்பாட்டு, இசைக் கச்சேரி எண்டு அளவுக்கு மிஞ்சிச் செலவழிப்பார்கள். கடன்பட்டெண்டாலும் போட்டிக்குத் திருவிழா செய்வினம். அம்மாவின்ர மடியிலை இருந்து சீர்காழி கோவிந்தராஜனின் கச்சேரிக்கு வந்து இரவிரவாய் நித்திரை கொண்டது இப்பவும் நினைவுக்கு வருகுது. அப்பாவுக்குச் சீர்காழி என்றால் உயிர். அம்மாவோ சௌந்தரராஜன் ரசிகை. என்னைப் போலவே அவையன் இரண்டு பேருக்கும் சங்கீத ஞானம் பூஜ்ஜியம்.

மீண்டும் பயணம் தொடர்கிறது. அதே குலுக்கல். என்ன மாதிரிக் கெட்டித்தனமாக ஓடுறான். இரவிரவாக ஓடினால்தான் பகலில் அடுப்பு புகையும். இந்த யுத்தம் எல்லோரையும் ஏழையாக்கிப் போட்டுது. வெளிநாட்டுக்குப் போனவை காசனுப்பாட்டில் எல்லாரின்ர பாடும் அம்போதான். றோட்டு நல்லாய் பழுதாய்ப் போச்சு. இருபது வருசத்துக்கு முந்தி ஊத்தின தார், பொருக்காக தெட்டம் தெட்டமாக கண்ணில படுகுது. மற்றும்படி கல்லு றோட்டு தான்.

''நெல்லியடிக்குப் போக வேண்டாம் தம்பி. உதிலைவாற உப்பு றோட்டுப் பக்கமாகத் திரும்பிப் போவம்'' என்றேன். ''கொஞ்சத்தூரம் றோட்டு அறவே சரியில்லை. யாக்கரு சந்திக்கு அங்கால கொழும்பு றோட்டு மாதிரி, இந்தியன் ஆமிபோட்ட றோட். வல்லைச் சந்தி வரைக்கும் போட்டிருக்கிறான்.'' என்றான் சாரதி.

உப்பு றோட்டு வெறிச்சோடிப்போய்க் கிடக்கு. அந்த நாளையில் ஒரே சனம் நல்ல பம்பல். அலம்பல்

வண்டில், எருவண்டில், குழை வண்டில் எண்டு ஒரே வண்டில் போகும். சின்ன வயதில் அம்மா களை பிடுங்க கப்பூது வயலுக்குப் போறபோது ஒருக்கா கூட்டிப் போனவா. மாரியிலை றோட்டுக்கு அங்கால முழங்காலுக்கு மேல தண்ணி நிக்கும். முந்தி கரணவாயில உப்புமால் இருந்ததெண்டு அப்பா சொல்லுவார். இப்பவும் தண்ணி வத்திலை போற போது உப்பு விளையும் பூநகரிப் பக்கத்தில விளையுற மாதிரி...

அம்மா உப்புச் சுமந்து வந்து வித்திருக்கிறா. வலு பிரயாசை. அவை இப்படிக் கஷ்டப்படாட்டில் நாங்கள் இப்படி முன்னுக்கு வந்திருக்க மாட்டம். அம்மாவை நினைக்க அழுகையழுகையாக வருகிறது. ஆஸ்பத்திரியில்தான் இருப்பாவோ? இல்லாட்டில் துண்டு வெட்டி வந்திருப்பாவோ? இல்லாட்டில் ஏதும் அவலமாய்... அதற்கு மேல் நினைத்துப் பார்க்க முடியவில்லை. போராளியள் சொல்லுற மாதிரி எல்லோருக்கும் எப்பவோ ஒரு நாளைக்குச் சாவு வாறதுதான். ஆனால், பாசம் எல்லோரையும் கலங்க வைத்து விடும். அதிலும் தாய் என்றால் யாரால்தான் தாங்க முடியும்? தனது உதிரத்தைப் பாலாக்கி அன்பு பொழிந்து எம்மை வளர்த்த தெய்வமல்லவா?

பயணம் தொடர்கிறது. றோட்டின் வலப்பக்கமாக இரண்டு சுடலை இருக்கிறது. முதலாவது சுடலையை நெருங்குகிறோம். அந்த நாளையில் பேய், பிசாசு, முனி எல்லாம் இந்தச் சுடலைப் பிரதேசத்தில் இரவில் உலாவும் எண்டு ஆச்சி சொல்லுறவ. இப்ப பகுத்தறிவு வளர்ந்ததால பேய் பிசாசெல்லாம் இல்லாமல் போட்டுது. ஆனால் புதிய பேய்களும், முனிகளும், பிசாசுகளும் எங்கட

உயிர்களைக் குடிக்க அலைஞ்சு திரியுது. அந்நாளிலையும் அப்படித்தான் சாதிப் பேயள் உலாவியிருக்கும். எங்கட தாத்தாவை முனியடிச்சுத்தான் செத்ததாக ஆச்சி கூறுவா. முன்னேறித் தலையெடுத்து வந்த தாத்தாவைக் கொன்றது சாதிவெறி பிடிச்ச முனிதான் எண்டு அப்பா சொல்லுவார். அந்த முனியடிச்சதிலை அப்பா பிறக்கும்போதே தகப்பன் தின்னியாகப் பிறந்தார்.

சாந்தா, எங்கட தங்கச்சி, இப்ப கனடாவில இருக்கிறாள். அவளின்ர பிள்ளையும் வயித்தில இருக்கிற போது காங்கேசன்துறை சீமெந்து பக்ரறியில துவக்கு முனி அடிச்சுத்தான் அத்தான் செத்தவர்... இப்படி எத்தனை எத்தனை உயிர்களை வீட்டிலும், தெருவிலும், களத்திலுமாக இழந்திட்டம். இழந்துகொண்டு இருக்கிறம்.

சோனப்பு சுடலையில் ஒண்டு எரிந்து முடியும் நிலையில் நீறுபூத்த நெருப்பாக இருந்தது. எங்கட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மாதிரி. இன்னும் கொஞ்ச தூரம் போனால் எங்களது கிராய்ச் சுடலை வரும். நாங்கள் அதற்கு முன்னர் வெல்லன் பிள்ளையார் கோயில் பின் வீதியாலதான் திரும்ப வேண்டும். திக்குக் கூறினேன். நாம் திரும்பிய போது அதிகாலைப் பூசைக்கான ஆலயமணி அடிக்கிறது. சிறுபான்மைச் சாதியினரை விடக்கூடாது என்பதற்காக, எல்லோரும் வெளியே நின்று கும்பிட்டு சமத்துவம் கண்ட புதுமையான கோயில். எப்பவும் கதவு மூடியபடிதான். இப்ப எப்படியோ? பூசை நேரங்களில் கதவு திறந்தாலும் உள்ளே யாரும் போக முடியாது.

கோயிலின் பின் தெருவில் ஊரிப்பாதையில் மெதுவே செல்கிறோம். இன்னும் கொஞ்சதூரம் தான்.

வேதக்கோயிலுக்கு முன் ஒழுங்கையால் திரும்ப வேண்டும். ஒரு பக்கம் உச்சில் வயல் வெளியும், தொலைவில் அம்மன் கோயிலும் தெரிகிறது. றோட்டின் இடப்பக்கம் ஒரு குளம். எதிர்ப்பக்கம் ஒரு கோயில். அங்கேயும் எமது கடவுள்தான் இருக்கிறார். எனினும் சிறுபான்மையினர் மட்டும்தான் போவார்கள். எனக்குச் சிரிப்பு வருகிறது. இதோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அந்த வேதக் கோயில் பரவாயில்லை. அங்கு யாரும் வழிபடலாம். சாதி பேதங்கள் எதுவும் ஆலயத்தில் பார்க்கப்படுவதில்லை. ஒருமுறை அப்பா இது பற்றி என்னோடு கதைத்திருக்கிறார். இந்து சமயத்தவர் சாதி பேதம் பார்ப்பதானாலும், சமூகப்பணிகளில் ஈடுபடாமையும் தான் எமது மதத்திலிருப்பவர்கள், மதம் மாறிச் செல்வதற்கான முக்கிய காரணம் எனச் சொல்லியிருக்கிறார். அம்மாவும் அப்பாவும் அதிகம் படித்தவர்களல்ல. ஆனால் அவர்கள் எமக்குப் படிப்பித்த பாடங்கள் எண்ணிலடங்கா. நான் ஓரளவுக்காவது மனித நேயம் மிக்க ஒருவனாக இருப்பதற்கு அவர்கள்தான் காரணம்.

மோட்டார் சைக்கிள் உச்சிலம்மன் கோயில் பின் வீதியால் திரும்பி எமது வீடிருக்கும் வீனஸ் வீதிக்குச் செல்லும்போது காயத்திரி, "அம்மாளாச்சி" என்று கையெடுத்துக் கும்பிட்டாள். "போய்க் குளிச்சிட்டு உடன் கோயிலுக்கு வரவேணும்..." என்றாள். வீடு வந்து விட்டது. இறங்கி உள்ளே சென்றோம்.

"ஐயோ ராசா அம்மா எங்களை விட்டுட்டுப் போயிட்டா..." எண்டு பெரியம்மா கதறிக்கொண்டு வந்தா. அம்மா செத்துப் பத்து நாளாச்சாம். வைச்சிருந்து

பார்த்திட்டு மூன்று நாளைக்கு முந்திதான் எடுத்தவையாம். என்னால் தாங்க முடியவில்லை. காயத்திரியையும், அப்பாவையும் கட்டிக் கொண்டு பெருங்குரலெடுத்து அழுதேன். எல்லோரும் வந்து ஆறுதல் சொல்லிச்சினம். என்னாலை தாங்க முடியவில்லை. கடைசி நேரத்தில நான் பக்கத்தில் இல்லாம போயிட்டேனே.


"அம்மா எப்ப செத்தவா?" குரல் தழுதழுக்கக் கேட்டேன்.

"ஐந்தாம் திகதி, வெள்ளிக்கிழமை பின்னேரம் ஐந்தரை மணிக்கு..." என்று அப்பா சொன்னபோது என் மனதில் ஒரு மின்னல் தோன்றியது. அண்டைக்கு அதே நேரம் தானே முதியோரில்ல வள்ளியம்மைப் பாட்டியும் செத்தவ. "மகனே... மகனே" எண்டு என்ரை கையைப் பிடிச்சுக் கொண்டு கண்களை மூடிய காட்சி மனதில் திரையோடியது.

"அம்மா... அம்மா... நீங்கள் என்னை கண்டுதான் செத்திருக்கிறியள். வள்ளியம்மைப் பாட்டிக்கு நான், வைச்ச கொள்ளி உங்களுக்கு வைச்ச கொள்ளி தானம்மா..." நான் குலுங்கிக் குலுங்கி அழுதேன்.

(இலண்டன் பூபாளராகங்கள் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதை)

- *தினக்குரல் (2007)*





# இவரைப் பற்றி...

நாசயுத்தச் சூழ்நிலையில் வன்னிப் பிரதேசத்தில் தங்கியிருந்து அங்கு நோயால் வாடித் தவித்த மக்களுக்கு வைத்திய உதவிகளைத் தொடர்ந்து புரிந்தவர், டாக்டர் ச. முருகானந்தன். இந்த மானுடத் துன்பங்கள் இவரது எழுத்து வாழ்க்கையைப் பாதித்தன. பண்படுத்தி உதவின.

மருத்துவராக இருந்து கொண்டே மக்கள் உடல் நலனில் அக்கறை செலுத்தி வந்ததுடன் அவர்களது ஆத்மாத்திக உணர்வுகளை நேரடியாக கற்றுத் தேர்ந்து, அவர்களைத் தனது படைப்புகளின் கருப் பொருளாகவும் கொண்டு, சிருஷ்டிகளை உருவாக்கித் தந்தவர்.

இன்று இந்த நாட்டில் அதிகம் அதிகமாக எழுதி வரும் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவரது ஐந்தாவது சிறுகதைத் தொகுதியாகும்.

நடராஜா தரணிதரன்